
பக்கங்கள்-16 | 16.தை.2022 | விலை–40.00




# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –368

## குடும்ப அரசியலும் இனவாத சிந்தனையும்






## தமிழ் மக்களுக்கான தீர்வை இந்தியா பெற்றுத்தருமா?





## இலங்கை தீவு இந்தியா, அமெரிக்கா, சீனாவின் கைப்பொம்மையா?



## கேள்விக்குறியாக மாறும் நாட்டின் விவசாயம்!

# குடும்ப அரசியலும் இனவாத சிந்தனையும்

அரசியல் என்பது சாக்கடை என்று கூறுவது ஒரு முதுமொழி. அந்த சாக்கடைக்குள்ளும் புத்துயிர் பெற்று இனவாத மதவாத விடுதலை அரசியலுக்காய் குரல் கொடுப்பவர்களும் அரசியலில் உண்டு. 30 ஆண்டுகள் தமிழ் மக்களுடைய பிரச்சனை தீர்க்கப்படாத ஒரு நிலைமை காணப்படுகின்றது. தற்போதைய நவீன யுகத்தில் இலங்கையில் வாழுகின்ற சிறுபான்மை மக்களுக்கு தீர்வை பெற்றுக்கொள்வதற்கு தற்பொழுது இருக்கின்ற அரசியல் கட்சிகள் என்ன செய்ய வேண்டும் என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். அரச இயந்திரமானது இலங்கை சுதந்திரமடைந்து 73 வருடங்களை அண்மித்துள்ள நிலையில் சிறுபான்மை மக்களுக்கான சுதந்திரம் இன்னமும் வழங்கப்படவில்லை என்றால் தொடர்ந்து வந்த அரசாங்கத்தின் தலைவர்கள் இனவாதத்தையும் மதவாதத்தையும் எம் மீது விதைத்துள்ளார்கள் என்பதே இன்றைய யதார்த்தம். 10 ஜனவரி 1974 இல் தமிழர் ஆராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் அறிஞர்கள் இந்த நாட்டிற்கு ஒரு செய்தியை சொல்லிவிட்டு சென்றன. அதன் தொடர்ச்சியாக தமிழ் என்ற ஒரு நாமம் வடகிழக்கில் மட்டுமன்றி எப்பாகத்திலும் தலை நிமிரக்கூடாது என்பதில் அவர்கள் அன்றிலிருந்தே செயற்பட்டார்கள். தமிழர் ஆராய்ச்சி மாநாட்டில் 9 பேர் பொலிஸாரினால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.



வேலுப்பிள்ளை கேசவராஜன் வயது 15, பரஞ்சோதி சரவணபவன் வயது 26, வைத்தியநாதன் ஜோகநாதன் வயது 32, ஜோன் பிடலிஸ் சிக்மரிங்கம் வயது 53, குலேந்திரன் அருளப்பு வயது 53, இராசதுரை சிவானந்தம் வயது 21, ராஜன் தேவரட்ணம் வயது 26, சின்னத்துரை பொன்னுத்துரை வயது 56, சின்னத்தம்பி நந்தகுமார் வயது 14 என்பவர்கள் கொல்லப்பட்டதன் மூல காரணத்திற்கு சூத்திரதாரியாக செயற்பட்டவர் சிறிமாவோ பண்டாரநாயக்க. ஒவ்வொரு ஆட்சியாளர்களும் தாம் ஆட்சியில் சளைத்தவர்கள் அல்ல என்பதனை காட்டுவதற்கு சான்றாக 1983 யூலை கலவரம், 1990 களில் படுகொலை, 2000 தொடக்கம் 2009 வரை தமிழினப்படுகொலைகள் என அடுக்கிக்கொண்டே செல்லலாம்.

தற்போதைய சூழலில் ஒரு மாற்றம் நிலவவேண்டும் என்பதே அனைவரதும் நிலைப்பாடு. எமது உரிமைக்கான போராட்டம் ஆயுத போராட்டம் மௌனிக்கப்பட்ட நிலையில் எவ்வாறு கொண்டுசெல்வது பற்றி தமிழ் தரப்பு சிந்திக்க வேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது. குறிப்பாக தமிழ் அரசியல் தலைமைகள் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கின்ற அரசியலை செய்வதனால் தமிழ் மக்களுக்கான தீர்வு திட்டம் தொடர்பில் மறைமுகமான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத சூழல் உருவாகியுள்ளது.

ஈழப்போரின் இறுதிக்கட்டத்திற்கு முன்னர் 2000 ஆண்டிலிருந்து 2005 வரை ஒரு இடைக்கால நிர்வாகம் இந்த நாட்டில் அரசாங்கத்தினால் நோர்வே மத்தியஸ்துடன் நிறுவப்பட்டது. வடக்கிலும் கிழக்கிலும் தமிழீழ விடுதலைப்புலிகள் தமது இடைக்கால நிர்வாகத்தை அமுல்படுத்தி சர்வதேச ரீதியாக ஒரு இடத்தை பிடித்து தனி இராஜ்ஜியம் ஒன்றை நிறுவி விடுவார்கள் என்ற காரணத்தினாலும் இந்தியாவிற்கும் ஏனைய நாடுகளுக்கும் அது ஒரு அச்சுறுத்தலாக அமையும் என்ற காரணத்தினாலும் பிரபாகரனுடைய தலைமையில் போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவரவேண்டும் என்று அரசாங்கம் ஏனைய நாடுகளுடன் இணைந்து திடசங்கற்பம் பூண்டது. இதில் இந்தியா அமெரிக்கா சீனா உட்பட 35 நாடுகள் ஆதரவாக செயற்பட்டது. ஈழப்போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதன் பின்னர் வடகிழக்கு தமிழர் தாயகம் என்ற நிலைப்பாடு முற்றாக மாற்றம் பெற்றது. அரசாங்கம் சரணடைந்த விடுதலைப்புலிகளுக்கு புனர்வாழ் அழித்து 11 ஆயிரம்பேரை விடுவித்திருந்தநிலையில் அதில் ஒருசிலரை தமது புலனாய்வு தேவைக்காக பயன்படுத்திக்கொண்டது. அதில் குறிப்பாக கருணா அம்மான், பிள்ளையான், கே.பி என்று அழைக்கப்படும் குமரன் பத்மநாதன் ஆகியோர் தற்பொழுதும் அரச கைக்கூலிகளாக செயற்பட்டுவருவது என்பது தொடர்ந்தும் எமது அரசியல் முன்னெடுப்புக்களை கொண்டு செல்ல முடியாத நிலைமையே ஏற்பட்டுள்ளது.

மாற்று வழியை கையாளுகின்றோம் எனக் கூறி சுவரம் போகின்ற அரசியலை செய்து வருவது என்பது வேடிக்கைக்குரிய விடயமாகும். தற்பொழுது சீனாவுடன் கைகோர்த்து கொண்டு இருக்கும் இலங்கை அரசு அந்த நாட்டை முழுமையாக நம்பி ஆட்சியை தக்கவைத்துக் கொள்ளலாம் என்று கனவு காண்கின்றது. குடும்ப அரசியலை இலக்காகக்கொண்டு பௌத்த இனவாதத்தை கட்டவிழ்த்துவிட்டிருக்கும் இலங்கை அரசு ஒரே நாடு ஒரே சட்டம் என்ற செயலணியையும் கலகொட ஞானசார தேரர் மூலமும் உருவாக்கியுள்ளது. ஏற்கனவே கலகொட ஞானசார தேரர் என்பது ஒரு மதவாத இனவாத அரசியலை இந்த நாட்டுக்குள் கட்டவிழ்த்து விட்டிருந்த முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளை கட்டவிழ்த்துவிட்டு 42 இடங்களில் வன்முறைகளை தோற்றுவித்தவர். இதில் பள்ளிவாசல்களும் உடைக்கப்பட்டிருந்தன. அரசியல் மாற்றத்தை கொண்டுவரவேண்டும் என்பதற்காக கோட்டபாய ராஜபக்ஸ அவர்கள் இந்த நாட்டில் மறைமுகமாக இராணுவ ஆட்சியை கட்டவிழ்த்துவிட்டிருக்கின்றார். இதனால் இலங்கை ஒரு சுதந்திரமான ஜனநாயக நாடு என்று பெயர்பெற்றிருக்கும் அதே நேரம் ஜனநாயகம் மீறப்பட்டு காணப்படுகின்றமை சர்வதேச நாடுகளின் எதிர்ப்பை சம்பாதிக்கின்ற ஒரு விடயமாகவே இதனைக் காணமுடிகின்றது.

போருக்கு பின்னர் மக்கள் சுதந்திரமாக இருக்கின்றார்கள் என கூறும் அரசு தமது குடும்ப அரசியலை பயன்படுத்தி நாளுக்கு நாள் அமைச்சரவையில் மாற்றம், இராணுவ கட்டமைப்பில் பொலிஸ் பிரிவில் மாற்றம், நிர்வாக ரீதியான மாற்றங்கள் அனைத்தையும் திடீர் திடீரென இவ் அரசு முன்னெடுக்கின்றது. இரகசிய சந்திப்புக்களை ஏற்படுத்தி இந்த நாட்டில் தொடர்ந்தும் ஒரு வன்முறையை கட்டவிழ்த்துவிடவேண்டும் என்ற எண்ணப்பாட்டில் செயற்படுவதாகவே ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்த நிலைமை தொடருமானால் சர்வதேச ரீதியாக இலங்கை அரசுக்கு கிடைக்கப்பெறும் சலுகைகள் தவிர்க்கப்படும். தொடர்ந்தும் இலங்கை அரசிற்கு ஆதரவு வழங்கிக்கொண்டிருக்கும் தமிழ் தரப்பு எமது இலங்கைக்கான தீர்வு திட்டம் தொடர்பில் சரியான தீர்வை எடுக்க வேண்டுமாயின் என்ன செய்ய வேண்டும் என்று பார்த்தால் தாயகம் தேசியம் சுயநிர்ணய உரிமை என்பது தமிழீழ விடுதலைப்புலிகளின் இலக்காக இருந்தது.

அந்த இலக்கு தற்பொழுது மாற்றமடைந்து ஆயுத போராட்டத்தை முன்னெடுக்கமுடியாத ஒரு சூழலை உருவாக்கப்பட்ட நிலையில் தாயகம் என்ற கோட்பாட்டை தவிர்த்து பார்த்தாலும் கூட தேசியம் சுயநிர்ணய உரிமை என்ற இரண்டு விடயங்களாவது எமது சுதந்திரத்தை நாம் பேணிப்பாதுகாத்துக்கொள்வதற்கான நடவடிக்கையாவது நாம் மேற்கொள்ள வேண்டும். அந்த வகையில் அபிவிருத்தி என்று கூறி மக்களை ஏமாற்றுகின்ற அரசியலை தமிழ் தரப்பு நிறுத்த வேண்டும். இலங்கை திருநாட்டில் ஒரு அமைச்சர் அந்தஸ்தில் இருக்கும் ஒருவர் அந்த நாட்டு மக்களுக்கான அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ள வேண்டியது இன்றியமையாதது ஒன்றாகும். செய்ய வேண்டியது அவருடைய கடமை அதற்காகத்தான் மக்கள் அவரை தெரிவு செய்தார்கள். இதனூடாக சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்க முடியும் என்றால் அது இயலாத காரியம். அரசாங்கம் எமக்கு எதிராக செயற்படுகின்றது என்று தெரிந்தும் அவ் அரசாங்கத்திற்கு தொடர்ந்தும் ஆதரவளிப்போமாக இருந்தால் அதனைப் போன்ற முட்டாள்தனம் உலகில் எதுவுமில்லை. மீண்டுமொரு ஆயுத போராட்டம் என்பது சாத்தியமில்லை என்றும் கூறிவிடமுடியாது.

அரசியல் காலவோட்டத்தில் பூகோள அரசியல் மாற்றங்களில் நவீன மயப்படுத்தப்பட்ட யுத்தத்தை இந்த நாட்டில் மேற்கொள்ள முடியும். இன்று கண்டம் விட்டு கண்டம் பாய்கின்ற ஏவுகணைகள் பெரும்பாலும் அனைத்து நாடுகளிலும் இருக்கின்றன. ஆகவே அபிவிருத்தி என்பதும் சுயநிர்ணய உரிமைக்கான விடுதலை அரசியல் போர் என்பதும் சம வலுவாக சென்றால் மட்டுமே எமது உரிமைகளை வென்றெடுக்க முடியும். தொடர்ந்தும் ஒட்டு ண்ணிகளாக செயற்பட்டு வருவதால் தமக்கான சலுகைகளை மட்டுமே பெற்றுக்கொள்ள முடியுமே தவிர வேறு எதனையும் இந்த அரசியல் பரப்பில் சாதிக்க முடியாது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களும் இன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து ஒருகோட்டில் பயணித்தால் மட்டுமே இனவாத அரசிற்கு எதிராக வெற்றியிலக்கை கண்டுகொள்ள முடியும். ஆட்சி மாற்றத்தினால் வெற்றி கிடைக்கும் என்பது பகல் கனவு. காரணம் என்னவென்றால் கடந்த ஆட்சிக்காலத்தில் ஆட்சியாளர்கள் எம்மீது கட்டவிழ்த்துவிட்ட இன வன்முறைகள் சான்று பகர்கின்றன. மரபுவழி போராட்டமானது ஒரு தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமையை அமைப்பதற்கு சாதகமாக விடுதலைப்புலிகளை பயன்படுத்திக்கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டும் இருக்கத்தான் செய்கின்றது. இருந்தாலும் 30 வருட காலங்கள் தொடர்ந்தும் தமிழீழ விடுதலைப்புலிகள் வடகிழக்கை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

3 தசாப்தம் ஒரு போராட்ட வரலாற்றை கொண்டு செல்வது என்பது பாரிய சிக்கலான விடயமே. பணப்பிளக்கத்தை இந்த நாட்டில் அரசாங்கம் கூடுதலாக விரும்பாமைக்கு காரணம் என்னவென்றால் டயஸ்போராக்களின் மூலம் பணங்கள் இந் நாட்டிற்கு கொண்டுவரப்பட்டு மறைமுகமான ஆயுத போராட்டத்திற்கான வழிவகைகளை ஏற்படுத்தக்கூடும் என்ற விடயங்களை தன்னிறைவு கொண்ட ஒரு நாடாக இலங்கை மாறவேண்டும் என்று அரசியல் தலைமைகள் கனவு கண்டாலும் மகிந்த தலைமையிலான குடும்ப அரசியல் இருக்கும் வரையிலும் அதுபோன்று செயற்பட்ட முன்னாள் ஆட்சியாளர்களுடைய நிலைப்பாடும் இன்றுமே தமிழ் மக்களுக்கான தீர்வு எட்டாக்கனியாகவே இன்றுவரை அமைந்துள்ளது. செயல்வடிவம் கொடுக்கும் செயல்திறனுடைய விடயங்களை நாம் எமது தமிழ் இனத்திற்கு செயற்படுத்துவதன் ஊடாக இந்த நாட்டில் எமக்கான விடுதலையை பெற்றுக்கொள்ள முடியும் என்று அன்றிலிருந்து இன்றுவரை மதவாத இனவாத அரசியல் எமக்கு கற்றுத்தந்த பாடங்களாகும். எனவே தமிழ் அரசியல் தலைமைகள் சிந்தித்து செயற்படுவது இன்றைய காலத்தின் தேவையாகும்.

**இரணியன்**

தினப்புயல்
ஆசிரியர் பீடம்
இல:154, 6வது ஒழுங்கை
தேக்கவத்தை,
வவுனியா.

## கொவிட் தொடக்கம் ப்ளுரோனா (flurona) வரை...

உலகம் முழுவதும் 30 கோடிக்கும் அதிகமானோரை கொரோனா வைரஸ் பாதித்துள்ளது. கொரோனாவின் உருமாறிய டெல்டா, ஒமிக்ரோன் வைரஸ் ஆகியவையும் மக்களிடையே கடுமையாக பரவி வருகின்றன. இக் கொரோனா பரவலை கட்டுப்படுத்த அனைத்து நாடுகளும் 2 தவணை தடுப்பூசிகளை செலுத்தி வருகின்றன. மூன்றாவதாக பூஸ்டர் தடுப்பூசிகளைச் செலுத்தும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், புதிதாக ப்ளுரோனா என்கிற வைரஸ் பரவ ஆரம்பித்துள்ளது. கொவிட் வைரசின் திரிபான ஒமிக்ரோன் ஐரோப்பிய நாடுகளை வெகுவாகப் பாதித்துள்ளது. அடுத்த 6 முதல் 8 வாரங்களுக்குள் ஐரோப்பாவில் மக்கள் தொகையில் பாதி பேர் ஒமிக்ரோன் வைரசால் பாதிக்கப்படுவார்கள். இந்த ஆண்டின் முதல் வாரத்தில் ஐரோப்பா முழுவதும் 70 லட்சம் பேருக்கு தொற்று ஏற்பட்டதன் அடிப்படையில் இந்த கணிப்பு செய்யப்பட்டுள்ளது. 2021ம் ஆண்டின் கடைசி வரை அனைத்து நாடுகளும் டெல்டா வகை வைரசை சமாளித்துக்கொண்டிருந்தன. தற்போது அதைவிட ஒமிக்ரோன் பரவும் வேகம் அதிகமாக இருக்கிறது என்கிறது உலக சுகாதார நிறுவனம்.

இதேவேளை அபிவிருத்தியடைந்த நாடுகளை விட அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் இத் தொற்றுக்களின் காரணமாக பொருளாதார ரீதியாக கடும் நெருக்கடியைச் சந்தித்துள்ளன. அத்துடன் விலையேற்றங்களால் மக்கள் அவதியுறும் நிலைக்கு வந்துள்ளனர். குறித்த நாடுகளில் அரசியல் ஸ்திரத்தன்மையும் நிலவ ஆரம்பித்துள்ளது. அரசியல் கட்சிகளுக்குள் குழப்பங்கள் ஏற்பட்டு வருவதையும் காணக் கூடியதாகவுள்ளது. குறித்த நாடுகள் அபிவிருத்தியடைந்த நாடுகளிடமிருந்து மேலும் மேலும் கடன்களை வாங்கிக் குவிக்கும் துர்ப்பாக்கிய நிலையினைக் காண்கிறோம். உற்பத்திகளில் வீழ்ச்சி ஏற்பட்டு, செய்வதறியாது அரசுகள் விழிபிதுங்கி நிற்கின்றன.

4 மாதங்களுக்கு ஒருமுறை தொடர்ந்து பூஸ்டர் தடுப்பூசி செலுத்துவது மக்களின் நோய் எதிர்ப்பு சக்தியை பலவீனப்படுத்திவிடும் மற்றும் மக்களை சோர்வடைய வைத்துவிடும். இதனால் பூஸ்டர் தடுப்பூசி செலுத்தும் நாடுகள் இடைவெளிவிட்டு தடுப்பூசி செலுத்த வேண்டும். குறிப்பாக குளிர்காலத்தில் தடுப்பூசி செலுத்துவது பலனைத் தரும். பேக்ஸ்லோவிட் மற்றும் ரெமிடெஸ்விர் ஆகிய மருந்துகள் ஒமிக்ரோனுக்கு எதிராக சிறப்பாக செயல்படுகிறது. உருமாறிய கொரோனா வைரஸ்களை எதிர்கொள்ளும் புதிய தடுப்பூசிகளை தயாரிக்கும் பணிகளும் நடைபெற்று வருகிறது என்கிறது ஐரோப்பிய மருந்துகள் நிறுவனம்.

தொடர்ச்சியாக இனங்காணப்பட்டுவரும் கொவிட் வைரசின் திரிபுகளால் இவ்வுலகம் தடுமாறிவரும் நிலையில், பல நாடுகளின் சுகாதாரக் கட்டமைப்புக்களும் வலுவிழந்துவரும் நிலையில், அரசுகளின் செயற்பாடுகள் குறித்து மக்கள் அதிருப்தியடைந்துள்ள நிலையில், ஆபிரிக்க நாடுகள் கொவிட் வைரஸ் பரவலைக் கடந்து பட்டினிச் சாவினை எதிர்நோக்குகின்றன. இந்த அசாதாரணமான சூழ்நிலையில் குறிப்பாக அபிவிருத்தியடைந்துவரும், அபிவிருத்தியடையாத நாடுகள், அபிவிருத்தியடைந்த நாடுகளை விட கடுமையான நெருக்கடிக்கு முகங்கொடுக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. உருமாறிப் பரவிவரும் திரிபுகள் குறித்து இனிவரும் காலங்களில் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்படுவதுடன் மக்களது நலன்கள் குறித்தும் பொறுப்புவாய்ந்தவர்கள் என்கிற ரீதியில் அரசுகள் சிந்திக்கவேண்டும்.

173

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்

ஆனாலும் எண்ணிக்கையில் மிகக்குறைந்த குழுக்கள் கண்டு கொள்ளப்படுகின்ற சமயங்களில் அவை செறிவான தாக்குதல்களிலிருந்து மிக இலகுவாகத் தப்பித்துக்கொள்கின்றன. முற்றுகைக்கு வசதியான இடத்திற்கு அவர்களைக் கவர்ந்திழுப்பதற்காக இராணுவத் தந்திரோபாயத்தின் வெவ்வேறு உத்திகளைப் பயன்படுத்த வேண்டியநிலையேற்பட்டது. இது சாத்தியமானபோது போரின் முடிவு முன்னரேயே தீர்மானிக்கப்பட்ட மாதிரியாக இருந்தது.

கெரில்லாக்களுக் கெதிராக இராணுவ நடவடிக்கையோடு மாத்திரம் மட்டுப்படுத்தக்கூடா தென்பதைப் புரிந்து கொண்ட போதே கெரில்லாக்களுடனான போராட்டத்தில் குறித்தொரு திடீர் மாற்றம் அவதானிக்கப்பட்டது. உட்துறையமைச்சுப் படைகள் பிரதேசத் தற்காப்பை மேற்கொள்கின்ற கெரில்லாக்களுடன் போராட்டத்தை ஒழுங்குபடுத்துகின்ற சிறப்புப் பிரிவொன்றை உருவாக்கியது. இவ்வமைப்பு இரகசிய முகவர்களைத் தயார்ப்படுத்தியது. கெரில்லாக்களுக் கெதிரான பரப்புரையை மேற்கொண்டது. பொய்யான வதந்திகளைப் பரப்பியது, திட்டமிட்ட செயற்பாடுகளைக் கெரில்லாக்கள் மேற்கொள்வதற்காக வேண்டுமென்றே அவர்களை நிர்ப்பந்தித்தது. இவ்வாறான பலவற்றைச் செய்தல் ஆனால் குறிப்பாகப் பொய்யான கெரில்லாப் படைப்பிரிவுகளை உருவாக்கியமை கணிசமானளவு இராணுவ, அரசியல், சமூக உளவியல் விளைவைத் தந்தது. சிறப்பாகத் தயார்ப்படுத்தப்பட்ட உட்துறையமைச்சின் படைப்பிரிவுகளே அவையாக இருந்தன.

பிரதேச மக்களின் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் அவர்கள் முற்றிலுமாகச் சோவியத் எதிர்ப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டர். இதன் பின்னர், அவர்கள் ஆயுத மறைமுகக் காரர்களுடனான தொடர்பு வழியைத்தேடினார்கள். இவ்வாறான திட்டம் அமுலாக்கப்பட்டமை அம்பலமாக்கப்பட்ட கெரில்லாக் குழுக்களிடம் உட்துறையமைச்சுப் படைகள் செல்வதற்கு உதவியதுடன், அவர்களுடன் தொடர்பை வைத்திருக்கின்ற பிரதேச மக்களையும் இனங்காண உதவியது. குறித்த இந்த முறை தமக்கு மிகவும் ஆபத்தானதெனக் கெரில்லாக்கள் கருதினர். ஏனெனில் இந்த முறையமைப்பு அவர்கள் மக்களில் இயற்கையாகத் தங்கியிருக்கின்ற விநியோகம், வேவு, தொடர்பு போன்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

சோவியத் அதிகாரத்தால் கூட்டுப் பண்ணையைப் பூரணப்படுத்தி முடித்த நிலைமை, கிராமத்தில் வருவாய்களைத் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்த நிலைமை ஆகியன ஏற்பட்டவுடன் கிளர்ச்சி அமைப்பின்மீது மிகவும் கொடூரமான அடிவிழுந்தது. இராணுவத் தோல்விகள், சாத்தியமற்ற போக்கில் சர்வதேச நிலைமைகள் வளர்ச்சியடைந்தமை, 1955 ஆம் ஆண்டின் பொதுமன்னிப்பு போன்றன யாவும் சேர்ந்து ஆயுதப் போராட்டத்தை நிறுத்த நிரப்பந்தித்தன. ஆயுதப் போராட்டம் மிகவும் பண்பட்ட எதிர்ப்பிற்குத் தனது இடத்தைக் கொடுத்து விலகிக்கொண்டது. இதனது கணிசமான வலிமை சோவியத் ரசியா பிளவுபட்ட பின்னர் மாத்திரமே பூரணமாக வெளிப்பட்டது.

பைலோரசியாவில்கிளர்ச்சியாளர்களு டனான போர் பைலோரசியாவில் கிளர்ச்சி அமைப்பின் தோற்றமும் இரண்டாம் உலகப் போருடன் தொடர்புபட்டதாகும். இங்கே, குடியரசின் மேற்கு மாநிலங்களின் நிலப்பரப்பை (செப்டெம்பர் 1939 ஆம் ஆண்டு வரை போலந்தின் பகுதியாக இருந்தவை) ஜேர்மனியர்கள் ஆக்கிரமிப்புச் செய்த காலத்தில், பிரதேசப் போலந்துக்காரர்களின் அமைப்புகள் உருவாகின. போலந்துச் சுதந்திரத்தின் மறுமலர்ச்சிக்காக அவர்கள் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். இந்தப் படைப்பிரிவுகள் பிரதேச இராணுவம் (ஏ.கே) என்றழைக்கப்பட்டவற்றின் படையணிகளாகக் கருதப்பட்டன.



அவை லண்டனிலிருந்து இயங்கிய புலம்பெயர் அரசாங்கத்திற்கு கீழ்ப்பட்டதாக இருந்தன. அத்துடன் இரு போரரங்கில் சமரையும் மேற்கொண்டன. பாசிச ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக அத்துடன் சோவியத் அதிகாரத்திற்கும் ஆயுதப்படைகளுக்கும் எதிராகவாகும். ஏ.கே படைப்பிரிவுகளின் முதுகெலும்பாக போலந்து இராணுவத்தின் முன்னைய அதிகாரிகளும் ,எநிலை அதிகாரிகளும் காவற்றுறையினரும் இராணுவக் காவற்றுறையினரும் இருந்தார்கள்.

1941 - 1944 ஆம் ஆண்டுகாலப் பகுதிகளில் ஏ.கே அமைப்புக்கள் சோவியத்திற்கெதிரான பரப்புரையை மேற்கொண்டன. மக்களைப் பயமுறுத்துகின்ற நடவடிக்கைளை மேற்கொண்டன. பயங்கரவாத நடவடிக்கைகளைக் கடைப்பிடித்தன. போக்குவரத்துப் பாதைகளில் நாசகார வேலைகள் புரிந்தன. செஞ்சேனையின் தேவைக்காகக் கொண்டுவரப்படுகின்ற உணவுப்பொருள் விநியோகத்தைத் தகர்த்தன. சோவியத் கெரில்லாக்களுடன் சமர் புரிந்தன.

பைலோரசியாவில் போருக்குப் பின்னான கிளர்ச்சியமைப்பு தனது முன்னைய போலந்திலிருந்து பெற்ற உதவியைத் தொடர்ச்சியாகப் பேணிக்கொண்டது. ஆகவேதான் ஏ.கே போராளிகள் எச்சந்தர்ப்பத்திலும் போலந்து இனத்தவர்களதும் கத்தோலிக்க மதத்தைக் கடைப்பிடித்த பைலோரசியாவின் ஒரு பகுதி மக்களதும் ஆதரவை மாத்திரமே பெறமுடிந்தது. குறிப்பாக இந்தச் சூழ்நிலையே பைலோரசியாவில் சோவியத்திற்கு எதிரான கெரில்லா அமைப்பு வளர்ச்சியடையாமைக்கும் மக்களிடத்தில் பெரியளவிலான ஆதரவைப் பெறாமைக்கும் பிரதான காரணமாக விளங்குகின்றது. இதன் விளைவாக இறுதியில் கெரில்லா அமைப்பு மறைந்து போனது.

### உக்ரேனியக் கெரில்லா அமைப்புடனான போர்

சோவியத்திற்கு எதிரான செயற்பாட்டு முறைகளில் மிகவும் ஒற்றுமை காண முடியாத அனுபவமுள்ள பண்பட்ட அமைப்பாக உக்ரேனியத் தேசியவாதிகளின் இராணுவ அரசியல் அமைப்பு (உ.தே.அ) விளங்கியது. இருபதாம் நூற்றுண்டின் இருபதுகளின் இறுதியிலேயே தோன்றிய இவ்வமைப்பு ஒரு இலக்கை மாத்திரமே பின்தொடர்ந்தது. எவ்வகைகளைக் கையாண்டாவது உக்ரேனியச் சுதந்திரத்தை உ.தே.அ இன் அடிப்படைவாதம் கூறுவது யாதெனில் கிட்டத்தட்ட 500 ஆண்டுகாலமாக உக்ரேனிய மேற்குப் பகுதி நிலங்கள் மாறிமாறிப் போலந்து, ஹக்கேரி, ஆஸ்திரியா, ஜேர்மனி, ரூமேனியா ஆகிய ஆக்கிரமிப்பாளர்களின் ஆதிக்கத்தின்கீழ் இருந்தன.

இந்த மாநிலங்கள் 1939 - 1940 ஆம் ஆண்டுகளில் சோவியத் ரசியாவுடன் இணைக்கப்பட்டமை, ஒரு ஆக்கிரமிப்பாளனிடமிருந்து மற்றையவனுக்குச் செல்கின்ற வழக்கமான செயற்பாடாகவே கணிசமானளவு பிரதேச மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.


போர்க்காலத்தில் ஜேர்மனியக் கட்டளைப் பீடம் இந்தச் சூழ்நிலையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டது. அது உ.தே.அ இன் பலத்தைச் சோவியத் அதிகாரத்திற் கெரிராகவும் செஞ்சேனைக் கெதிராகவும் பயன்படுத்தக் கோரியது. ஜேர்மனிய இராணுவத் தலைமைத்துவத்தின் உதவியுடன், தனது இராணுவக்கட்டமைப்பை உ.தே.அ உருவாக்கியது. விளைவில், உக்ரேனியக் கிளர்ச்சி இராணுவமும் (உ.கி.,) உக்ரேனிய மக்கள் புரட்சி இராணுவமும் (உ.ம.பு.,) தோற்றம் பெற்றன.

1943 ஆம் ஆண்டு உ.தே.அ இனது மூன்றாவது அமர்வில், தலைமைத்துவ உரையில் தனது இராணுவ அமைப்பிற்குப் பின்வரும் பணிகளை வழங்கியது. செஞ்சேனையினதும் உட்துறையமைச்சு மக்கள் சபையினதும் தலைமையகங்கள், படைப்பிரிவுகள் ஆகியனவற்றின் மீது தாக்குதலைத் தொடுத்தல் அவற்றின் அதிகாரிகளையும் உட்துறையமைச்சு மக்கள் சபை - அரச பாதுகாப்பு மக்கள் சபை ஆகியவற்றின் பணியாளர்களையும் சோவியத் கட்சி உறுப்பினர்களையும் அழித்தல், பின்புலத்திலுள்ள இலக்குகளை நாசமாக்குதலும் போக்குவரத்து, சொத்துக்கள், உற்பத்திச் சாதனங்கள் ஆகியனவற்றை அழித்தலும் சோவியத் படைகளின் பின்புலத்தில் ஒருங்கிசைந்த ஆயுத நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயார்ப்படுத்தல் (சுதந்திர உக்ரேனிய வல்லரசை உருவாக்கும் நோக்கில்) போன்றனவாகும்.

தொடர்வான்....

நெற்றிபொறியன்

# இலங்கைதீவு இந்தியா, அமெரிக்கா, சீனாவின் கைப்பொம்மையா?



இனிவரும் 50 ஆண்டுகளில் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் சீன-அமெரிக்க போட்டி கடும் இறுக்கமடைவதை யாராலும் தடுக்கமுடியாது. இந்த சீன- அமெரிக்க போட்டியில் இலங்கையும் சிக்குண்டுள்ளது. இதில் தமிழ் மக்கள் என்ன செய்யவேண்டும் என்ற ஒரு கேள்வி இயல்பாகவே எழுகிறது. புவிசார் நலன்.போரியல் பார்வையினூடாக எப்படி உலக ஒழுங்கின் இந்த சதுரங்க ஆட்டத்தை அணுகவேண்டும் என்பதை விளக்க முனைவதே இந்த பதிவு.

சீன-அமெரிக்க போட்டியில் வெறுமனே இலங்கை மட்டும் சம்பந்தப்படவில்லை. ஆசிய-பசுபிக் பிராந்தியத்தில் உள்ள பல நாடுகள் சம்பந்தப்பட்டுள்ளன. இதில் QUAD,AUKUS, Australia-India-Japan Strategic Triangle போன்ற பல பக்கங்கள் உண்டு. நான் அந்த பக்கங்களை எல்லாம் ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு இலங்கை பக்கத்தை மட்டும் எடுத்திருக்கிறேன். அப்பொழுதுதான் இந்த சதுரங்க ஆட்டத்தை எளிமையாக உங்களால் புரிந்து கொள்ளமுடியும்.

**தமிழீழ பிரச்சினையை பொறுத்தவரை, 2009 வரை இந்த சதுரங்க ஆட்டத்தில் மூன்று தரப்பு பிரதான ஆட்டக்காரர்களாக இருந்தார்கள்.**

**1. விடுதலை புலிகள்**
**2. இலங்கை**
**3. இந்தியா**

இடைக்கிடையே மேற்குலகும் பங்குபற்றியது. விடுதலை புலிகள் களத்தில் இருந்தவரை. இந்த சதுரங்க ஆட்டத்தில் தமிழர்களுக்கு எது வேண்டும் என்பதை ஆணித்தரமாக கேட்கக்கூடிய வகையில் இருந்தார்கள். மற்றைய ஆட்டக்காரர்கள் விடுதலை புலிகளை புறக்கணிக்க முடியாதவகையில் புலிகள் தாங்களது இராணுவ ஆற்றலை வைத்திருந்தார்கள்.

2009 இற்கு பிறகு. இந்த சதுரங்க ஆட்டத்தில் தமிழீழ மக்களிடமிருந்து ஆட்டக்காரர் என்ற பதவி பிடுங்கப்பட்டு அகற்றப்பட்டாகிவிட்டது. இன்று இந்த சதுரங்க ஆட்டத்தை பொறுத்தவரை தமிழீழ மக்கள் வெறும் பார்வையாளர் மட்டுமே.

**அப்படியானால் இன்று இந்த சதுரங்க ஆட்டத்தை ஆடும் ஆட்டக்காரர்கள் யார்?**

**1. அமெரிக்கா**
**2. இந்தியா**
**3. சீனா**
**4. இலங்கை**

**தமிழீழ மக்கள் பார்வையாளர் மட்டுமே. ஆட்டக்காரர் அல்ல.**

இனி ஒவ்வொரு ஆட்டக்காரர்களின் அணுகுமுறையும் எப்படியிருக்கும் என்பதை வரிசையாக பார்ப்போம்.

அதற்கு முன் தமிழ் மக்கள் கற்றுக்கொள்ள வேண்டிய மிக முக்கியமான ஆட்டவிதி

"There are no permanent friends or enemies but permanent interests in international relations.

**இந்த உலக ஒழுங்கின் சதுரங்க ஆட்டத்தில் நிரந்தர நண்பனும் இல்லை நிரந்தர எதிரியும் இல்லை. நமது நலன் மட்டுமே என்றுமே நிரந்தரமானது. ஒவ்வொரு நகர்வும் நமது நலனை நோக்கியதாகவே இருக்கவேண்டும்."**

உலக ஒழுங்கின் சகல ஆட்டக்காரர்களும் இதை மனதில் வைத்து மட்டும்தான் இந்த சதுரங்க ஆட்டத்தை ஆடுகிறார்கள். தமிழர்கள் நீங்கள் குறுக்கே பாய்ந்து. கண்ணீர் கசிந்து. அறம். உயிர்நேயம் என டயலாக் பேசிக்கொண்டிருந்தால் உலக ஒழுங்கு உங்களை பார்த்து சிரித்துவிட்டு கடந்துபோய்விடும். இந்த சதுரங்க ஆட்டத்தின் விதியை உங்களால் மாற்றமுடியாது. பல நூற்றாண்டுகளாக இந்த சதுரங்க ஆட்டம் இப்படித்தான் ஆடப்படுகிறது.

**அமெரிக்கா**

அமெரிக்காவின் மூலோபாயம் என்பது என்ன? அமெரிக்காவின் மூலோபாயம் ( Grand Strategy) என்பது எப்போழுதுமே ஒன்றுதான்.

The central aim of U.S grand strategy is to preserve its current position for as long as possible. அதாவது உலகின் super power என்ற அதனது நிலையை தக்கவைத்தல். அதன்படி அமெரிக்காவின் super power நிலையை அசைக்ககூடிய வகையில் சீனா வளருவதை அமெரிக்கா அனுமதிக்காது. சீனா வளருவதை தடுப்பதற்காக உதவகூடிய சகல நாடுகளையுமே அமெரிக்கா தனது நண்பனாகவே அணுகும். அதேபோல் அதற்கு எதிர்நிலையில் இருக்கும் நாடுகளை எதிரியாக அணுகும்.

**சீனா**

சீனாவிற்கு Malacca Dilemma என்ற சிக்கல் இருக்கிறது.

அதன் தொடர்ச்சியாக ஆசிய பசுபிக் பிராந்தியத்திலிருந்து அமெரிக்காவை முற்றிலும் அகற்றிவிட சீனா முயற்சிக்கிறது.

இதிலிருந்து மீள்வதற்கான சீனாவின் பல நகர்வுகளில்ஒன்றுதான்StringofPearls.இந்து மா சமுத்திரத்தில் தனக்கான நட்புநாடுகளை உருவாக்கி. அங்கு துறைமுகங்களை கட்டுகிறது.அந்த துறைமுகங்கள் சீனாவின் கடற்படை தேவைக்கும் பயன்படக்கூடியவாறே கட்டப்படுகிறது (dual-use port projects). இந்த புள்ளியில்தான் இலங்கையும் வருகிறது.

சீனாவின் முத்துமணி-மாலையில் (String of Pearls) இலங்கையும் ஒரு முத்துமணி.

**இந்தியா**

சோவியத்-அமெரிக்கா Cold War காலகட்டங்களில் இலங்கை அமெரிக்காவின் பக்கம் சாய்ந்து இருந்தது. இலங்கையை இந்தியாவின் செல்வாக்கிற்குள் கொண்டுவருவதற்காக, 1980 களில் உருவான தமிழ் போராளி குழுக்களுக்கு இந்தியா ஆதரவு அளித்தது. இதன் மூலம் இந்தியா சொன்ன செய்தி இதுதான். தெற்காசிய பிராந்தியத்தில் இந்தியாவிற்கு எதிரான நிலைப்பாட்டை இலங்கை எடுத்தால், இலங்கையில் உருவான ஆயுத போராட்டத்திற்கு ஆதரவு அளித்து உனக்கு தலைவலி தருவேன். அதேநேரம் இலங்கையில் தமிழீழம் உருவாக இந்தியா அனுமதிக்காது.

இன்றைய சீனா-அமெரிக்க போட்டி தொடங்கிவிட்ட நிலையில், இது தெற்காசிய பிராந்தியத்தில் வேறொரு பரிமாணத்தை உருவாக்கியுள்ளது. ஆசிய-பசுபிக் பிராந்தியத்தில் சீனா அமெரிக்காவை அகற்ற முயல்கிறது. அமெரிக்கா பல நாடுகளை கொண்ட கூட்டணியை உருவாக்கி containment strategy எனும் எதிர் நகர்வை செய்கிறது. இந்த அமெரிக்காவின் எதிர் நகர்வில் மிக முக்கியமான நண்பர்கள் இந்தியாவும்.ஜப்பானும். ஆசியாவின் இரு பெரும் பொருளாதாரங்களை.இராணுவ வலிமையை கொண்ட நாடுகள். சீனா அமெரிக்காவிற்கு எதிரான நகர்வுகளை செய்யும்போது. இந்தியாவிற்கும் ஜப்பானிற்கும் எதிரான நகர்வுகளை செய்யவேண்டியது அவசியம். இந்தியாவும் சீனாவிற்கு எதிரான நகர்வுகளை செய்யவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது. தெற்காசிய பிராந்தியத்தில் உள்ள சிறுநாடுகளை அதனது செல்வாக்கிற்குள் வைத்திருக்க வேண்டிய தேவை இந்தியாவிற்கு இருக்கிறது.

**இலங்கையில் மூக்கை நுழைக்க இந்தியாவிற்கு இருக்கும் ஒரே வழி**

இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் தனது தமிழ்நாட்டில் இருக்கும் தமிழ்மக்களின் தொப்புள்குடி உறவாக இருப்பதால், இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் நலனில் அக்கறை கொள்ளும் தார்மீக உரிமை தனக்கு இருப்பதாக வழமைபோல இந்தியா இந்த பிட்டை போடும். இந்த ஒரு காரணத்தை காட்டி மட்டுமே இந்தியாவால் நேரடியாக இலங்கையில் தலையிடமுடியும். அதை தவிர்த்து இந்தியா மூக்கை நுழைக்க வேறு வழி கிடையாது.

ஆக எப்பொழுதெல்லாம் இலங்கை தன் கையை விட்டு மீறிபோகிறதோ. அப்பொழுதெல்லாம் இந்தியாவிற்கு தமிழர் நலன் மீது 'திடீர் அன்பு' வரும். இலங்கையில் உள்ள தமிழ் மக்களும் இந்தியாவின் இந்த 'திடீர் திடீர் அன்பு மழையில்' நனைந்து பதிலுக்கு அன்பு மழையை பொழிந்தால் அது உங்களின் கூமுட்டைத்தனம். நீங்கள் உலக ஒழுங்கின் சதுரங்க ஆட்டத்தை ஆடுவதற்கு லாயக்கில்லாத இனம் என்று அர்த்தம்.

**இலங்கை**

இலங்கையின் ராஜதந்திர நகர்வு என்பது சீன-அமெரிக்க போட்டியில் இரு தரப்புக்கும் நண்பனாக இருந்து தப்பிக்க நினைத்தது. போனவருடம் இலங்கைக்கு வருகை தந்த அமெரிக்காவின் Secretary of State Md Mike Pompeo சொன்னதை இங்கு குறிப்பிடுவது பொருத்தம். "Sri Lanka Will Soon Have to Pick a Side in the China-US Rivalry" சீன-அமெரிக்க போட்டியில் இலங்கை தான் யார் பக்கம் என்பதை முடிவு செய்யவேண்டும் என்று Mike Pompeo கூறினார்.

'தான் யார் பக்கம்' என்பதை தெளிவாக சொல்ல வேண்டிய கட்டாய நிலை இலங்கைக்கு உருவாகும் என்பதை நான் பல வருடங்களாக பதிவுகளில் சொல்லி வந்திருக்கிறேன்.

**தமிழீழ மக்கள்**

நான் மேலே குறிப்பிட்டது போல. 2009 இற்கு பிறகு தமிழீழ மக்கள் இந்த சதுரங்க ஆட்டத்தில் ஆட்டக்காரர் என்ற பதவியை இழந்துவிட்டார்கள். இப்பொழுது வெறும் பார்வையாளர் மட்டுமே.

**இப்பொழுது தமிழீழ மக்கள் என்ன செய்யவேண்டும்?**

மேலே குறிப்பிட்ட நான்கு ஆட்டக்காரர்களும் தங்களுக்குள் மோதி கொள்ளட்டும். நாம் வேடிக்கை மட்டுமே பார்க்கவேண்டும். ஏனெனில் தமிழீழ மக்கள் இந்த சீன-அமெரிக்க போட்டியில் இழப்பதற்கு ஒன்றுமில்லை.இந்த போட்டியில் சீன.அமெரிக்க.இந்திய நலன்கள் At Stake. அதாவது யார் இந்த போட்டியில் தோற்றாலும் அவர்களின் நலன்கள் தான் பாதிப்படையுமே தவிர தமிழீழ மக்களின் நலன் அல்ல.

2009 இல் விடுதலை புலிகள் களத்தை விட்டு நீங்கிய பிறகு. தமிழீழ மக்கள் புலிகள் தோன்றுவதற்கு முன்பிருந்த காலத்திற்கு (Pre- Ltte Era) போயிருக்கிறார்கள். அவ்வளவுதான். நான் மேலே குறிப்பிட்டது போல. இந்த போட்டியில் அமெரிக்கா சீனாவிற்கு எதிரான தனது நகர்விற்கு உதவுகிற நாடுகளை நண்பனாக அணுகும். அதற்கு எதிராக உள்ள நாடுகளை எதிரியாக அணுகும். ஏதோ ஒரு புள்ளியில் இலங்கையை எதிரியாக அணுகவேண்டிய நிலை அமெரிக்காவிற்கு தோன்றலாம். சிலவேளை தோன்றாமல் கூட போகலாம். ஒருவேளை இலங்கையை எதிரியாக அணுகவேண்டிய நிலை அமெரிக்காவிற்கு தோன்றினால். அவர்களாகவே உங்களிடம் வருவார்கள்.

இந்தியாவும் பம்மிக்கொண்டு அமெரிக்காவின் பின்னால் வரலாம். ஆனால் தமிழீழ மக்கள் தாங்களாகவே கேணைத்தனமாக முந்திக்கொண்டு போய் 'இந்தியா எனக்கு தந்தை தேசம் முந்திரி தேசம்' என்ற சென்டிமென்ட் பாட்டெல்லாம் பாடக்கூடாது. **தமிழ்நாட்டு தமிழ்மக்கள் மட்டும்தான் தமிழீழ தமிழர்களின் நண்பனே ஒழிய இந்தியா தமிழீழ தமிழர்களின் நண்பன் அல்ல.** உலக ஒழுங்கின் ஆட்டவிதியை திரும்பவும் ஞாபகபடுத்திக்கொள்ளுங்கள்.

There are no permanent friends or enemies but permanent interests in international relations. மேலேயுள்ள எந்தவொரு ஆட்டக்காரர்களும் உங்களின் மேல் இரக்கம் கொண்டு உங்களை ரட்சிக்க வரப்போவதில்லை. அவர்களின் நலனுக்கு நீங்கள் தேவையென்பதால் அவர்கள் உங்களை நோக்கி வருவார்கள்.

ஏனெனில் அவர்களின் நலன்தான் At Stake. தமிழீழ மக்கள் செய்யவேண்டியது கையை கட்டிக்கொண்டு வேடிக்கை பார்ப்பது. ஏனெனில் நமது நலன் சீன-அமெரிக்க போட்டியில் இழக்கப்போவது ஒன்றுமில்லை.

சீனாவிற்கு இருக்கும் Malacca Dilemma சிக்கல்.

இந்த 'Malacca Dilemma' எனும் சொல்லாடல். 2003 ஆம் ஆண்டில் அன்றைய சீன அதிபர் Hu Jintao வினால் ராஜதந்திர வட்டாரத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த 'Malacca Dilemma' எனும் சீனாவின் சிக்கலை நீங்கள் புரிந்து கொண்டால். இந்த நூற்றாண்டில் சீன-அமெரிக்க போட்டி ஏன் இறுக்கமடைவதை தவிர்க்க முடியாது என்பதையும் நீங்கள் புரிந்து கொள்ளலாம். அதன் தொடர்ச்சியாக ஏன் சீனா ஆசிய-பசுபிக் பிராந்தியத்திலிருந்து அமெரிக்காவை அகற்றுவதற்கான போரியல் நகர்வை செய்கிறது என்பதையும் புரிந்துகொள்ளலாம்.

Malacca Dilemma என்பது என்ன?

அதற்கு முதலில் மலாக்கா நீரிணையை (Strait of Malacca) பற்றி தெரிந்துகொள்ள வேண்டும்.

11ஆம் பக்கம் பார்க்க...

நெற்றிப்பொறியன்

# தமிழ் மக்களுக்கான தீர்வை இந்தியா பெற்றுத்தருமா?



பிரதமர் மோடிக்கு அனுப்புவதற்காகத் தயாரிக்கப்பட்ட ஆவணத்தின் பின்னால் இலங்கையின் திட்டமிடலும் இருந்திருக்க வாய்ப்புள்ளது. ஏனெனில் தமிழர்கள் 13 ஐ மாத்திரம் கேட்டால் போதும் என்ற மன நிலை இலங்கையிடம் உண்டு. இதற்காகப் பல்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறுபட்ட தமிழ்த்தரப்புகளைக் கையாண்டு எடுக்கப்பட்டிருந்த பல முயற்சிகள் தோல்வி கண்டதன் பின்னணியில், புதிய முயற்சியின் மூலம் இலங்கை ஒற்றையாட்சியை நிலை நிறுத்தக்கூடிய இந்த அணுகுமுறையைச் செயற்படுத்தியிருக்க வாய்பில்லாமில்லை. தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிகளின் தலைவர்கள் கையொப்பமிடாமல் தமிழ்த்தேசியக் கட்சிகள் மாத்திரம் கைச்சாத்திட்டுள்ளமையும், குறித்த நிகழ்ச்சி நிரலை நிறைவேற்ற வேண்டுமென்ற அவசரத்தையும் காண்பித்திருக்கிறது.

தமிழ்த்தேசியம் சார்ந்து முழுமையாக வெற்றிபெற்ற ஆவணமாக இல்லாமலும், தமிழ்த்தேசியத்தை ஒற்றையாட்சிக்குள்ளேயே குறுக்கிவிட வேண்டுமென நினைக்கும் சக்திகளுக்கு முழு வெற்றிதராத ஒரு ஆவணமாகவும், இது திரிங்சாங்கு நிலையிலேயே நிற்கின்றது. கொழும்பில் கடந்த டிசம்பர் மாதம் 22 ஆம் திகதி வரையப்பட்ட ஆவணத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் கைச்சாத்திட்டிருந்தால், அது ஓரளவுக்கு ஏற்புடையதாக இருக்கலாம். ஏனெனில் சுயநிர்யணய உரிமை என்ற சொல் ஆவணத்தில் பயன்படுத்தப்பட்டிருப்பதாகக் கூறுகிறார்கள். அத்துடன் 13 இற்கு அப்பால் என்று சிங்கள ஆட்சியாளர்கள் மாறி மாறி ஆட்சி அமைக்கும் சந்தர்ப்பங்களில் உறுதியளித்த விடயங்கள் ஆவணத்தில் எடுத்துக் கையாளப்பட்டுமிருப்பதாகவும் சொல்லப்படுகின்றது. (ஆனால் கைச்சாத்திடப்பட்ட உண்மையான ஆவணம் இதுவரை பகிரங்கமாக வெளியிடப்படவில்லை)

ஆகவே ஒவ்வொரு தேர்தல்களின்போதும் சொல்லிக் கொண்டு வந்த தேர்தல் விஞ்ஞாபனங்களில், எந்தெந்த அடிப்படையில் தமிழ்த்தேசியம் சார்ந்த விடயங்களைக் குறைத்துக் கொண்டு வந்தார்களோ, அந்த ஓட்டத்துக்குள்ளேயே இந்த ஆவணத்தையும் தமிழரசுக் கட்சியை மையப்படுத்திய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கொண்டு வந்திருக்கிறது. அப்படித் தயாரிக்கப்பட்ட இந்த ஆவணம் தமிழ்த்தேசிய சக்திகளை இரண்டு கூறுகளாக இனிமேல் அடையாளப்படுத்தப்போகின்றது. அதாவது ஒற்றையாட்சியில் இருந்து அதிகாரப் பரவலாக்கல் ஊடாகச் சமஸ்டியை நோக்கிப் பயணிப்பவர்கள் ஒரு பிரிவாகவும், ஒற்றையாட்சி இல்லாமல் சமஸ்டியை நோக்கிப் பயணிக்க வேண்டுமென்ற தரப்புகள் மற்றுமொரு பிரிவாகவும் இயங்கப் போகின்றன. இரண்டு பிரிவுகளையே இந்த 2022 ஆம் ஆண்டு உருவாக்கியிருக்கிறது எனலாம்.

இந்தச் சூழலில், வடக்குக் கிழக்குத் தாயக மக்களை அடிப்படையாகக் கொண்டு இரு பிரிவுகளிலும் புலம்பெயர் மக்களுடைய ஆதரவும், தமிழ் நாட்டின் ஆதரவும் எந்தப் பிரிவுக்கு இருக்கப் போகின்றது? இதனை யார் பொறுப்பெடுத்துச் சாமர்த்தியமாக நகர்த்தப் போகின்றார்கள்? என்ற இந்த இரு கேள்விகள் தொக்கி நிற்கின்றன.அத்துடன் எதிர்காலத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள் மேலும் ஏற்படப் போகின்ற பிளவுகள், அதனை இலங்கை அரசு கையாளவுள்ள ஆபத்தான வழிமுறைகள் மற்றும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் எதிர்காலத் தலைமையைத் தீர்மானிக்கப் போகும் சக்தி எது என்ற கேள்விகளும் தற்போதிருந்தே எழ ஆரம்பித்துள்ளன.

அதேவேளை இரண்டு ஆசனங்களை வைத்திருக்கும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி எந்தவொரு மாற்றுச் செயற்பாட்டையும் இதுவரை அறிமுகப்படுத்தவில்லை. அது மாத்திரமல்லாது தமிழ்த்தேசியத்தில் பிரதான தரப்புகளாக இருக்கக் கூடிய பதினொரு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும், ஒரு ஆசனத்தைக் கொண்டுள்ள விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியும் இதுவரை புதிதாக எந்தவொரு மாற்றத்தையுமே ஏற்படுத்தவில்லை. இந்த ஆவணம் தமிழ்த்தேசிய சக்திகளை இரண்டு கூறுகளாக இனிமேல் அடையாளப்படுத்தப்போகின்றது. அதாவது ஒற்றையாட்சியில் இருந்து அதிகாரப் பரவலாக்கல் ஊடாகச் சமஸ்டியை நோக்கிப் பயணிப்பவர்கள் ஒரு பிரிவாகவும், ஒற்றையாட்சி இல்லாமல் சமஸ்டியை நோக்கிப் பயணிக்க வேண்டுமென்ற தரப்புகள் மற்றுமொரு பிரிவாகவும் இயங்கப் போகின்றன. இந்த கட்சிகள் எல்லாமே தமிழ்த்தேசியம் என்ற பெயரில் வெவ்வேறு தளங்களில் இயங்குகின்றன. முக்கியமாகத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி ஒரு மாற்று நடவடிக்கையை முன்வைத்து நகர்த்த முடியாதவொரு சூழலில் இருப்பதால், அடுத்த கட்டத் திட்டமிடல் எவ்வாறு இருக்கப் போகின்றது என்பதிலே ஒரு கேள்விக்குறி உண்டு.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி முன்வைத்திருக்கிற தேர்தல் விஞ்ஞாபனம் சொல்லுகின்ற விடயங்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ள தேர்தல் விஞ்ஞாபனம் கூறுகின்ற விடயங்களும், அதேபோன்று தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி வைத்திருக்கின்ற தமிழ் மக்கள் பேரவையால் தயாரிக்கப்பட்டிருக்கின்ற அரசியல் தீர்வுக்கான வரைபையும், தமிழரசுக் கட்சியால் கையளிக்கப்பட்டிருக்கின்ற தீர்வுக்கான வரைபும் இப்போது நரேந்திரமோடியிடம் கையளிக்கப்படப் போகின்ற ஆவணமும் வெவ்வேறுபட்டவை. இந்த மூன்று வகையான ஆவணங்களையும் வைத்துக் கொண்டே ஈழத்தமிழர்களின் தாயகத்தில் இருக்கக் கூடிய அரசியல் ஓட்டம் இருக்கப் போகின்றது என்றால், புலம்பெயர் மற்றும் தமிழ்நாட்டில் இருக்கப் போகின்ற அடிப்படைகள் தொடர்ந்தும் என்னவாக இருக்கப் போகின்றன என்பது இங்கே பரிசோதனைக்குள்ளாகும் ஒரு அபாயகரமான கட்டத்திற்கு மாறப்போகின்றன. அதாவது 2002 ஆம் ஆண்டு பேச்சுவார்த்தைக் காலத்தில் ஏற்பட்டதொரு சோதனை போன்ற பரிசோதனைக் காலகட்டம், மீண்டும் தமிழர் அரசியலில் சர்வதேசச் சட்டரீதியான விடயங்களில் உருவாகப்போகின்றதெனலாம். குறிப்பாக எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவா மனித உரிமைச் சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ள ஆணையாளரின் எழுத்துமூலமான அறிக்கையைக் குறிவைத்தே இந்த நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்தியாவுடன் இணங்கிப் போதல் என்ற தன்னுடைய நகர்வுகளை கனகச்சிதமாக இலங்கை செய்து முடித்திருக்கின்றது.

தற்போதைய நகர்வுகள் அமைச்சர் பேராசிரியர் பீரிஸ், மிலிந்தமொறகொட போன்ற சிங்கள இராஜதந்திரிகளுக்கு வெற்றியெனலாம். அதேநேரம் ஆழமான தமிழ்த்தேசிய நிலைப்பாட்டுக்கு விழுந்துள்ள பலமான அடியாகவும் இதனை அவதானிக்க முடியும். இந்த நிலையைத் தாண்டிப் போவதற்குத் தமிழ்த்தேசிய அரசியலில் இருப்பவர்கள் சாதுரியமாக இயங்க வேண்டிய அவசியமான காலமிது என்பதை உணர்த்தியிருக்கின்றது. அதற்காக ஒருவரின் அழிவில் இருந்து மற்றையவர் அரசியல் செய்ய வேண்டுமென்கின்ற அணுகுமுறை முற்றாகவே தவிர்க்கப்பட வேண்டும்.

குறிப்பாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமிழ்த்தேசியப் பரப்பில் இருக்கக்கூடிய மற்றையவர்களின் அழிவில் இருந்துதான் தானும் எழும்ப முடியுமென நினைக்கும் அணுகுமுறை அடிப்படையில் தவறானது. 2011 ஆம் ஆண்டு பரந்தன் ராஜன் தலைமையில் மாநாடு ஒன்று புதுடில்லியில் நடைபெற்றபோது, தமிழ்த்தேசியத்துக்குச் சோதனை தரக்கூடிய விவாதம் அங்கே எழுந்திருந்தது. சுயநிர்ணய உரிமையைக் கைவிட்டு வேறு வரைவிலக்கணங்களுக்குள் தமிழ்த்தேசிய கூட்டமைப்புச் செல்லவிருந்தபோது, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியும் அந்தக் கூட்டத்தில் பங்குப்பற்றிச் சரியான கொள்கைகளை அங்கு தெளிவுபடுத்திய பின்னர் வெளி நடப்புச் செய்திருந்தது.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியில் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய கருத்துக்களையும் எதிர்காலத்தில் மேலும் புறக்கணித்துவிட்டுச் செல்லக்கூடிய அபாயமும் உண்டு. அவ்வாறான ஆபத்துகள் உள்ளதெனத் தெரிந்து கொண்டும், முன்னணியால் ஒரு வழிவரைபடத்தைத் தெளிவாக முன்வைக்க முடியாமலும் சாணக்கியமான அரசியலைச் செய்ய முடியாத சூழலும் காணப்படுகின்றது. அதுபோன்றதொரு அணுகுமுறையை 13 பற்றிய கூட்டங்களிலும் பங்குப்பற்றிச் செய்யாமல், 13 ஐ மட்டும் எதிர்க்கின்றோம் என்று வெளியில் நின்று கூறிவிட்டு, இந்திய- இலங்கை ஒப்பந்தத்தை நிராகரிக்கவில்லையென முன்னணி வியாக்கியானம் செய்திருக்கிறது.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை எதிர்க்கவில்லை என்று சொல்வதன் ஊடாக ஒப்பந்தத்தின் மூலம் முன்னெடுக்கவுள்ள அரசியலுக்குத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அங்கீகாரம் கொடுப்பதாகவே அந்த வியாக்கியானம் பொருள்கோடல் செய்கிறது. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் எந்தவொரு அடிப்படையிலும் தமிழ்த் தேசியத்துக்கான அங்கீகாரம் பலமாக இல்லாதொரு பின்னணியில், அதனை மீண்டும் புதுப்பிப்பதற்கான வலியுறுத்தலைச் செய்யாமல், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வெறுமனே விமர்சனத்தை மட்டும் முன் வைத்துவிட்டுச் சென்றிருக்கிறது. காத்திரமான சமஸ்டி ஆட்சி முறைக்குரிய தன்மையை இலங்கை ஒற்றையாட்சிக்குள் இருந்து சாத்தியப்படுத்த முடியாதென்றால், அதனை எவ்வாறு சாத்தியமாக்க முடியும் என்ற வழிவரைபடத்தைத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி ஏலவே தயாரித்திருக்க வேண்டும். ஆனால் இதுவரை அவ்வாறான தயாரிப்புகள் இருப்பதாகத் தெரியவில்லை.

சமஸ்டிக்கான வழிவரைபடம் ஒன்றைத் தமிழரசுக் கட்சி குறிப்பாக சுமந்திரன் அணி முன்வைக்க முயல்கிறது. ஆனால் முன்னணிக்கு இதுவரை அவ்வாறான நோக்கங்கள் கூட இருப்பதாகவும் தெரியவில்லை. ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகள் முன்வைக்கும் யோசனைகளை எந்த அடிப்படையில் நிராகரிக்கின்றோம். எதனை ஏற்க முடியாது என்று இதுவரை அர்த்த புஷ்டியான விளக்கம் கொடுக்கவுமில்லை. சரியான தெளிவுபடுத்தலைச் செய்ய வேண்டிய கடமை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி போன்று மாற்றுத் தளத்தில் செயலாற்றுவோருக்கே அதிகம் உண்டு. மற்றையவர்களுடைய அழிவில் இருந்து எழுவோம் என்று சிந்திக்கின்றபோது, அந்த அழிவு என்பதில் இலாபம் தேடுகின்ற சக்தியாக இலங்கை ஒற்றையாட்சி அரசும் சிங்கள எதிர்க்கட்சிகளும், இலங்கை அரசாங்கத்தின் முகவர்களாக இருக்கக்கூடிய தமிழ் பேசும் அரசியல்வாதிகள் தலை நிமிர்வதுமே மேலோங்கும். அத்துடன் அபிவிருத்தி அரசியல் மூலம் தமிழ் மக்களுக்குத் தொழில் வாய்ப்புகளைத் தருகின்றோம். நஷ்டஈடுகளை வழங்குகின்றோமெனக் கூறிச் சர்வதேச நீதியை மறுதலிக்கும் நடவடிககைகளில் ஈடுபட்டு வரும் டக்ளஸ், அங்கஜன், சிவநேசத்துரை சந்திரகாந்தன் போன்றவர்களின் வாக்கு வங்கிகள் விஸ்தரிக்கப்படும் ஆபத்தும் உருவாகும்.

வடக்குக் கிழக்கில் தமிழ்த்தேசியம் என்பது 22 நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்து தற்போது 13 நாடாளுமன்ற உறுப்பினர்களாகச் சுருங்கியுள்ளது.வடக்குக் கிழக்கில் உள்ள 29 ஆசனங்களில் குறைந்தது 15 ஆசனங்களைப் பெற்றால் மாத்திரமே தமிழ்த்தேசியம் என்பது குறைந்த பட்சம் பலமடையும்.ஆகவே தமிழ்த் தேசியத்துக்காக 15 உறுப்பினர்களைக்கூட பெறமுடியாதவொரு பின்னணியில் 13 உறுப்பினர்களில் இருந்து மேலும் பல பிரிவுகளாகத் தமிழ்த்தேசியம் தற்போது சிதறுண்டுள்ளது. தமிழ்த் தேசியத்தைப் பலமாக வைத்துக் கொண்டுதான் அடுத்த கட்டமாக எதிர்கொள்ள வேண்டும். அதற்காக ஒன்றிணைந்த நிலைப்பாடு என்பது மிகவும் முக்கியமானது கொள்கை எவ்வளவு முக்கியமோ, அதேபோல ஒன்றிணைந்து இதை நகர்த்திக் கொண்டு செல்வதும் மிக மிக அவசியமானது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள்ளேயே இரண்டு அணிகளும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டமைப்பு என்ற மற்றுமொரு இரண்டு அணிகளுமாகப் பிரிந்து நிற்பதால், தமிழ்த்தேசியத்தை முன் நகர்த்துவது எப்படி என்ற கேள்விக்கும் விடை தேட வேண்டும். தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியில் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அந்த இரண்டுபேருடை கருத்துக்களையும் எதிர்காலத்தில் மேலும் புறக்கணித்துவிட்டுச் செல்லக்கூடிய அபாயமும் உண்டு. அவ்வாறான ஆபத்துகள் உள்ளதெனத் தெரிந்து கொண்டும், முன்னணியால் ஒரு வழிவரைபடத்தைத் தெளிவாக முன்வைக்க முடியாமலும் சாணக்கியமான அரசியலைச் செய்ய முடியாத சூழலும் காணப்படுகின்றது. அதனை மாற்றீடு செய்வதற்கான சமூக எழுச்சியும் சமூக மற்றும் அரசியல் விழிப்புணர்வுகளும் மக்கள் மத்தியில் உருவாகாதவரை, தமிழ்த்தேசியம் என்பது இலங்கைத்தீவிலே தலையெடுப்பது மிகவும் சிக்கலாக இருக்கும். சமீபத்திய நாட்களிலே தமிழ்த்தேசியம் என்பது மிகவும் எச்சரிக்கையான சவாலை எதிர்கொண்டுள்ளது. குறிப்பாகச் சிறுபான்மை மக்கள் அல்லது சிறுபான்மை என்று குறைத்து அதாவது வடக்குக் கிழக்கில் எழுபது ஆண்டுகளுக்கும் மேலான அரசியல் போராட்டங்களை நடத்திய தமிழ்த்தேசியம் என்பது, மலையக- இஸ்லாமிய மக்களைப் போன்று குறைந்தபட்ச புரிந்துணர்வுக்கு வரவேண்டும் என்ற நெருக்குவாரமும் கொண்டு வரப்பட்டிருக்கின்றது.

**ஆதவன்**

**11ஆம் பக்கம் பார்க்க...**

# கேள்விக்குறியாக மாறும் நாட்டின் விவசாயம்

விவசாயம் என்பது நாட்டினுடைய முதுகெலும்பாகத் திகழும் ஒரு அத்தியாவசியமானத் துறையாகும். விவசாயம் வீழ்ச்சியடையும் நாடு ஏனைய நாடுகளிடம் கையேந்தும் நிலைக்கும், பாரிய அழிவினை நோக்கியே பயணிக்கவேண்டிய துர்ப்பாக்கிய சூழல் ஏற்படும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. மக்களது பிரதான உணவுத் தேவைகளை இந்த விவசாயத்துறையே பூர்த்தி செய்கிறது. மண்ணை வளப்படுத்துவதும் இத்துறைதான். எனினும் இந்தத் துறையானது இன்று பாரிய அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் சிக்கல்களுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டுள்ளது. இலங்கையானது விவசாயத்தில் தன்னிறைவுடன் இருந்த போதிலும் இன்றைய நிலையில் இத்துறையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதுடன், ஏனைய நாடுகளிடமிருந்து நாட்டின் உணவுத்தேவையினைப் பூர்த்தி செய்வதற்காக அரிசியினைக் கொள்வனவு செய்யவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என்பது கவலைக்குரிய விடயமாகும்.

உழவு அல்லது வேளாண்மை அல்லது விவசாயம் அல்லது கமம் என்பது உணவுக்காகவும் ஏனைய பயன்பாடுகளுக்காகவும் சிலவகைப் பயிர்களை உற்பத்தி செய்வதையும், கால்நடை வளர்ப்பையும் குறிக்கும். வேளாண்மை ஒரு முக்கியமான முதனிலைத் தொழில் ஆகும். இத்தொழிலில் மனிதன் இயற்கையிலிருந்து கிடைக்கும் பொருள்களைச் சேகரித்துப் பயன்படுத்திக் கொள்வதோடு நிறுத்திக் கொள்ளாமல், அவ்வியற்கையோடு ஒன்றிணைந்து பணியாற்றி உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து கொள்கிறான். வீட்டு விலங்குகளினதும் தாவரங்களினதும் (பயிர்கள்) உற்பத்தியைக் கொண்டு நாகரிகங்களுக்கு வழி வகுத்திட்ட சிறப்பான மானிடவியல் வளர்ச்சி வேளாண்மையாகும். உணவுப் பெருக்கத்தை உருவாக்கிக்கொள்வது அடர்த்தியான மக்கள் தொகை மற்றும் நிலத்தொடர்புச் சமூகங்களை வளர்த்தெடுக்க உதவுகிறது. கால்வாய்களை வெட்டுதல் மற்றும் பல்வேறு வகையிலான நீர்ப்பாசனங்கள் மூலம் பயிர் வளர்ப்பிற்கு ஏற்றாற்போல் நிலத்தின் ஏற்புத்திறனை நீட்டிப்பது உள்ளிட்ட பல்வேறுவிதமான சிறப்புக்கூறுகளுடன் கூடிய உத்திகளோடு வேளாண் தொழில் தொடர்பு கொண்டிருக்கிறது. பயிரிடக்கூடிய நிலத்தில் பயிர்களைச் சாகுபடி செய்தல், கால்நடைகளை வளர்த்தல், மேய்ச்சல் நிலத்திலோ தரிசு நிலத்திலோ கால்நடைகளை மேய்த்தல் ஆகியவை வேளாண்மையின் அடித்தளமாக விளங்குகின்றன.

விவசாய வரலாறு மனித வரலாற்றில், உலகளாவிய சமூக-பொருளாதார மாற்றத்திற்கு ஒரு முக்கியமான காரணியாக இருந்தது. விவசாய முன்னேற்றம் மனித நாகரிகத்தில் ஒரு பெரும் பங்காற்றியுள்ளது எனலாம். வேளாண்மையே மற்ற எல்லா கலைகளுக்கும், முறைப்படுத்தப்பட்ட சட்ட அமைப்புகளுக்கும் காரணமாக அமைந்தது. விவசாயிகள் தங்கள் குடும்பங்களுக்குத் தேவையான உணவை உற்பத்தி செய்துகொள்ளும்போது, அந்த சமூகத்திலுள்ள மற்றவர்கள் உணவு உற்பத்தி தவிர்த்த மற்ற பணிகளில் தங்களை அர்ப்பணித்துக்கொள்ள முடிந்தது. வரலாற்றாசிரியர்களும் மானுடவியலாளர்களும் விவசாயத்தின் வளர்ச்சியே மனித நாகரீகத்தை சாத்தியமாக்கியுள்ளது என்று நீண்ட காலமாக விவாதித்து வந்துள்ளனர். வேளாண் தொழில் சுமார் 10,000 ஆண்டுகள் பழைமையானது. இது பல்வேறு காலகட்டங்களில் நிலப்பரப்பிலும் மகசூலிலும் பெரிய அளவில் விரிவடைந்துள்ளது. இந்த விரிவாக்கத்தினூடாக, புதிய தொழில்நுட்பங்களும் புதிய பயிர்களும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. நீர்ப்பாசனம், பயிர் சுழற்சி, உரங்கள், மற்றும் பூச்சிக்கொல்லிகள் போன்ற முறைகள் நீண்டகாலத்திற்கு முன்பே உருவாகிவிட்டன, ஆனால் கடந்த நூற்றாண்டில் தான் பெரும் மாறுதலை நிகழ்த்தின. காலநிலை, நிலத்தோற்றம், மண்வளம், நீர்வளம் மற்றும் பணியாளர்கள் ஆகிய காரணிகள் வேளாண் தொழில்களில் வேறுபாடுகளையும், பரவலையும் நிர்ணயிக்கும் காரணிகளாக அமைகின்றன. வெப்பநிலையும் மழையளவு ஆகியவை வேளாண்தொழிலைப் பாதிக்கும் காரணிகளாகும். காலநிலை மாற்றம், வெப்பநிலை மற்றும் ஈரப்பத பிரதேசங்களில் மாற்றங்களை ஏற்படுத்தி வேளாண்மையை பாதிக்கும் திறனுள்ளது. விவசாயம் புவி வெப்பமடைவதை தணிக்கவோ அல்லது மோசமாக்கவோ செய்யலாம்.

தோட்டப்பயிர்கள் அயனமண்டலப் பகுதிகளில் பெரிய நிலப்பரப்புகளில் மேற்கொள்ளப்படும் முறையாகும். அதிகம் முதலீடு செய்யப்பட்டு தேயிலை, காப்பி,



இறப்பர் போன்ற பயிர்களை மட்டுமே விளைவிப்பதைக் கருத்தாகக் கொண்டு விளைவிக்கும் முறை இதுவாகும். இவ்வகைப் பயிர்கள் தொடர்ந்து பல வருடங்களுக்குப் பயனளிப்பதாக உள்ளது. தோட்டப்பயிர் வேளாண்மை இலங்கை, மலேசியா, இந்தியா, இந்தோனேசியா மற்றும் பல நாடுகளில் காணப்படுகிறது. இவ்வாறு கால மாற்றத்திற்கு ஏற்ப உலக நாடுகளில் விவசாயத்துறையானது பரந்துவிரிந்து உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. இதனைத் தொழிலாக மக்கள் செய்ய ஆரம்பித்திருப்பது ஒன்றும் புதிதல்ல.

ஆரம்ப காலங்களில் சேதனப் பசளையை நம்பி மேற்கொள்ளப்பட்ட விவசாயத்துறையானது பின்னாளில் ஏற்பட்ட தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் கண்டுபிடிப்புக்கள், சனத்தொகை பெருக்கங்கள், உணவு உற்பத்தியில் போட்டித்தன்மை போன்ற பல காரணங்களால், அபரிமிதமான வளர்ச்சிப்போக்கைக் கண்டுள்ளது. அதாவது இயற்கை உரத்திலிருந்து மாற்றம் பெற்றது இரசாயன உரத்தினை உற்பத்தி செய்து விவசாயத்துறையின் உற்பத்தியினை மேலும் அதிகரிக்கச் செய்யலாம் என்கிற நோக்கில் மனிதன் இன்று வெற்றியும் பெற்றுள்ளான். இன்றைய உலகம் இரசாயனங்களால் நிரம்பி வழிகின்றது. நாம் உண்ணும் உணவில் இரசாயனக் கலப்பு இல்லாமல் இருக்க வாய்ப்பே இல்லை என்கிற அளவுக்கு நிலைமை மோசமாகியுள்ளது. குறிப்பாக ஆசிய நாடுகள் இன்று அதிகம் இரசாயன உரங்களைக் கொள்வனவு செய்து விவசாயத்திற்காக பயன்படுத்தி வருகின்றனர். இப் பாவனையின் காரணமாக நோய்கள் அதிகரித்துள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. மண் வளம் அழிவடைந்து கொண்டிருக்கிறது. மண்ணை வளமாக்கும் பூச்சிகள், மண்புழுக்கள் என்பன ஆபத்தினை எதிர்கொண்டுள்ளன. அவை மண்ணில் வாழ முடியாது என்கிற நிலைக்கு வந்துள்ளன. விவசாய உற்பத்தியில் அதிக பணத்தினை பார்த்த மனிதன், வைத்தியசாலைகளுக்கு அதிக பணம் செலுத்தி மருத்துவம் பார்க்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆரம்ப காலங்களில் உழவுக்காக மாட்டினைப் பயன்படுத்தி மனிதன் இன்று இயந்திரங்களுக்கு மாற்றமடைந்துள்ளான். இதனால் நன்மைகள் இருந்தாலும் தீமைகளை அதிகம் எதிர்கொள்ளவேண்டிய நிலையும் தொடர்கின்றது.

இவ்வாறு பல சவால்களுக்கு முகங்கொடுத்து மனிதனால் முன்னெடுக்கப்பட்ட வரும் விவசாயத்துறையானது இலங்கையைப் பொறுத்தவரை கடந்த காலங்களை விட இன்றைய நிலையில் பாரிய அழிவு நோக்கிப் பயணித்துக்கொண்டிருப்பதாகவே வல்லுனர்கள் கூறுகின்றனர். தற்போதைய கொவிட் பரவல் நிலைமைக்குப் பின்னர் இலங்கையினது பொருளாதாரமும் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், உற்பத்திகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக இலங்கையின் விவசாய உற்பத்தியானது அரசின் திடீர் அறிவிப்பான உர இறக்குமதித் தடையால் பாதிப்பினை எதிர்கொண்டுள்ளது. விவசாயிகள் நெற் பயிர்ச்செய்கைக்கான இரசாயன உரத்தினைப் பெறுவதில் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளனர். விளைச்சலில் வழமைக்குமாறாக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. உற்பத்தி வெகுவாகக் குறைந்துள்ளபோதிலும், நாட்டில் ஏற்பட்டிருக்கும் விலையேற்றத்தால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். உழவுக்குப் பெருந்தொகைப் பணத்தினையும், நெல்லை அறுவடை செய்வதற்கு பெருந்தொகைப் பணமும் செலுத்தி, உற்பத்தியில் பாரிய வீழ்ச்சியினையும் எதிர்கொண்டு, இலாபம் பார்க்க முடியாத அளவிற்கு ஏன் முதலீடாகப் பயன்படுத்திய பணத்தினைக் கூட மீள ஈட்டமுடியாத அளவிற்குச் சென்றுள்ளனர் விவசாயிகள்.

கடந்த காலங்களில் விவசாயம் செய்த பலர் இம்முறை விவசாய நடவடிக்கைகளில் இருந்து தம்மைத் தவிர்த்துள்ளனர். விவசாயத்தினை கைவிடும் அளவிற்குச் சென்றுள்ளனர். இரசாயன உரமும் இல்லை. பூச்சித்தாக்கத்திற்குத் தேவையான மருந்தும் இல்லை. வெறுமனே இறக்குமதி செய்யப்பட்ட திரவ உரத்தினைக் கொண்டு போதிய விளைச்சலைப் பெறமுடியாத நிலை உருவாகியுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர். இரசாயன உரங்களால் ஆசிய நாடுகள் பழகிக்கப்பட்டு பல வருடங்கள் உருண்டோடிவிட்டது. மாற்றம் தேவை. மண் வளமிழந்துள்ளது என்பது உண்மைதான். ஆனால் இன்றைய அரசு எண்ணுவது போல உடனடியான மாற்றங்களை விவசாயத்துறையில் செய்வது என்பது சாத்தியமற்றது. ஒரேயடியாக மக்களை துன்பத்திற்குள் ஆழ்த்துவது அபாயகரமானது. மண்ணை உடனடியாகவும் மாற்றவியலாது. மன்னர்களில் ஆட்சிக்காலத்தில் இலங்கை விவசாயத்துறையில் கொடிகட்டிப் பறந்த நாடு. ஏனைய நாடுகளுக்கும் நெல்லை ஏற்றுமதி செய்த நாடு. ஆனால் இன்று நிலைமை தலைகீழாக மாறியுள்ளது. இதற்குக் காரணம் இன்றைய அரசு மாத்திரமல்ல கடந்த கால அரசுகளும் தான்.

கடந்த காலங்களைவிட இன்று பெருந்தோட்டப் பயிர்களான தேயிலை, கோப்பி, கருவா, மிளகு போன்ற பயிர்களும் பாதிப்பினை எதிர்கொண்டுள்ளன. விளைச்சல் குறைவடைந்துள்ளது. இதனால் மலையகத்தில் இத்தொழிலில் ஈடுபடும் மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். நாளாந்தம் வேலை கிடைப்பதே இன்று அவர்களுக்கு பெரும் பிரச்சினையாகவுள்ளது. நாட்டின் அதிகரித்த விலைவாசிக்கு ஏற்ப வாழ்க்கையினை முன்கொண்டு செல்வதற்கு பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இலங்கைவாழ் மக்கள் அரசு தொடர்பில் அதிருப்தி அடைந்துள்ளனர். கொவிட் வைரஸினது பாதிப்பு பரவல் இன்னமும் இலங்கையில் குறைவடையவில்லை. மாறாக திரிபுகள் பரவ ஆரம்பித்துள்ளன. நாட்டின் தொழிற்சங்கங்கள் பாரிய போராட்டங்களை முன்னெடுத்தன. இன்னமும் முன்னெடுக்கக் காத்திருக்கின்றன. இன்றைய கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் நாட்டினை பொருளாதார ரீதியாக வளர்ச்சிப் பாதையில் முன்கொண்டுசெல்லவேண்டிய நிலையில் இருப்பதுடன், சர்வதேச அழுத்தங்களில் இருந்து தப்பித்துக்கொள்ளவும், அதிருப்தியடைந்துள்ள மக்களை சாந்தப்படுத்தவும், நாட்டின் உற்பத்தித் துறையினை வளர்த்தெடுக்கவும் நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் ரீதியான நெருக்கடிகளைச் சமாளித்து தனது ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்வதற்கான தலையிடிப் பிரச்சினைகளில் சிக்கியுள்ளது. ஒரு நாட்டின் அத்தியாவசியத் துறையான விவசாயத்துறையின் வீழ்ச்சியானது நாட்டு மக்களை மேலும் வறுமை நிலைக்குக் கொண்டுசெல்வதுடன், நாட்டை மேலும் கடனாளியாக்கி சர்வதேச நாடுகளிடம் கையேந்தி வாழும் நிலைக்குக்கொண்டு செல்லும் என்பதை நினைவிற்கொண்டு இனிவரும் காலங்களில் அரசின் கொள்கைகளும், செயற்பாடுகளும் ஆக்கபூர்வமானதாக அமையவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

**சசிகரன்**

# கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் பத்திரிகைக்கு வழங்கிய விஷேட செவ்வி

கிழக்கு மாகாணத்தின் சுபீட்சத்தின் தூரநோக்கு மற்றும் எண்ணக்கரு மற்றும் கிழக்கை செழிப்பான மாகாணமாக்கும் திட்டம்பற்றிய தெளிவான கருத்துக்களை கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் பத்திரிகைக்கு வழங்கிய விஷேட செவ்வி.

**கிழக்கு மாகாணத்தின் தூரநோக்கு மற்றும் எண்ணக்கரு பற்றி குறிப்பிட முடியுமா?**

கிழக்கு மாகாணத்தின் சூழலியல் அமைப்பினது ஏந்து திறனை தாங்கிச் செல்வதுடன் உள்ளூர் சமூதாயத்தினது விருப்பின்படி பொருளாதார சுழற்சி மிக்க சுபீட்சமானதொரு மாகாணத்தினை விருத்தி செய்வதாகும். சுற்றுச்சூழல் பொறுப்புடைத் தன்மையின் வாயிலாக சமூதாய முன்னேற்றம் மற்றும் பொருளாதார சுபீட்சத்தின் விருத்திக்கான சுதேச அபிவிருத்தி மாதிரிகளை உள்வாங்கிய முன்னுதாரணமானதொரு நிலைபேறான அபிவிருத்தியை நோக்கிய மாகாணமாக்குல்.

**கிழக்கு மாகாணத்தின் சுபீட்சத்தின் நோக்கு என்ன?**

இயற்கைச் சுற்றாடலே எமது வாழ்விடமாகும். எமது இல்லம், எமது சுவாசத்திற்கான காற்று, வாழ்வதற்கும்குடிப்பதற்கும்நீர், உணவு, பயிரிட மண் மற்றும் எமது சுற்றாடலை ஒழுங்குபடுத்த வனம் போன்றவற்றை தருகின்றது. இத்தகைய நலனிற்கான சுற்றாடலின் அடிப்படை வகிபாகத்தினை கண்டுணர்ந்து கொள்வதும் சுபீட்சத்தின் நோக்காகும். இதை கொள்கைப் பிரகடனத்தினால் வரை விலக்கணப்படுத்தப்படுவதும் எதிர்கால சந்ததியினருக்கான சுபீட்சத்தை உறுதிப்படுத்தும் அனைத்து செயற்பாடுகளிலும் எமது சுற்றாடலை பாதுகாப்பதாகும். எமது நாடு பரந்துபட்டதும், தனித்துவமான இயற்கைச் சுற்றாடலினால் பெறுமதிமிக்க இயற்கை வளங்களின் செழிப்பானதொரு பொருளாதாரத்திற்கான நிலைபேறான வகையில் அதை வழங்க இயன்றவாறு காணப்படுகின்றன. நாம் சுற்றாடலில் இருந்து விலகியவராக அன்றி, அதன் ஒரு பகுதியாக நின்று அறிவியல் ரீதியான புரிந்துணர்வுடனும், மூதாதையரின் திறன்களை இனங்கண்டு கொள்வதன் மூலமும் அவற்றின் வாயிலாக சுபீட்சத்திற்கான இயற்கைச் சுற்றாடலை உறுதிப்படுத்திக் கொள்வதாகும். செயலாற்றல் மிக்க உயிரியற் சுழற்சி முறைப் பொருளாதாரமொன்றை விருத்தி செய்து உலகம் பின்பற்றக் கூடியதொரு நிலைபேறான அபிவிருத்தியை செயற்படுத்துவதற்கு கிழக்கு மாகாணத்தின் இயற்கை வளங்களை பயன்பாட்டுக்கு உட்படுத்துவதாகும். கிழக்கு மாகாணத்தின் சுபீட்சத்தின் நோக்கு என்ற கொள்கையின் இலக்குளை அடையாளங் கண்டுகொள்ள அனைத்துத் துறைகளையும் இணைத்து நிலைபேறான வாழ்வியற் சுழற்சி கருத்தாக்கத்தின் வழியாக மக்களின் நலனை உறுதிப்படுத்தும் வகையில் இயற்கைச் சுற்றாடலை வளப்படுத்தலும், அனைத்துச் செயற்பாடுகளிலும் பூரணத்துவமான இலக்குகளை அடைவதாகும்.

**கிழக்கு மாகாணத்தில் நிலைபேறான அபிவிருத்தியை செயற்படுத்துவதற்கு எவ்வாறான வழிமுறைகளை கையாள்வீர்கள்?**

வாழ்வியல் பாதுகாப்பு, வாழும் இடத்தினை மீள் அமைத்தல், சுற்றுச்சூழல், நட்பு முறையிலமைந்த போக்குவரத்து வலையமைப்பு, சுற்றுச்சூழல் நட்புமுறைக் கட்டுமானங்கள், கழிவு முகாமைத்துவம், தொல்பொருளியல், சுற்றுலாத்துறை, நீர்ப் பாதுகாப்பு, உணவுப் பாதுகாப்பு, விதைகள், மீன்பிடி, கால்நடை, இறைச்சி, முட்டை, பால் உணவு, சக்திப் பாதுகாப்பு, சுகாதாரம், கல்வி, ஆளுகை போன்ற வழிமுறைகள் மூலம் நிலைபேறான அபிவிருத்தியை அடைந்துகொள்வோம்.

**நீங்கள் மேற்குறிப்பிட்ட வழிமுறைகள் மூலம் எவ்வாறான அபிவிருத்தியை அடைந்துகொள்வீர்கள்?**

**வாழ்வியல் பாதுகாப்பு** – கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்திலும் சுற்றாடல் பாதுகாக்கப்பட்டே மேற்கொள்ளப்படுகின்றது. எமது அரசின் கொள்கைகள் மற்றும் தந்திரோபாயங்களை பிரயோகிக்கும் போதும், அருகி வரும் சுற்றாடல் அமைப்பை மீட்டெடுக்கும் போதும், புனர்நிர்மானம் செய்கையிலும் சுற்றாடலைத்தக்க வைத்துக்கொள்ளும் வகையில் மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக, கிழக்கு மாகாணத்தில் உள்ள பொருளாதார ரீதியான முக்கியத்துவம் வாய்ந்த இயற்கை வளங்களை நிலைபேறான தன்மையுடன் பாதுகாக்கப்படுகின்றது. இதுவே மாகாண பொருளாதாரத்தினை மேம்படுத்துவதற்கான மையப் பொருளாகவும்



இருக்கின்றது. விவசாயம், சுகாதார பராமரிப்பு, சுற்றுலாத்துறை, கல்வி மற்றும் தொழில் நுட்பம் ஆகியவற்றை ஒருங்கிணைத்த வகையில் விவசாய சூழலியல் கைத்தொழில் அணுகுமுறையினூடான சுழற்சிமுறைப் பொருளாதார நிலையை ஈட்டிக்கொள்வதற்காக முறையான திட்டத்தை வகுத்துள்ளோம். ஐ.நாவின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தினர் முறையான திட்டமிடலை செயற்படுத்தி வருகின்றனர். அதாவது, மக்களின் நலன்கள், சுகாதாரம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி போன்றவற்றை உறுதிப்படுத்திக் கொள்ளவும், குறிப்பாக காலநிலை மாற்றத்தின் விளைவாக மக்கள் எதிர்கொள்ளவுள்ள சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கும் உள்ளூர் நிர்வாக கட்டமைப்புடன் ஒருங்கிணைந்து செயற்படவுள்ளனர்.

**வாழும் இடத்தினை மீள் அமைக்கல்** – செங்குத்தான பசுமை விருத்தி மற்றும் சுற்றத்தினர் கோட்பாடுகளின் அடிப்டையில் மக்கள் வாழும் இடத்தினை மீள் அமைத்துக் கொடுத்தல். அதாவது, புதிய அடிப்படை பாரம்பரிய சமூக வாழ்க்கை முறைகள், சுற்றுச்சூழல், நட்புறவான கட்டிடக்கலை, பேண்தகு வடிவமைப்பு மற்றும் நவீன கட்டிடத் தொழில்நுட்பம், உள்ளூரில் கிடைக்கத்தக்க மூலப்பொருட்கள் போன்றவற்றின் ஒன்றிணைவாகவே அமைந்திருக்கும். இந்த அடிப்படையில் கட்டப்பட்ட மற்றும் கட்டப்படுகின்ற குடியிருப்புக்கள் கிழக்கு மாகாணத்தினுள் அமையப்பெற்றுள்ள அமைவிடங்களுக்கு ஏற்றவாறு "பசுமையும் மிடுக்கும்" கிராமங்களாகவும், நகரங்களாகவும், மாநகரங்களாகவும் மாற்றப்படும்.

**சுற்றுச்சூழல் மற்றும் நட்பு முறையிலமைந்த போக்குவரத்து வலையமைப்பு** – எமது அரசாங்கம் மக்களுக்காக போக்குவரத்து வலையமைப்புக்களை அபிவிருத்தி செய்வதிலும், வினைத்திறமையான சுற்றுச்சூழல் நட்பு முறையான போக்குவரத்து முறையினை வழங்குவதற்கும் முன்னுரிமை வழங்கி வருகின்றனர். இத்தகைய போக்குவரத்து முறைமை அனைத்து மக்களாலும் மற்றும் தனியார் போக்குவரத்து சேவை வழங்குநர்களினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக இருக்கின்றது.

**சுற்றுச்சூழல் நட்புமுறைக் கட்டுமானங்கள்** - சுற்றுச்சூழல் நட்புமுறை வடிவமைப்பை கட்டியெழுப்புவதற்காக நிலைபேறான மூலப்பொருட்கள், ஒன்றிணைந்த மூலப்பொருட்களுக்கான மேம்பட்ட தொழில்நுட்பம் மற்றும் வடிவமைப்பு குறிக்கோள்கள் போன்றவற்றினால் சுதேச கட்டுமானத்துறை ஆராய்ச்சி முறையை ஸ்தாபிப்பதற்காக கட்டமைக்கப்பட்ட திட்டம் ஒன்றை அபிவிருத்தி செய்தல்.

**கழிவு முகாமைத்துவம்** – கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் கழிவு முகாமைத்துவத்தில் நேர்த்தியான கழிவு முகாமைத்துவ முறைமையை ஆரம்பித்து அந்தக் கழிவுகள் கிராம, நகர மற்றும் மாநகர மட்டத்தில் திரட்டி அதை மாகாண மட்டத்தில் மீள் நோக்கத்திற்கு உட்படுத்தி சேதனப் பசளை, உருவாக்கத்திற்கும், சக்தி உற்பத்திக்கும், மீள் பாவனைக்கான மீள் சுழற்சி மற்றும் மீள் உருவாக்கம் என்பவற்றிற்காக அவற்றை பயன்படுத்துவோம்.

**தொல்பொருளியல்** – மாகாணத்திலுள்ள தொல்பொருள் அமைவிடங்களை அவற்றின் கலாச்சார விழுமியங்களுடன் பாதுகாக்கின்ற அதேவேளை கல்வி மற்றும் வரலாற்று விழுமியங்களையும் மேம்படுத்தும் நோக்குடன் செப்பனிட்டுக்கொள்ளப்படும்.

**சுற்றுலாத்துறை** - இலங்கையின் இயற்கைச் சூழல் மற்றும் அதன் வரலாற்று சமூக, கலாச்சார பாரம்பரியங்களுக்குத் தீங்கு விளைவிக்கத்தக்க தாக்கங்களை தவிர்த்து மரபியல் வழக்காறுகள் என்பனவற்றை உள்ளூர் சமூகங்களிடையே வாழ்வாதார தங்கு நிலைகளை உருவாக்காதவாறு சுற்றுலாத்துறையை முழுமையாக மேம்படுத்துவதாகும்.

**நீர்ப்பாதுகாப்பு** - கிழக்கு மாகாணம் எமது மூதாதையர்களால் வடிவமைக்கப்பட்ட அடுக்கு ஏந்தல் அமைப்பு தொகுதியைக் கொண்டதாக இருக்கின்றது. இதில் ஆயிரத்திற்கும் அதிகமான புராதன குளங்களைக் கொண்டமைந்த ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட மாகாணமாகக் காணப்படுகின்றது. இதனை தந்ரோபாய சுற்றாடல் மதிப்பீடு என்பதன் வழியாக நீரேந்து பிரதேசங்கள், நிலத்தடி நீர் நிரப்பு பிரதேசங்கள் மற்றும் கிழக்கு மாகாணத்தினுள் நீரைப் பாதுகாக்க வேண்டிய தேவைப்பாடுள்ள ஏனைய பிரதேசங்கள் என்பனவற்றை இனங்கண்டு அவற்றைப் பாதுகாக்கின்ற அதேவேளை நீர் பிரித்தெடுக்கும் முகாமை செய்வதற்காகவும், மீள்பாவனைக்குட்படுத்திக்கொள்ள அனைத்து வர்த்தக, கைத்தொழில் கட்டுமானங்களில் புதிய வழிகாட்டுதல்களையும் மீள் சுழற்சி செயல் முறைகளையும் அறிமுகப்படுத்தவுள்ளோம்.

**உணவுப்பாதுகாப்பு** – சுற்றாடல், வீட்டு விவசாயம், நீர்வள விவசாயம், நீரியல்வள விவசாயம் என்பனவற்றை பிரசித்தமடையச் செய்து இளைஞர் சிறு முயற்சியாண்மையாளர் சமூகம் ஒன்றை கட்டியெழுப்புவதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்கின்றோம். அனைத்து விசாய உற்பத்திகளுக்கும் ஒருகிணைந்த தரவுத்தளம் ஒன்று அமைக்கப்பட்டு அனைத்து உற்பத்தி முறைகள், நிலப்பரப்பு, சேதன மற்றும் உயிரியல் பசளைகளின் கையிருப்பு, பயிர் மற்றும் விலங்குகளின் இனங்கள் போன்றவற்றை துல்லியமாக இனங்கண்டு பாராம்பரிய ஒருங்கிணைந்த பீடைக்கட்டுப்பாட்டு முறைமையினை நவீன முறைமைகளுடன் ஒருங்கிணைத்து மாகாணத்திற்கான சுற்றுச்சூழல் நட்புமுறை பீடை முகாமைச்சட்டம் ஒன்றை விருத்தி செய்து பூரணமான அணுகுமுறையாக ஒன்றிணைக்கவுள்ளோம். உள்ளூர் சந்தைக்கான விவசாய உற்பத்திப் பொருட்களின் தரத்தினை இலகுபடுத்தவும், ஏற்றுமதி சந்தைக்காக தரம்வாய்த பொதியிடல், பூகோள அமைவிட சான்றிதழ் முறைமைகள் போன்ற உற்பத்திச் சந்தைக்கான புதிய திட்டமொன்றை அறிமுகப்படுத்தவுள்ளோம்.

**மீன்பிடித்துறை** - எமது மாகாணத்தில் மீன்பிடித்துறைசார் தயாரிப்பதற்கான தேவைகளை ஆய்வு செய்து உள்ளூர் நீர் நிலைகளை பாதுகாத்து அதை வளப்படுத்துகின்ற அதேவேளை கரையோர நீர் நிலைகளில் பாரம்பரிய மற்றும் நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி மீன்பிடி வழங்களை விரிவாக்கம் செய்வதாகும். மீன்பிடிச்சந்தை வாய்பினைப் பெறும் பொருட்டு உணவுத்துறை, சுற்றுலாத்துறை, ஏற்றுமதித்துறைச் செயற்பாடுகள் போன்றவற்றை சீரமைத்துள்ளோம்.

**கால்நடை இறைச்சி, முட்டை பால் உணவு** - சுற்றாடல் ரீதியில் அபிவிருத்தி செய்து நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி முட்டைக் கைத்தொழில், இறைச்சி, சேதனப் பால் உணவு உற்பத்தி போன்றவற்றை அபிவிருத்தி செய்வதற்கான பாரம்பரிய ரீதியிலான ஊக்கப்படுத்தல்களை வழங்கள். மேலும், பயிற்சிகள் சான்றிதழ்களை வழங்குவதன் ஊடாக மேலதிக வருமானத்தை பெற்றுக்கொள்ளும் செயற்பாடுகளுக்காக ஆதரவு வழங்கி குறித்த உற்பத்திக்கான சந்தை வாய்ப்புக்களை பரந்துபட்ட சுழற்சி முறையின் ஊடாக, மக்கள் மத்திய சபைகள் மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்கள் வாயிலாக வழங்கப்படுவதுடன் உணவுப் பாதுகாப்பு இலக்குடன் இணைந்து போகும் வகையில் அரச நிறுவனங்களின் வழியாக வெளிப்புற சந்தை வாய்ப்புக்களையும் பெற்றுக்கொள்தலாகும்.

**சுகாதாரம்** - சுதேச, அலோபதி மற்றும் பூரண சுகாதார பராமரிப்பு வழங்குநர் மற்றும் உற்பத்தியாளர்களை பதிவு செய்து அவர்களை ஒருங்கிணைப்பதற்கு ஒரு புதிய முறைமை ஒன்றை மாகாணத்தில் அறிமுகப்படுத்தி அனைத்து சுகாதார சேவை வழங்கும் நிலையங்களையும் வினைத்திறன் மிக்க ஒருங்கிணைப்புக்கும், முகாமைத்துவத்திற்கும், புவியியல் ரீதியான வசதிகளை பகிர்தளிக்கவும், பூரண தடுப்பு முறைகள் மற்றும் அவதான சிகிச்சைக்கான சுகாதார பராமரிப்பு முறைகளை வழங்குதல். தேசிய சுதேச வைத்திய சங்கம், இலங்கை ஆயுர்வேத வைத்திய சங்கம் போன்றவற்றின் முன்னாய்வுகளை மேற்கொள்ளும் கோரிக்கையை முன்வைத்து அனைத்து நிபுணர்கள், கிழக்கு மாகாணத்தில் தேவைப்படும் மூலப்பொருட்கள் சம்பந்மான பொதுத்தரவுத்தளம் ஒன்றை ஸ்தாபிக்கவுள்ளோம்.

11ஆம் பக்கம் பார்க்க...



# பிராந்திய செய்திகள்



## சிஐடி எனக்கூறி கொள்ளை– 6 பேர் கைது

மட்டக்களப்பு வெல்லாவெளி பிரதேசத்தில் பொலிஸ் சிஐடி என கூறி வீடு ஒன்றில் பெண் ஒருவரை கட்டிவைத்துவிட்டு அவரின் காதில் இருந்த தோடு மற்றும் தங்க சங்கிலி உட்பட 2 அரை பவுண் தங்க நகைகளை கொள்ளையடித்துச் சென்ற 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது சந்தேகநபர்களிடம் இருந்து கார் ஒன்றும் மற்றும் கொள்ளையடிக்க பயன்படுத்திய கோடரி . கத்தி, 3 கையடக்க தொலைபேசிகள் என்பவற்றை மீட்டுள்ளதாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது. கடந்த 5 ம் திகதி வெல்லாவெளி பிரதேசத்தில் சிஐடி என தெரிவித்து கொள்ளையர்கள் பெண் ஒருவரை கட்டி வைத்து அவரின் காதில் இருந்த தோடு மற்றும் தங்க சங்கிலி உட்பட 2 அரை பவுண் தங்க நகைகளை கொள்ளையடித்து தப்பிச் சென்றனர். இதில் சந்தேகத்தில் இருவரை கைது செய்து விசாரணைகளை பொலிசார் மேற்கொண்டு வந்தனர்.

விசாணையில் அவர்கள் வழங்கிய தகவலுடன் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்கவின் ஆலோசனைக்கமைய மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸ் பரிசோதகர் பி.எஸ்.பி பண்டார தலைமையிலான பொலிசார் சம்பவ தினமான அன்று (12) ஓட்டுமாவடி, கிரான் பிரதேச செயலக பிரிவிலுள்ள வட்டவான். மற்றும் வெல்லாவெளி பிரதேசத்தைச் சேர்ந்த 4 பேரை கைது செய்தனர்.

இதில் 31, 34, 29, 31 வயதுடையவர்கள் கைது செய்துள்ளதாகவும் இவர்கள் கடந்த காலத்தில் குற்றச் செயல் காரணமாக கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த போது 4 பேரும் நண்பர்களாகி சிறையில் இருந்து வெளியில் வந்ததும் கொள்ளையடிப்பதற்கான திட்டங்களை தீட்டி வாடகைக்கு கார் ஒன்றை எடுத்துக் கொண்டு கடந்த 5 ம் திகதி வெல்லாவெளி பிரதேசத்தில் குறித்த வீட்டினுள் பொலிஸ் சிஐடி என தெரிவித்து உள் நுழைந்து குறித்த பெண்ணின் கைகளை பின்பக்கமாக கட்டிவைத்துவிட்டு அவரின் காதில் இருந்த தோடு மற்றும் கழுத்தில் இருந்த தங்கசங்கலி உட்பட 2 அரை பவுண் தங்க ஆபரணங்களை கொள்ளையடித்து தப்பியுள்ளதாகவும் தெரிவித்தனர். இதனை தொடர்ந்து கொள்ளையடித்த தங்க ஆபரணங்களை நிதி நிறுவனம் ஒன்றில் ஒரு இலச்சத்து 91 ஆயிரம் ரூபாவுக்கு ஈடுவைத்து அந்த பணத்தை பங்கு கொண்டுள்ளதாக பொலிசாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதுடன் கொள்ளைக்கு பயன்படுத்திய வாடகைக்கார் ஒன்று. 3 கையடக்க தொலைபேசி, கத்தி கோடரி என்பன மீட்கப்பட்டுள்ளன. இச் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட 6 பேரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



## பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 5,000 ரூபாய் கொடுக்க முடியாது!

பெருந்தோட்டங்களில் தற்பொழுது நிலவுகின்ற முறை. மாற்றம் பெறாத வரை பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான 5,000 ரூபாவை பெற்றுக் கொடுக்க முடியாது என பெருந்தோட்ட நிறுவனங்களின் முக்கியஸ்தர்கள் தெரிவிக்கின்றனர் என தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி.சில்வா தெரிவித்துள்ளார். பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கும் 5,000 ரூபாவை பெற்றுக் கொடுக்கும் முகமாக தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி.சில்வா தலைமையில் கலந்துரையாடல் ஒன்று அன்று முன்தினம் (11) தொழில் அமைச்சில் இடம்பெற்றது. இந்த கலந்துரையாடலில் பெருந்தோட்ட கம்பனிகளின் அதிகாரிகள் கலந்து கொண்டனர். இதன்போது கருத்து தெரிவித்த பெருந்தோட்ட கம்பனிகளின் அதிகாரிகள். கடந்த காலங்களில் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 1,000 ரூபா சம்பளம் அதிகரிப்பை மேற்கொண்டுள்ளதன் காரணமாக கம்பனிகளுக்கு உற்பத்தி செலவானது பாரிய அளவில் அதிகரித்துள்ளது. அதே போல உலக சந்தையில் தற்பொழுது தேயிலையின் விலை அதிகரித்திருந்தாலும் அதன் பலனை பெருந்தோட்ட கம்பனிகளுக்கு பெற்றுக் கொள்ள முடிவதில்லை. அதனை இடைத்தரகர்களே பெற்றுக் கொள்கின்றனர். எனவே இவ்வாறான ஒரு நிலையில் பாரிய தொகையை வழங்குவது என்பது முடியாது காரியமே. தற்பொழுது நாட்டில் இரசாயன உரத்திற்கான தட்டுப்பாடு நிலவுவதால் தேயிலை செடிகளுக்கு உரிய நேரத்தில் இரசாயன உரங்களை பெற்றுக் கொடுக்க முடியாத நிலைமை காரணமாக தேயிலை உற்பத்தியிலும் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என சேவைகள் வழங்கும் சங்கத்தின் பணிப்பாளர் நாயகம் மங்கள யாபா இதன்போது சுட்டிக் காட்டினார்.

இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமை காரணமாகவும் பெருந்தோட்டங்களில் விளைச்சலில் ஏற்பட்டுள்ள பின்னடைவு காரணமாகவும் இந்தளவு பாரிய ஒரு தொகையை எந்த காரணம் கொண்டும் பெருந்தோட்ட கம்பனிகளால் செலுத்த முடியாது நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் மங்கள யாபா மேலும் குறிப்பிட்டுள்ளார். ஏதாவது ஒரு விகிதத்தில் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு கொடுப்பனவு ஒன்றை பெற்றுக் கொடுக்க முடியுமா? என அமைச்சர் இதன்போது கம்பனிகளிடம் வினவிய பொழுது எந்த காரணம் கொண்டும் ஒரு சிறு தொகையை கூட வழங்க முடியாது என கம்பனிகள் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே வேலை இன்று நடைமுறையில் இருக்கின்ற இந்த நிலைமையை மாற்றி அமைக்க வேண்டும். எவ்வாறான ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதை கம்பனிகளால் முன்வைக்க முடியும். அந்த திட்டத்தை நடைமுறைப்படுத்தி அதன் மூலம் இலாபத்தை பெற்றுக் கொண்டு தொழிலாளர்களுக்கான கொடுப்பனவை அதிகரிக்க முடியும் என கம்பனிகளின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கம்பனிகளால் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்களை அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதாக இதன்போது தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி.சில்வா தெரிவித்தார். இந்த கலந்துரையாடலில் அமைச்சருடன் தொழில் அமைச்சின் செயலாளர் மாபா பதிரண, தொழில் ஆணையாளர் நாயகம் சட்டத்தரணி பிரபாத் சந்திரகீர்த்தி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## இலங்கை மின்சார சபைக்கு நாளாந்தம் 1500 மெற்றிக் தொன் டீசல்

இலங்கை மின்சார சபைக்கு ஜனவரி 18 ஆம் திகதி வரை நாளொன்றுக்கு 1500 மெற்றிக் தொன் டீசல் வழங்குவதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளதாக அதன் தலைவர் தெரிவித்தார்.

### *புகையிரத வேலைநிறுத்தம் நிறைவு*

புகையிரத நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கம் முன்னெடுத்திருந்த அடையாள வேலை நிறுத்தம் முடிவுக்கு வந்துள்ளது.

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 24 மணி நேர அடையாள வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போக்குவரத்து அமைச்சின் செயலாளருடன் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து தொழிற்சங்க நடவடிக்கை கைவிடப்பட்டதாக நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் தலைவர் சுமேதா சோமரத்ன தெரிவித்துள்ளார்.

## எரிவாயு ஒழுங்குமுறைக்கான விசேட வர்த்தமானி

LP எரிவாயு இறக்குமதி மற்றும் விநியோகம் தொடர்பான நியமங்களை உருவாக்குவதற்கும். ஒழுங்குபடுத்துவதற்கும் இலங்கை தர நிர்ணய நிறுவனத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் படி, LP எரிவாயு இறக்குமதிகள், எரிவாயு சிலிண்டர்கள், ரெகுலேட்டர்கள் மற்றும் வால்வுகள் போன்றவற்றின் இறக்குமதி மற்றும் விநியோகத் தரங்களை அமைக்கவும் ஒழுங்குபடுத்தவும் தர நிர்ணய நிறுவனம் அதிகாரம் கொண்டுள்ளது.

## யாழ்.பல்கலை மாணவர்களுக்கு இடையில் மோதல் – இருவர் காயம்!

யாழ்ப்பாணம் விஞ்ஞான பீட மாணவர்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் இருவர் காயமடைந்த நிலையில், யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட திருநெல்வேலி பகுதியில் உள்ள வீடொன்றில் வாடகைக்கு தங்கி இருந்து கல்வி கற்று வரும் விஞ்ஞான பீடம் மூன்றாம் வருடத்தை சேர்ந்த மாணவர்களின் வீட்டிற்குள் புகுந்த நான்காம் வருட மாணவர் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சம்பவத்தில் காயமடைந்த மூன்றாம் வருடத்தினை சேர்ந்த இரு மாணவர்கள் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் நான்காம் வருட மாணவன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை, கடந்த ஒருமாத கால பகுதிக்குள் விஞ்ஞான பீட மாணவர்களுக்கு இடையில் இடம்பெற்ற மூன்றாவது மோதல் சம்பவம் இதுவாகும்.

சில வாரங்களுக்கு முன்னர் பகிடிவதை கட்டளையை மீறியதாக முதலாம் வருட மாணவன் மீது தாக்குதல் மேற்கொண்ட சிரேஷ்ட மாணவன் ஒருவர் பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகளில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 43 இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

இந்திய மீனவர்கள் 43 பேரின் விளக்கமறியல் மேலும் இரண்டு வாரங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு அருகே கடந்த வருடம் டிசம்பர் 19 ஆம் திகதி சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் 43 பேர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டதுடன் 6 படகுகளும் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் இந்த வழக்கு எடுக்கப்பட்ட நிலையில், இவர்களுக்கான விளக்கமறியலை ஜனவரி 27 ஆம் திகதி வரை நீடிக்க ஊர்காவற்றுறை நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

## உரப்பிரச்சினை: தேங்காய் விலை மீண்டும் அதிகரிப்பு

விளைச்சல் குறைந்துள்ளதால் சந்தையில் தேங்காய் ஒன்றின் விலை 10 முதல் 15 ரூபா வரை அதிகரித்துள்ளது.

தற்போது சந்தையில் தேங்காய் ஒன்று 80 ரூபா தொடக்கம் 95 ரூபாவுக்கும் இடைப்பட்ட விலையில் விற்பனை செய்யப்படுவதாக இலங்கை தென்னை உற்பத்தியாளர் சங்கம் தெரிவித்துள்ளது. அண்மையில் தேங்காய் ஒன்றின் விலை 60 ரூபாவாகக் குறைந்திருந்தது.

எவ்வாறாயினும், உரப்பிரச்சினை காரணமாக தோட்டங்களில் தேங்காயின் விளைச்சல் குறைவடைந்துள்ளதால், தேங்காயின் விலை அதிகரித்துள்ளதாக இலங்கை தென்னை உற்பத்தியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது நாட்டின் மாதாந்த தேங்காய் உற்பத்தி 200 முதல் 250 மில்லியன் தேங்காய்களாகும்.



# சினிமா துளிகள்



## முதன்முறையாக விவாகரத்துக்கு பிறகு சமந்தா பற்றி பேசிய நாக சைத்தன்யா

கடந்த வருடம் தமிழ் சினிமாவில் ரசிகர்களுக்கு அதிர்ச்சி கொடுக்கும் வகையில் ஒரு பிரபலத்தின் சொந்த வாழ்க்கையில் ஒரு விஷயம் நடந்தது. நடிகை சமந்தா மற்றும் நாக சைத்தன்யா இருவரும் விவாகரத்து பெற்றார்கள். விவாகரத்து குறித்து சமந்தா நிறைய பேசிவிட்ட நிலையில் நாக சைத்தன்யா பிரிவு பற்றி ஒரு பேட்டியில் பேசியுள்ளார்.

அதில் அவர், பிரிந்திருப்பதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. எங்கள் தனிப்பட்ட மகிழ்ச்சிக்காக நாங்கள் இருவரும் சேர்ந்து எடுத்த முடிவு அது. சமந்தா மகிழ்ச்சியாக இருந்தால், நானும் மகிழ்ச்சியாக இருப்பேன். எனவே இது போன்ற ஒரு சூழலில் விவாகரத்துதான் சிறந்த முடிவு என பேசியுள்ளார். அவர்கள் சந்தோஷத்திற்காக பிரிந்துவிட்டோம் என்று கூறினாலும் ரசிகர்களுக்கு இந்த சூப்பர் ஜோடி பிரிந்தது வருத்தம் தான்.



# ராய் லட்சுமிக்கு ‘கோல்டன் விசா’

மோகன்லால், மம்முட்டி, டோவினோ தாமஸ், துல்கர், திரிஷாவை தொடர்ந்து ராய் லக்ஷ்மிக்கு கோல்டன் விசா வழங்கப்பட்டது.

அமீரக அரசு கடந்த 2019-ம் ஆண்டு விசா வழங்கும் நடைமுறைகளில் பல்வேறு மாற்றங்களை கொண்டு வந்தது. இதன் ஒரு பகுதியாக அமீரகத்தில் வசிக்க விரும்பும் வர்த்தகர்கள், விளையாட்டு வீரர்கள், திரைபிரபலங்கள், முக்கிய பிரமுகர்கள் உள்ளிட்டோர் அமீரகத்தை சேர்ந்த நிறுவனம் அல்லது தனி நபர் ஆதரவு இல்லாமல் 5 அல்லது 10 ஆண்டுகளுக்கு வசிக்கும் வகையில் கோல்டன் விசா அறிமுகம் செய்யப்பட்டது. இந்த விசாவானது புதுப்பித்துக் கொள்ளும் வசதி கொண்டது ஆகும்.

ஏற்கனவே நடிகர்கள் ஷாருக்கான், சஞ்சய்தத், மோகன்லால், மம்முட்டி, டோவினோ தாமஸ், தயாரிப்பாளர் போனி கபூர், டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா, பிருத்விராஜ், துல்கர் சல்மான், திரிஷா ஆகியோருக்கு கோல்டன் விசா வழங்கிய அமீரக அரசு, தற்போது பிரபல நடிகை ராய் லட்சுமிக்கு கோல்டன் விசா வழங்கி உள்ளது.

இவர் காஞ்சனா, மங்காத்தா, அரண்மனை போன்ற படங்களில் நடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.



## மாஸ்டர் படத்தின் நினைவுகளை பகிர்ந்த விஜய் சேதுபதி

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் - விஜய் சேதுபதி இணைந்து நடித்த மாஸ்டர் படத்தின் நினைவுகளை விஜய் சேதுபதி அவருடைய சமூக வலைத்தளத்தில் பகிர்ந்து ரசிகர்களை உற்சாகப்படுத்தியுள்ளார்.



விஜய் - விஜய் சேதுபதி இணைந்து நடித்த மாஸ்டர் திரைப்படம் பெரிய எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் வெளியாகி விமர்சன ரீதியாகவும் வசூல் ரீதியாகவும் நல்ல வரவேற்பைப் பெற்றது. சினிமாவின் முன்னணி நடிகர்கள் ஒன்றாக இணைந்து நடிக்க வேண்டும் என்ற ரசிகர்களின் எதிர்பார்ப்பை இயக்குனர் லோகேஷ் கனகராஜ் இப்படத்தில் நிறைவேற்றி வைத்தார். இப்படத்தில் விஜய் சேதுபதி வில்லனாக நடித்தார். மாளவிகா மோகனன், நாசர், சாந்தனு, ஆண்ட்ரியா உள்ளிட்ட பலர் நடித்த இப்படத்திற்கு அனிருத் இசையமைத்தார்.

கொரோனா காலகட்டத்துக்குப் பிறகு திரையங்கில் வெளியான முதல் பெரிய பட்ஜெட் திரைப்படம். கடந்த ஆண்டு அதிக முறை ட்வீட் செய்யப்பட்ட படமாக ‘மாஸ்டர்’ திரைப்படத்தை ட்விட்டர் நிறுவனம் அறிவிக்கப்பட்டது. இந்த படம் ரிலீஸாகி இன்றுடன் ஒரு வருடம் நிறைவடைந்துள்ளது. இதனை அவர்களுடைய ரசிகர்கள் கொண்டாடி வருகின்றனர். இந்நிலையில் விஜய் சேதுபதி மாஸ்டர் படத்தின் மேக்கிங் காட்சிகளை பதிவிட்டு மாஸ்டர் வெளியாகி ஓராண்டு நிறைவான சந்தோசத்தை வெளிபடுத்தியுள்ளார். இந்த பதிவு அவர்களின் ரசிகர்களை இன்னும் உற்சாகப்படுத்தியுள்ளது.

இப்படத்தை குறித்து சினிமா பிரபலங்கள் அவர்களின் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர். இயக்குனர் லோகேஷ் கனகராஜும் அப்படத்தில் பணியாற்றிய அனைவருக்கும் நன்றி தெரிவித்துள்ளார்.

## விஜய் சேதுபதி படத்தில் ஷிவானி



பிக்பாஸ் நிகழ்ச்சியின் மூலம் பிரபலமாகி பிறகு படங்களில் நடிக்க துவங்கியிருக்கும் ஷிவானி தற்போது வெளியிட்டிருக்கும் புகைப்படம் அனைவரையும் சிந்திக்க வைத்துள்ளது.

தனியார் தொலைக்காட்சியில் ஒளிபரப்பான பகல் நிலவு என்ற சீரியல் மூலம் நடிகையானவர் ஷிவானி நாராயணன். அதன் பிறகு கடைக்குட்டி சிங்கம், இரட்டை ரோஜா ஆகிய சீரியல்களிலும் ஹீரோயினாக நடித்தார். கடந்தாண்டு நடந்த பிக்பாஸ் 4-வது சீசனில் போட்டியாளராக கலந்துகொண்டு மிகவும் பிரபலமானார்.

அதன்பின் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் உருவாகி வரும் விக்ரம் படத்தில் விஜய் சேதுபதிக்கு ஜோடியாக நடிப்பதாக தகவல் வெளியானது. இந்நிலையில் அவர் பகிர்ந்த ஒரு புகைப்படம் சமூக வலைத்தளத்தில் வைரலாக பரவிவருகிறது.

நடிகை ஷிவானி இயக்குனர் பொன்ராமுடன் எடுத்த புகைப்படத்தை பகிர்ந்து அதில் சிறந்த இயக்குனருடன் பணிபுரிவது பெருமையாக உள்ளது என்று குறிப்பிட்டு பதிவிட்டுள்ளார். இந்த புகைப்படம் அனைவரையும் இது எந்த திரைப்படமாக இருக்கும் என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. இதனை குறித்த அறிவிப்பு அதிகாரபூர்வமாக வெளியாகும் என்று தெரிகிறது.

## நடிகர் விஷாலுடன் இணைந்த ஜி.வி.பிரகாஷ்



நடிகர் விஷாலின் அடுத்த படமான மார்க் ஆண்டனி படத்தில் இசையமைப்பாளரும் நடிகருமான ஜி.வி.பிரகாஷ் குமார் இணைந்திருக்கிறார். நீண்ட இடைவெளிக்கு பிறகு இணையும் இந்த கூட்டணியை எதிர்பார்க்கும் ரசிகர்கள்.

நடிகர் விஷால் நடிப்பில் தற்போது ‘வீரமே வாகை சூடும்’ திரைப்படம் உருவாகி வருகிறது. இதனை தொடர்ந்து அவர் மார்க் ஆண்டனி என பெயர் சூட்டப்பட்ட திரைப்படத்தில் நடித்து வருகிறார். விஷாலின் 33வது படமான இதை திரிஷா இல்லனா நயன்தாரா, அன்பானவன் அசராதவன் அடங்காதவன் போன்ற படங்களை இயக்கிய ஆதிக் ரவிச்சந்திரன் இயக்குகிறார்.

இப்படம் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் மற்றும் இந்தி உள்ளிட்ட 5 மொழிகளில் வெளியாகவுள்ளது. விஷாலுடன் இப்படத்தில் இயக்குனரும் நடிகருமான எஸ்.ஜே.சூர்யா நடிக்கவுள்ளதாகவும் அறிவிப்பு வெளியானது. இதனை தொடர்ந்து இப்படத்திற்கு ஜி.வி பிரகாஷ் இசையமைக்க உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் வெளியான அசுரன், சூரரைப் போற்று போன்ற படங்களின் இசை வெற்றியை தொடர்ந்து ஜி.வி.பிரகாஷ் இசையமைக்கப்போகும் இப்படத்திற்கு எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

இதற்கு முன்பு கடந்த 2014 ஆம் ஆண்டு விஷால் நடிப்பில் வெளியான "நான் சிகப்பு மனிதன்" படத்திற்கு ஜிவி பிரகாஷ் இசையமைத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# வடகிழக்கு பிரிவினைவாதத்திற்கு வித்திட்டவர் கருணா அம்மான் நான் இல்லை – சி.சந்திரகாந்தன்(பிள்ளையான்)

**முன்னாள் முதலமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்,அபிவிருத்திக்குழு தலைவர், தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் கட்சியின் தலைவருமான சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) அவர்களுடனான சிறப்பு நேர்காணல்**

கடந்தவார தொடர்ச்சி..

**கேள்வி : கடந்த காலத்திலே ஹிஸ்புல்லா அவர்களை ஆதரித்து தான் உங்களுடைய பதவியை தக்க வைத்துக்கொள்வதாக செய்திகள் வருகின்றனவே இது உண்மையா?**

பதில் : முதலாவதாக நடந்த தேர்தல் மிகவும் சிக்கலான தேர்தல். இதிலே தமிழ் தேசிய கூட்டமைப்பு போட்டியிடவில்லை. இருந்தாலும் தமிழ் தேசிய கூட்டமைப்பு ரவூப் ஹக்கீம் அவர்களைப் போன்றவர்கள் வெல்ல வேண்டும் என்று மறைமுகமாக ஆதரவு வழங்கியிருக்கிறார்கள். ஐக்கிய தேசிய கட்சிக்கு வாக்களியுங்கள் என்று துண்டுப்பிரசுரங்களும் வழங்கப்பட்டன. சுரேஸ் பிரேமச்சந்திரன் உயிருடன் இருக்கின்றார் கேட்டுப்பாருங்கள். அவருடைய அணியினர் கிராம மட்டங்களில் கூட்டங்களை நடத்தினார். தமிழ் தேசிய கூட்டமைப்பும் அதற்கு உதவி செய்தது. ஆகவே அந்த நேரத்தில் அவர்கள் வெல்லக்கூடாது. ஆளுங்கட்சியுடன் நாங்கள் கிழக்கு மாகாணத்தை மீட்டு கிழக்கு மாகாணத்திற்கு ஒரு அதிகாரப்பகிர்வை வழங்க வேண்டும் என்று அரசாங்கம் எடுத்த முடிவை அமுலாக்கின்ற பொழுது எங்களுக்கு இருந்த ஆட்சி அமைக்கக்கூடிய அனைத்த வழிகளிலும் நாங்கள் ஆராய்ந்தோம். அந்த வகையிலே ஹிஸ்புல்லா அவர்களும் எங்களுடன் இணைந்து போட்டியிட்டு வெற்றிபெற்றிருந்தார். அவர் முதலமைச்சராக வரவேண்டும் தான் ஒரு பழைய அரசியல்வாதி என்று கேட்டால் அதற்கு அரசாங்கம் இடம்கொடுக்கவில்லை. எனவே அவர் எங்களுடன் இணைந்து ஆட்சி செய்தார். அரசியலில் அந்த நேரம் அதுவொரு பெரிய பிழையாக இருக்கவில்லை. ஆனால் இன்று மிகப்பெரும் பேசும்பொருளாக ஹிஸ்புல்லா அவர்கள் மாறியிருக்கின்றார். அதனோடு இதனையும் தற்பொழுது ஒப்பிட்டு பார்க்க முடியாது.

**கேள்வி : தமிழ் மக்களுக்கு தான் அநீதிகளை விளைவிக்கும் வகையில் காளி கோவிலை அமைத்தேன் கோவில்களை இடித்தேன் என, தேர்தல் பேச்சுக்காக பேசியிருந்தாலும் கூட அவர் ஆணித்தரமாக நான் பள்ளிவாசல்களை கட்டுவதற்காக கோவிலை உடைத்தேன் என கூறியிருந்தார் அப்படிப்பட்ட ஒருவருடன் நீங்கள் நட்புறவு கொள்வதோ அல்லது தொடர்ந்து பயணிப்பதால் எந்தவித பயனும் அற்றுப்போகும் தானே?**

பதில் : இது நடந்து முடிந்த கதை. நானும் அவர் பேசியதை எல்லாம் கேட்டிருக்கின்றேன். வாழைச்சேனையிலே அவர் அரசியலுக்காக கோவிலை உடைத்தோம் என்றெல்லாம் பேசியிருந்தார். இவையெல்லாம் நாங்கள் மாகாணசபை தேர்தலிலே அரசியலுக்கு வரமுதல் நடந்த சம்பவங்களை அரசியலுக்காக எடுத்துக்கொள்ளும் விடயங்கள் அந்த விடயங்களை நாங்கள் தற்பொழுது பேசி எந்த பயனும் இல்லை.

**கேள்வி : சாணக்கியன் அவர்கள் உங்களுடைய கட்சியிலே கடந்த காலங்களில் உங்களுடன் செயற்பட்டார். சிறிலங்கா சுதந்திர கட்சியிலே போட்டியிட்டவர். தற்பொழுது உங்களுக்கு எதிரான கோசங்களை முன்வைக்கின்றார். நீங்கள் ஒரு மண் மாபியா கடத்தல் போன்றவற்றை செய்வதாகவும் வியாழேந்திரன் அவர்களும் இப்படி பல கொலை கொள்ளைகளை செய்கின்றார் போன்ற விடயங்களை அவர் முன்வைத்தார். உங்கள் மீது அவர் ஒரு மண்மாபியாவாக செயற்படுவதாக அவர் சில ஆதாரங்களிலே சிவனேசன்துரை சந்திரகாந்தன் என்ற பெயர் இருப்பதாக கூட இன்று தொலைக்காட்சி நேர்காணலிலே காட்டினார். தற்பொழுது உங்களை உங்களுடைய கட்சியிலிருந்து விலகி தமிழ் தேசிய கூட்டமைப்பிலே ஏதோ வங்குரோத்து அரசியலுக்காக மாறியிருக்கலாம் அல்லது அவருடைய விருப்பம் அது.இருந்தாலும் உங்களிடத்தில் இருந்து அவர் பிரிந்து சென்று உங்களுக்கு எதிரான கருத்துக்களை இவ்வாறு முன்வைத்துக்கொண்டிருக்கின்றார். இது உண்மையா?**

பதில் :உண்மையிலே சாணக்கியன் போன்றவர்கள் ஒரு வித்தியாசமான போக்கிலே செயற்படவேண்டும் என்பதை நான் எதிர்பார்த்தேன். அவர் உண்மையிலே தேசியம் என்பதை போலிக்காக போட்டிருக்கின்றார். அரசியல் வெற்றிக்காக அவர் தற்காலிகமாக போட்டுக்கொண்ட ஒரு உடை தான் அது தமிழ் தேசியம். அவரைப்போன்றவரை படித்த முட்டாள் என்று சொல்லுவார்கள். நாங்கள் வெளிநாட்டிலே படித்தோம் ஐரோப்பாவிலே கல்வி கற்றோம் என்றால் அந்த ஐரோப்ப நடைமுறைகளை அவர் இங்கு பின்பற்றவில்லை. பாராளுமன்றத்திலே அவர் கூறிய விடயங்கள் நூற்றுக்கு நூறு வீதம் பிழையான விடயங்கள். அவர் சந்திரகாந்தன் என்ற என்னுடைய பெயரிலே மண் கடத்தல் இடம்பெற்றது என்று காட்டினால் நான் இந்த பதவியை விட்டு விலகிச் செல்வேன். அதனால் சாணக்கியன் போன்ற சின்ன பிள்ளைகளுக்கு பதிலளிப்பதில் நாம் நேரத்தை வீணடிக்க வேண்டாம். அவர் அடுத்த முறை அரசியலில் வெல்வதற்காக யோசிக்கின்றார். அல்லது என்னை தனிப்பட்ட ரீதியில் கால்புணர்ச்சியுடன் வெறுக்க கைப்பது தான் T.N.P.P யில் இருந்த வெளியேற்றலாம் என்ற எண்ணத்துடன் அவர் பேசலாம்.போலிப்பேச்சு அது.

**கேள்வி : மென்போக்கு அரசியலைப் பார்க்கின்ற பொழுது இன்று நாடளாவிய ரீதியிலே ஒரு மதவாதம் இனவாதம் தேசியவாதம் இவற்றைத்தான் இந்த அரசாங்கம் தொடர்ந்தும் கலகொட ஞானசார தேரர் மூலம் செய்துவருகின்றது. இதனை நீங்கள் எப்படி பார்க்கின்றீர்கள்?**

பதில் : ஏன் தமிழ் தேசிய கூட்டமைப்பு என்ன வாதம் செய்தது. நாங்கள் என்ன வாதத்தை முன்வைக்கின்றோம். தமிழர்களாகிய நாங்கள் என்ன வாதத்தை விதைக்கின்றோம். முற்போக்கான சிந்தனைகளை விதைக்கின்றோமா?

**கேள்வி : முற்போக்கான சிந்தனைகளை விதைக்காததனுடைய விளைவுகளைத்தானே தற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது?**

பதில் : அதுதான் முதலில் நாங்கள் என்ன செய்கின்றோம் என்பதனை பார்க்க வேண்டும். அதைப்போன்று பௌத்த தேசியவாதம் என்பதும் அப்படித்தான் வாக்களித்திருப்பதாக நாங்கள் உணர்ந்திருக்கின்றோம். அதைப்போன்று ஞானசார தேரரோடு அரசாங்கம் நேரடியாக தொடர்பு வைத்திருப்பதை எங்களால் உறுதிப்படுத்தமுடியாது. அவ்வாறு எல்லா மதங்களிலும் பிரிவுகள் இருக்கின்றது. அவரை வைத்துக்கொண்டு அரசாங்கத்தை நாங்கள் ஒரு நிலைப்பாட்டிற்கு முன்நிறுத்த முடியாது. இது பொதுவான குற்றச்சாட்டு அதனை உறுதிப்படுத்த முடியாது.

**கேள்வி : அரசியலிலே கால் பதிக்கின்ற பொழுது குற்றச்சாட்டுக்கள் எதிர் வாதங்கள் மறைவினை போன்ற விடயங்கள் வருவது வழமையானதொன்று. அதை நாங்கள் ஒருபக்கம் வைத்துக்கொண்டாலும் கூட இன்று நடைமுறை சிக்கல் ஏற்படுகின்றது. அதாவது அன்று பார்க்கின்ற பொழுது சிறைச்சாலைக்கு ரொகான் ரனவத்த அங்கு சென்று இவ்வாறு கீழ்த்தனமான முறையிலே நடந்துகொண்ட ஒருவரை நீங்கள் வரவேற்று பேசுவது என்பது அதைப் பார்க்கின்ற மக்களுக்கு ஒரு அபகடமாகத்தானே இருக்கும்?**

பதில் : சிறைச்சாலை அமைச்சர் நடந்துகொண்ட விதத்தைப் பற்றி நாடே அறுவறுப்பாக பார்த்தது. நானும் அதை கண்டித்திருந்தேன் நீங்கள் அதனை பார்க்கவில்லை என நினைக்கின்றேன் நான் சம்பந்தப்படாதவன். அரசாங்கத்தில் இருந்தவர் அப்படி செய்கின்றாரே என நான் உண்மையிலே கவலைப்பட்டேன். இப்படியான ஒரு மனிதர் இருக்கின்றார் என்று. இருந்தாலும் அதை மட்டும் பார்க்காமல் தற்பொழுது இருக்கும் சூழலிலே நாங்கள் ஏன் தமிழர்களை வித்தியாசமான முறையிலே அணுகக்கூடாது. இப்பொழுது மாகாணசபை தேர்தல் நடத்தப்படுமென கூறப்படுகின்றது. தமிழ் தேசிய கூட்டமைப்பில் வெற்றிபெற்றவர்களுக்கும் நிதி வழங்கப்படுமென கூறப்பட்டிருக்கின்றது. அதுபோன்று ஜனாதிபதியும் ஐக்கிய நாடு சபையிலும் நாங்கள் புலம்பெயர்ந்த அமைப்புடன் பேசப்போகின்றோம். பொருளாதாரத்தை கட்டியெழுப்ப எல்லோரும் முன்வாருங்கள் என்று சொல்லப்படுகின்றது. நீங்கள் சொன்னதைப்போன்று அரசாங்கம் சிங்கள பேரினவாதிகளால் உருவாக்கப்பட்ட இந்த அரசாங்கம் அல்லது ஜனாதிபதி ஒரு மாற்று சிந்தனையை பொது வெளியிலே அதுவும் ஐக்கிய நாடுகள் சபையிலே பேசுகின்ற நிலைமை உருவாகின்றது என்றால் இதை சாதகமாக பதுக்கி வைப்பதை விட்டுவிட்டு குண்டான்சட்டிக்குள்ளே குதிரை ஓட்டுவதைப்போன்று பழைய கதைகளை புளித்துப்போன கதைகளை பேசிக்கொண்டிருக்காமல் மாற்று சிந்தனைகளை முன் வைத்து முன்னேறுவதற்கான ஒரு முயற்சிகளை ஏன் ஊடகங்கள் தூண்டக்கூடாது.

**கேள்வி : பொறுப்பு வாய்ந்த சில ஊடகங்கள் கட்சி ஊடகங்களாக பணிபுரிகின்றார்கள். ரொகான் ரத்வத்த ஒரு இடத்திற்கு வருகின்றார் என்றால் அவரிடத்தில் இந்த கேள்விகளை கேட்டிருக்க வேண்டும். அவர்கள் கட்சி சார்ந்த ஊடகங்களாக செயற்படுவதால் அல்லது மொழிப்பாசை பிரச்சனையால் அவர்கள் கேட்கவில்லை. நிச்சயமாக அவர்கள் அந்த கேள்வியை கேட்டிருக்க வேண்டும். இன்று ஊடக வரம்பிலே 35 ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள் உங்களுக்கு தெரியும். இதைப்பற்றி தற்பொழுது இருக்கக்கூடிய கட்சி தலைவர்கள் கூட பேசவில்லையே. ஊடகவியலாளர்கள் மீது ஒரு குற்றத்தை சுமத்துவதாக இருந்தால் இந்த நாட்டில் இடம்பெறுகின்ற பிரச்சனைகளை சர்வதேசத்திற்கு எடுத்துரைத்தவர்கள். முக்கியமான ஊடகவியலாளர்கள் 35 பேர் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். இவர்களுக்கான நீதிதான் எங்கே. அப்படியாயின் ஊடகங்கள் எப்படி சுதந்திரமாக செயற்படுவது?**

பதில் : நீங்கள் கேட்கின்ற கேள்வி ஒரு முறைப்பாடான கேள்வி. அதாவது அவர் வந்த நேரத்தில் கேள்வி கேட்பது ஊடகத்தின் தர்மம். கேள்விக்கு பதில் சொல்லாமல் போவது என்னுடைய உரிமை அல்லது அவரது உரிமை.

**கேள்வி : சிறைச்சாலை விவகாரங்களுக்கு பொறுப்பாக இருப்பவர் இவ்வாறு நடந்து கொண்டமை பிழை என நீங்கள் கூறியதை நாங்கள் பார்த்தோம். அது ஏற்றுக்கொள்ளக்கூடியதொன்று ஆனால் அரசியல் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களை விடுதலை செய்வதற்காக நீங்கள் என்ன குரல் கொடுத்திருக்கின்றீர்கள்? இதற்கான நடைமுறை சாத்தியம் என்ன?**

பதில் : நானும் ஒரு கைதியாக இருந்து வந்த அடிப்படையில் பயங்கரவாத தடைச்சட்டம் என்றால் என்ன என்பது எனக்கு தெரியும். சாதாரணமாக ஒரு பொதுவெளியில் பொது கருத்தை வைப்பதைவிட ஏற்கனவே நான் கூறியிருந்தேன் பயங்கரவாத தடைச்சட்டம் எதற்காக பாவிக்கின்றார்கள் என்பது தெரிந்திருந்தும் இன்னமும் பயங்கரவாத தடைச்சட்டத்தை பாவிப்பதற்கான முறைமையை நாங்கள் அழுத்தம் செய்கின்றோம். சுமந்திரனுக்கு கிளைமோர் வைத்து வந்தவர்களும் இருக்கின்றார்கள். விடுதலை போராட்ட காலங்களில் பல கொலைகளை செய்துவந்தவர்களும் இருக்கின்றார்கள். குற்றத்தை ஒப்புக்கொண்டவர்களும் இருக்கின்றார்கள். வழக்கு முடிந்து தண்டனை அனுபவித்தவர்களும் இருக்கின்றார்கள். அனைவரையும் ஒரே விதத்தில் பார்க்க முடியாது. பயங்கரவாத தடைச்சட்டத்தில் தேவையில்லாமல் கைது செய்யப்பட்டிருப்பவர்களையும் விரைவாக விடுதலை செய்யப்போகின்றார்கள். அதைவிட ஈஸ்டர் குண்டுத்தாக்குதலின் போது கைது செய்யப்பட்டவர்கள் நூற்றுக்கணக்கானவர்கள் இருக்கின்றார்கள். அவர்களையும் இதில்இணைக்கலாமா இணைக்க முடியாது. நான் என்ன அடிப்படையில் நாங்கள் பார்க்கலாமே தவிர வடக்கு கிழக்கிலே வைக்கின்ற கருத்தை மட்டும் பார்க்க முடியாது.

அரசாங்கம் என்றால் பொதுவானதொரு அமைப்பு. அரசாங்கத்திற்குள் விமர்சனங்கள் இருக்கின்றது. அதைப்போன்று அடுத்த தேர்தலுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கின்றது. பல விடயங்களை பார்த்தால் பொதுவாக பயங்கரவாத தடைச்சட்டம் என்பது கடுமையானது விரும்பியோ விரும்பாமலே இந்த நாட்டில் ஏற்பட்ட பிரச்சனைகள் கொண்டுவரப்பட்டது. அது அகற்றப்பட வேண்டும், மென்மையாக்கப்பட வேண்டும் என்பதில் நான் உடன்பட்டிருக்கின்றேன். அதைப்போன்று தற்பொழுது இருக்கின்ற தமிழ் அரசியல் கைதிகள் என்று சொல்லப்படுபவர்கள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்படவும் வேண்டும்.

**கேள்வி : நீங்கள் வடக்கு கிழக்கிலே அதிகூடிய வாக்குகளை பெற்ற ஒருவர். அந்த அடிப்படையில் மக்கள் உங்கள் மீது நல்ல நம்பிக்கையை கொண்டிருந்தார்கள் என்பது புலப்படுகின்றது. அந்த வகையிலே இந்த அரசாங்கம் ஏன் உங்களுக்கு ஒரு இராஜாங்க அமைச்சர் பதிவியைக்கூட வழங்கவில்லை? பலராலும் எதிர்பார்க்கப்பட்டது உங்களுக்கு வழங்கப்படும் என்று.**

பதில் :இராஜாங்க அமைச்சுப் பதவி ஒன்று தந்திருந்தால் நான் அதனை எடுத்துக்கொள்ள மாட்டேன் அப்படியொரு கருத்தாடலும் இருந்தது. முதலாவது இந்த அரசாங்கம் அமைக்கப்படுகின்ற பொழுது நான் சிறைச்சாலையிலே இருந்தேன். சிறைச்சாலையிலிருந்து விடுதலையாகின்ற பொழுது அதன் பின்னர் தான் நான் மாவட்ட அமைச்சர் குழுத் தலைவர் பதவியை ஏற்றுக்கொண்டேன். தற்பொழுது இருக்கின்ற சூழலில் நான் பார்க்கின்றேன் பொருளாதார நெருக்கடி, கொரோனா தொற்று காரணமான அதில் பொறுப்பேற்றிருக்கின்ற அமைச்சர்கள் என்ன செய்கின்றார்கள் என்ற விமர்சனங்கள் எல்லாம் இருக்கின்ற பொழுது நான் தனித்துவமான கட்சி என்ற அடிப்படையிலே இப்படி இருப்பது தற்போதைய காலத்திற்கு பொருத்தம் என்ற நிலைப்பாடு கூட எங்கள் மத்தியில் இருக்கின்றது.

**கேள்வி : தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வு திட்டம் என்பது வழங்கப்படும் என்று இந்த அரசாங்கத்தில் உங்களுக்கு நம்பிக்கை இருக்கின்றதா?**

பதில் : இந்த அரசாங்கம் மாகாணசபையை நடத்துவது என்பதே மிகப்பெரிய விடயம் அதைப்போன்று இதனை நடத்தி அதிகாரப்பகிர்வில் ஜனாதிபதி கூறியிருக்கின்றார் நாங்கள் அரசியலமைப்பை மாற்றப்போகின்றோம். தேர்தல் முறையை மாற்றப்போகின்றோம். அதிகார பகிர்வு சம்மந்தமாக குழுக்களை அமைத்திருக்கின்றார்.

11ஆம் பக்கம் பார்க்க..

**நேர்காணல் : இரணியன்**

04ஆம் பக்க தொடர்ச்சி...

மலாக்கா நீரிணை (Strait of Malacca) இந்த மலாக்கா நீரிணை மலேசியா, சிங்கப்பூரிற்கும் இந்தோனேசியாவிற்கும் இடையிலான குறுகலான நீரிணை. இந்து மா சமுத்திரத்தையும் பசுபிக் சமுத்திரத்தையும் இணைக்கும் நீரிணை இது.

உலக வர்த்தகத்தின் கடல் வழி போக்குவரத்தின் (world's seaborne trade) 33% இந்த நீரிணை ஊடாகத்தான் நடக்கிறது. வருடந்தோறும் குறைந்தது 84000 கப்பல்கள் இந்த மலாக்கா நீரிணை ஊடாக செல்கின்றன. 2020 இற்குள் 122000 கப்பல்களாக அதிகரிக்கும் என உலக வங்கி கணிப்பிட்டிருந்தது.

**மலாக்கா நீரிணையை நம்பியிருக்கும் சீனா**

சீனா தனக்கு தேவையான எண்ணையில் (crude oil) 60% ஐயும், இயற்கை வாயுவில் (natural gas) 32% ஐயும் வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்கிறது.

அமெரிக்க பென்டகன் அறிக்கையின்படி, சீனாவின் crude oil இறக்குமதியில் 51% மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தே வருகிறது.

அதில் 43% மான எண்ணெய் மத்திய கிழக்கின் Strait of Hormuz ஊடாகவே வருகிறது.

அதே போல் கடல் வழியாக வரும் அதனது எண்ணெயில் 82% Strait of Malacca இனூடாகவே வருகிறது.

குறுகலான Strait of Hormuz உம் Strait of Malacca ck; energy chokepoints ஆக கருதப்படுகின்றன.

சீனாவின் Malacca Dilemma எனும் தலைவலி

இன்றைய உலகத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ( Global GDP- nominal value) சீனாவின் பங்கு 15%. அமெரிக்காவின் பங்கு கிட்டத்தட்ட 25%.

ஆனால் purchasing power parity (PPP) அளவுகோலின்படி 2014 லேயே . சீனாவின் GDP அமெரிக்காவின் GDP ஐ தாண்டியாகிவிட்டது.

nominal அளவுகோலின்படி, 2031 இற்குள் சீனாவின் GDP அமெரிக்காவின் GDPஐ முந்தலாம் என பரவலாக கருதப்படுகின்றது.

ஒரு Great Power தனது பொருளாதார வலிமையை அதிகரிக்கும்போது அதற்கு ஏற்ப இராணுவ வலிமையையும் அதிகரிக்கும். இது கட்டாய தேவை.

ஆக சீனா தன்னைவிட பொருளாதாரத்திலும், இராணுவ வலிமையிலும் வளருவது அமெரிக்கா தன்னுடைய நலனுக்கான அச்சுறுத்தலாக கருதுகிறது. இன்று நாம் காணும் உலக ஒழுங்கின் இயங்குவிதி என்பது இரண்டாம் உலக யுத்தத்திற்கு பின்பு மேற்குலகால் வடிவமைக்கப்பட்டது. அதனுடைய நலன் சார்ந்து வடிவமைக்கப்பட்டது. குறிப்பாக சோவியத்-அமெரிக்காவிற்கு இடையிலான Cold War முடிவடைந்த பின்னர், அமெரிக்காவின் வர்த்தக நலனுக்கு ஏற்றதாகவும், அதனுடைய புவிசார் நலனுக்கு ஏற்றதாகவும் இந்த உலக ஒழுங்கின் இயங்கு விதி எழுதப்பட்டிருக்கிறது. ஆக அமெரிக்க நலன் சார்ந்த உலக ஒழுங்கின் இயங்கு விதியை, அமெரிக்காவை விட பலம் வாய்ந்த நாடாக சீனா மாறும்போது மாற்ற முனையும். இது தவிர்க்க முடியாது. காரணம் உலகின் பலம் வாய்ந்த நாடுகளுக்கு ஏற்றாற் போலவே உலக ஒழுங்கின் இயங்கு விதி எழுதப்படுகிறது. உலக வரலாற்றை நீங்கள் பின்னோக்கி பார்த்தால் இதை தெரிந்து கொள்ளலாம். ஆக தனது நலனுக்கு அச்சுறுத்தலாக வளர்ந்து வரும் சீனாவை தடுத்து நிறுத்துவதற்கான பல நகர்வுகளை அமெரிக்கா செய்து வருகிறது. அந்த பல நகர்வுகளில் ஒன்றுதான் அமெரிக்கா செய்யக்கூடிய மலாக்கா நீரிணையின் போக்குவரத்தை முடக்குவது ( naval blockade).

அமெரிக்காவின் மலாக்கா நீரிணை மீதான naval blockade

1990 ஆம் ஆண்டு சிங்கப்பூரும் அமெரிக்காவும் 1990 Memorandum of Understanding எனும் உடன்படிக்கையை செய்துகொண்டன. இந்த உடன்படிக்கையின் ஆயுட்காலம் 15 வருடம். பிறகு இந்த உடன்படிக்கை 2005 ஆம் ஆண்டு அடுத்த 15 ஆண்டுக்கு புதுப்பிக்கப்பட்டது. பிறகு மீண்டும் 2019 ஆம் ஆண்டு அடுத்த 15 வருடங்களுக்கு மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. இந்த உடன்படிக்கையின்படி அமெரிக்கா அதனது இராணுவ தேவைகளுக்காக சிங்கப்பூரின் விமான, கடற்படை தளங்களை பயன்படுத்தமுடியும். (facilitating US access to Singapore's air and naval bases, as well as providing logistic support for their transiting personnel, aircraft and vessels) இதன்படி அமெரிக்க கடற்படையின் 7th Fleet இன் நடமாட்டத்திற்குள் இந்த மலாக்கா நீரிணை வருகிறது.

அமெரிக்க கடற்படையால் இந்த மலாக்கா நீரிணை ஊடாக இந்து மா சமுத்திரத்தையும் அரபி கடலையும் 24 மணி நேரத்தில் அடையமுடியும். அமெரிக்கா நினைத்த மாத்திரத்தில் இந்த மலாக்கா நீரிணையின் கடற் போக்குவரத்தை அதனது naval blockade இனூடாக முடக்கமுடியும். சீனாவிற்கு எதிராக அமெரிக்கா மலாக்கா நீரிணையில் naval blockade ஐ செய்தால் சீனாவின் எண்ணெய் வழங்கல் முற்றாக தடைப்படும். தற்போதைய கணிப்பின்படி, சீனா பிற வழிகளிலும், மற்றும் தனது இருப்புகளில் (reserve) உள்ள எண்ணெயை பெற்றுக்கொண்டாலும் அதனால் கிட்டத்தட்ட 60 நாட்களே தாக்குப்பிடிக்க முடியும். ஆக எண்ணெய் இன்றி சீனாவின் பொருளாதாரம் அசையாது. போர் என எடுத்துக்கொண்டால் கூட சீனாவினால் எண்ணெய் இன்றி இராணுவ தயாரிப்புகளை (military operations) முறையாக செய்வதில் சிரமம் ஏற்படும்.

ஆக சீனா பொருளாதாரத்திலும் இராணுவ வலிமையிலும் வளர்வது உறுதி. தனது நலனுக்காக அமெரிக்கா அதை தடுக்க முனையும். அப்படி தடுப்பதற்கான வழிவகைகளில் மிக முக்கியமானது மலாக்கா நீரிணையை அமெரிக்கா தனது கடற்படையினரை கொண்டு முடக்குவது. இந்த சிக்கல்தான் சீனாவின் 'Malacca Dilemma'.

இந்த Malacca Dilemma இல் இருந்து விடுபட முயலும் சீனா

இதிலிருந்து மீள்வதற்கான சீனாவின் பல நகர்வுகளில் ஒன்றுதான் String of Pearls. இந்து மா சமுத்திரத்தில் தனக்கான நட்புநாடுகளை உருவாக்கி, அங்கு துறைமுகங்களை கட்டுகிறது. அந்த துறைமுகங்கள் கடற்படை தேவைக்கும் பயன்படக்கூடியவாறே கட்டப்படுகிறது (dual-use port projects). பின்னர் சீன கடற்படையினூடாக எண்ணெய் வழங்கலுக்கான கடல் வழி பாதையை தக்கவைக்க முயல்கிறது. அதுபோல மலாக்கா நீரிணையை மட்டுமே நம்பியிராமல், மற்றைய நாடுகளினூடாக எண்ணெய் வழங்கல் பாதையை உருவாக்குகிறது. அவற்றுள் சில China's trans-Myanmar oil and gas pipelines பாகிஸ்தானின் Gwadar Port இல் அமைத்திருக்கும் Pakistan-China Economic Corridor. அதேபோல சூயஸ் கால்வாய், பனாமா கால்வாய் போன்று தாய்லாந்திலே ஒரு கால்வாயை உருவாக்க நீண்டகாலமாக சீனா ராஜதந்திரரீதியில் காய்களை நகர்த்தி வருகிறது. தாய்லாந்திலே உருவாக்க நினைக்கும் இந்த கால்வாயின் பெயர் Kra Canal அல்லது Thai Canal. இது சுமார் 100 கிமீ நீளம் கொண்டது. இந்த Kra Canal மட்டும் கட்டப்படுமாயின், சுமார் 1200 கிமீ பயண பாதையை சேமிக்கமுடியும். அத்துடன் மலாக்கா நீரிணையின் தேவை பெருமளவு குறைந்து போகும். இந்த Kra Canal வெட்டப்படுவதை சிங்கப்பூர் விரும்பவில்லை. ஆனால் தாய்லாந்து Kra Canal இற்கு ஒப்புதல் அளிப்பதற்கு தயக்கம் காட்டி வருகின்றது. அதைவிட முக்கியமானது ஆசிய-பசுபிக் பிராந்தியத்திலிருந்து அமெரிக்காவை முற்றாக அகற்றுவது இந்த Malacca Dilemma தலைவலியை முற்றாக நீக்குவதற்கான நிரந்தர தீர்வு ஆசிய-பசுபிக் பிராந்தியத்திலிருந்து அமெரிக்காவை முற்றாக அகற்றுவது. அதற்கேற்றவாறு அமெரிக்க இராணுவத்திற்கு சவால் விடக்கூடிய நிலைக்கு சீனாவின் இராணுவ பலத்தை விரைவாக நவீன மயப்படுத்துகிறது ( rapid modernization).

தனது செல்வாக்குட்பட்ட கடற்பிராந்தியத்தில் அமெரிக்க கடற்படையின் பிரசன்னத்தை முற்றிலுமாக அகற்ற Anti-Access/Area Denial (A2/AD) எனும் military strategy ஐ கையாளுகிறது. தமிழர்கள் முக்கியமாக அவதானிக்க வேண்டிய ஒரு விடயம் இங்கு உள்ளது. அதுதான் புவியியல். இங்கு சீனாவின் புவியியல் அமைவிடம் காரணமாகவே, சீனா மலாக்கா நீரிணை ஊடாக மட்டுமே இந்து மா சமுத்திரத்தை அடையமுடியும் என்ற கட்டாய நிலையை தோற்றுவித்திருக்கிறது. இத்தகைய கட்டாய நிலை இல்லாவிடில் இந்த பதிவின் மையப்புள்ளியான Malacca Dilemma என்பதே இல்லாமல் போயிருக்கும். அதை சார்ந்த போரியல் அணுகுமுறைகளும் வேறொரு பரிமாணத்தை கொண்டிருந்திருக்கும். ஒரு சிறு நீரிணை சீன-அமெரிக்க போட்டியின் வடிவமைப்பில் பெரும் பங்காற்றியிருக்கிறது.

7ஆம் பக்க தொடர்ச்சி...

மருத்துவ தேவைகளுக்காகவும், சர்வதேசத்தில் நிலவும் மூலிகை அழகு சாதனப் பொருட்களுக்கான கேள்வியை ஈடு செய்யத்தக்க வகையிலும், மூலிகைகளை வீட்டுத் தோட்டங்களில் இருந்து பெறத்தக்கதாக உள்ளூர் மக்கள் மத்திய சபைகள் ஊடாக தகவல்களை வழங்குதல். சுகாதார அமைச்சு சுற்றுலாத்துறையுடன் இணைந்து ஆயுர்வேத, சித்த, யுனானி, ஏனைய சுதேச பாரம்பரிய வைத்தியம், ஹோமியோபதி போன்ற வைத்திய முறைகளை சுற்றுலாத்துறையின் கேள்விக்கும், உள்ளூர் தேவைப்பாடுகளை ஈடு செய்யத்தக்க வகையில் பொறிமுறையொன்றினை அறிமுகப்படுத்தி வைத்தல்.

**கல்வி** – மாகாணத்தின் அபிவிருத்தி செயற்பாட்டில் இலங்கையைச் சார்ந்த இளைஞர், யுவதிகளை செயலூக்கமிக்க பங்குதாரர்களாக ஊக்குவித்து அவர்களினது ஆர்வத்தினை இணங்கண்டு அவர்களுக்குள் பொதிந்திருக்கும் செயற்றிறன் மிக்க ஆற்றல்களை வெளிக்கொணரும் வகையில் நிகழ்ச்சித் திட்டங்களை வடிவமைத்து முன்னொடுத்துச் செல்வதனூடாக எமது நாட்டின் பிரஜைகள் மூலம் எதிர்கால சந்ததியினரை மாற்றமடையச் செய்வதே எமது திட்டமாகும். அதற்காக நவீன திறன்களையும், அறிவாற்றல்களையும் வழங்குவது மிக அவசியமானதொரு தேவைப்பாடாக இருக்கின்றது. முன்பள்ளி முதல் மூன்றாம் நிலைக் கல்வி வரையில் தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட செயற்பாட்டுத்திட்டம் ஒன்றினை வடிவமைத்துக் கொள்வதில் முழுக் கவனத்தையும் செலுத்தி அத்திட்டத்தை அமுல்படுத்துவது எமது குறிக்கோளாகும். மேலும், கிராமியப் பாடசாலைகளில் இழக்கப்பட்ட தரங்களை மேம்படுத்துவதற்கும், அத்தகைய பாடசாலைகள் மூடப்படுவதிலிருந்து தடுப்பதற்கும், உட்கட்டமான வசதிகள் மற்றும் நவீன தொழில்நுட்ப வசதிகளை வழங்குவதற்கும், மிகவும் பின்தங்கிய கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கும் புதிய முறை ஒன்றினை செயற்படுத்தவுள்ளோம். தகவல் தொழில்நுட்பம், தொழில்நுட்பவியல், அறிவியல், மொழியாற்றல், ஆசிரியத்துவம் என்பன உகந்த மட்டத்தில் வடிவமைத்து அதை ஒருங்கிணைப்புச் செய்து புத்தாக்க ரீதியில் பராமரித்து இயக்குவதற்கு அனைத்து மூலக்கூறுகளிலும் சுபீட்சகரமான பிராந்திய சுழற்சி முறைப் பொருளாதாரம், கல்வி முறையில் பங்களிப்புச் செய்வதுடன் தொழில்நுட்ப பருவகாலப் பயிற்சிகள் உள்ளடங்களாக ஒருங்கிணைப்புச் செய்வதாகும். இத்திட்டங்களை கிழக்கு மாகாணத்தில் முறையாக முன்னெடுத்துச் செல்வதன் மூலம் எமது நாடு செழிப்பான வளமிகு நாடாக இலங்கை திகழும் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை.

**நேர்காணல் - பைஷல் இஸ்மாயில்**

10ஆம் பக்க தொடர்ச்சி...

இவர்களால் நாங்கள் மிக தந்திரோபாயமாக கதைத்து தற்பொழுது இந்த சூழலைப்பயன்படுத்தி இந்த பிரச்சனையை தீர்க்காவிட்டால் இன்னுமொரு அரசாங்கம் வந்தும் தீர்க்க முடியாது. ஆகவே இதுவொரு சந்தர்ப்பம் என்னைப்பொறுத்தவரையில் இந்த ஜனாதிபதி இந்த பிரதமர் இருக்கின்ற காலத்திலே சிங்கள மக்கள் நம்புகின்றார்கள் இவர்கள் நாட்டை பாதுகாப்பார்கள் என்று யுத்தத்தை வென்றவர்கள் என்று நம்புகின்றார்கள். பெரும்பாலும் சிங்களவர்கள் விரும்பியிருக்கவே தமிழர்களின் பிரச்சனைக்காக மாகாணசபை முழுமையாக விளங்கி முழுமையான அதிகாரத்தை வழங்கினால் சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்வார்கள். இதையொரு சந்தர்ப்பமாக தமிழர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நாமும் அதைத்தான் செய்ய முயற்சி எடுத்துக்கொண்டிருக்கின்றோம்.

**கேள்வி : முஸ்லிம்கள் இடையே கல்முனை விவகாரத்தை வைத்து தமிழ் அரசியல் கட்சிகள் அரசியல் செய்கின்றன. அல்லது குலறுபடிகள் ஏற்படுத்த முனைகின்றன என்றவொரு கருத்தாடல் நிலவுகின்றன. இது பற்றி உங்களுடைய கருத்து என்ன?**

பதில் :கல்முனை பிரச்சனை என்பது மிக விரைவாக தீர்க்கப்படும். அதுவும் ஒரு அரசியல்மயப்படுத்தப்பட்ட பிரச்சனை அல்லது முஸ்லிம்களை பொறுத்தவரையில் அதிலும் முஸ்லிம் காங்கிரஸ் அம்பாறை மாவட்டத்திலே பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட எம்பிக்கள் பார்க்கின்றார்கள் நாங்கள் ஒருகாலத்திலே கரையோர மாவட்டம் கல்முனையை கொண்டுவர முயற்சி எடுப்போம். கரையோர மாவட்டம் கைநழுவி போய் கல்முனை மாநகரமும் தமிழர்கள் கையில் போய்விடக்கூடாது என்பதில் முஸ்லிம்கள் விடாப்பிடியாக இருக்கின்றார்கள் இதுதான் உண்மை. ஆனாலும் பாரம்பரியமான தமிழர்கள் தங்களுடைய நிலங்களில் வாழ்ந்தோம் என்ற அடிப்படையில் அவர்கள் உரிமையை கோருகின்றார்கள். அது நியாயமான உரிமை. அதனை விட்டுக்கொடுக்க முடியாத சங்கடத்தில் அவர்கள் திகழ்கின்றார்கள். இருந்தாலும் விரும்பியோ விரும்பாமலோ இரு சம்பவங்களும் மோத விடாமல் இந்த பிரச்சனைக்கு தீர்வு காணப்படும் என நான் நம்புகின்றேன். இந்த அரசாங்கம் இடம்பெறப்போகின்ற தேர்தலிலே இதற்கான முழுமையான தீர்வை கொடுக்கும் அதற்கான முயற்சியில் நாங்களும் இறங்கி செயற்படுவோம்.

**05ஆம் பக்க தொடர்ச்சி...**

ஆகவேவடக்குக்கிழக்குஎன்றஅடிப்படையிலும் தமிழ்த்தேசியம் என்ற முறையிலும் அந்தச் சிந்தனையை பலப்படுத்த வேண்டிய அவசரத் தேவையே தற்போது எழுந்திருக்கின்றது. திம்புக் கோட்பாட்டில் இருந்து மோடியிடம் கையளிக்கவுள்ள ஆவணம் குறைந்துள்ளது என்ற கருத்தும் வெளிப்பட்டுள்ளது. மிக முக்கியமாக தமிழ்பேசும் முஸ்லிம்கள் விடயத்திலே அவர்களை வடக்கு கிழக்கு இணைப்புக்கு ஆதரவாகவும், தமிழ்த்தேசியத்தை அங்கீகரித்துப் போகின்ற தன்மையோடும், அதேநேரம் முஸ்லிம்களின் உரிமைகளைச் சரியான சமன்பாட்டுக்குள் கொண்டு வருவதிலேயேயும் கவனம் தேவை.

முஸ்லிம்கள் இதுவரையும் காத்திரமாக எதையும் செய்யாதவர்கள். எதிர்காலத்தில் செய்வார்களா? என்பதும் சந்தேகமானதொரு சூழலில் இவற்றைக் கவனத்தில் எடுக்க வேண்டிய பொறுப்பு தமிழ்த்தேசிய சக்திகளுக்கே உண்டு. தேசம் என்ற சொல் விலக்கப்பட்டுள்ளது. சுயநிர்ணய உரிமை உள்ளக சுயநிர்ணய உரிமை என்றும் சுருக்கப்பட்டுள்ளது. ஆனால் உள்ளக சுயநிர்ணய உரிமையைக்கூட இலங்கை அரசு பல முறை மறுத்திருக்கின்றது. மீண்டும் மீண்டும் மறுத்து வருகின்ற ஒரே பாதையில், திரும்பப் பயணிப்பதால் யாருக்கு பயன் என்ற கேள்வியை இங்கே முன்வைக்க வேண்டிய சூழல் உண்டு. இதன் காரணங்களினாலேயே திம்புக் கோட்பாட்டில் இருந்து மோடியிடம் கையளிக்கவுள்ள ஆவணம் குறைந்துள்ளது என்ற கருத்தும் வெளிப்பட்டுள்ளது.



# பல்சுவை கதம்பம்



## இதயம் சம்பந்தமான நோய்கள் வராமல் தடுக்குமா சீத்தாப்பழம்...?



சீத்தாப்பழம் பழவகைகளில் தனிப்பட்ட சுவையும், மணமும் உடையது. குளுகோசும், சுக்ரோசும் சம அளவில் இருப்பதால் அதிக இனிப்பு சுவையை தருகிறது. நினைவாற்றலை அதிகரிக்கும். இதில் உள்ள சத்துக்கள் இதயத்தை சீராக இயங்க உதவுகிறது.


காசநோயை குணமாக்கும். குடல் புண்களை குணமாக்கும். உடல் சோர்வை போக்கும். சீத்தாப்பழம் இதயம் சம்பந்தமான நோய்கள் வராமல் தடுப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

ஆயுர்வேத மருத்துவத்தில் சிறந்த சக்தியை தரும் டானிக்காக பயன்படுத்தப்படுகிறது. சித்த மருத்துவத்தில் இதன் இலை, தோல், விதை, மரப்பட்டை ஆகியவை பயன்படுத்தப்படுகிறது.

சீத்தா இலைகளில் இருந்து தயாரிக்கப்படும் கஷாயம் வயிற்றுப்போக்கை கட்டுப்படுத்துகிறது. மேலும் சர்க்கரை நோயாளிகளுக்கு இதன் இலை அருமருந்தாகும். இலைகளை அரைத்து புண்களுக்கு மேல் பூசி வர உடனடியாக குணமாகும்.

பூண்டுடன் சீத்தாப்பழத்தை சேர்த்து அரைத்து தேமல் மீது பூசிவர தேமல் மறையும். பாசிப்பயறு, வெந்தயம் இரண்டையும் இரவில் ஊறவைத்து காலையில் அரைத்து அதில் சீத்தா விதை பொடியை சேர்த்து கலந்து தலையில் தேய்த்து 15 நிமிடங்களுக்கு ஊற வைத்து பிறகு குளித்து வர பொடுகு மறையும்.

சீத்தாப்பழச்சாறு அருந்தி வர சரும வறட்சி நீங்கும். நரம்புகள் வலுவடையும். இதில் வைட்டமின் சி கணிசமான அளவு இருப்பதால் சளி பிடிக்காமல் தடுக்கிறது. சளி பிடித்தவர்கள் சாப்பிட்டாலும் சளியை குணமாக்கும், வேறு பாதிப்புகளை தராது.



## முகத்தின் நிறத்தை அதிகரிக்க உதவும் எளிய அழகு குறிப்புகள் !!

தக்காளிப் பழத்தை தோல் நீக்கி அதனை நன்கு அரைத்துக் கொள்ளவும். அதில் சிறிதளவு பால் கலந்து பேஸ்ட் போல செய்து முகத்திற்கு பூசவும். இதனால் முகத்தில் உள்ள அதிகப்படியான எண்ணெய் பசை நீங்குவதோடு முகம் பளிச்சென்று மாறிவிடும்.

தேனில் சிறிது எலுமிச்சை சாறு மற்றும் தயிர் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து கழுவினால், முகம் ஆரோக்கியமாகவும், பளிச்சென்றும் காணப்படும். மேலும் இந்த முறையை தொடர்ந்து இரண்டு நாட்கள் செய்து வந்தால், முகத்தின் நிறம் அதிகரித்திருப்பதைக் காணலாம்.

சர்க்கரையில் சிறிது எலுமிச்சை சாறு சேர்த்து கலந்து, அதனைக் கொண்டு சருமத்தை மசாஜ் செய்தால், சருமத்தில் உள்ள இறந்த செல்கள் அனைத்தும் நீங்கி சரும துளைகளில் உள்ள அழுக்குகள் அனைத்தும் வெளியேறி சருமம் பொலிவோடு காணப்படும்.

தேங்காய் தண்ணீரைக் கொண்டு தினமும் இரண்டு முறை முகத்தை மசாஜ் செய்து 15 நிமிடம் ஊற வைத்து கழுவினால் முகத்தில் உள்ள தழும்புகள் கருமை நீங்கி முகம் பளிச்சென்று வெள்ளையாகும்.

சரும ஆரோக்கியத்தையும் அழகையும் மேம்படுத்த மேற்கூறிய அழகு குறிப்புகளை செய்வதோடு தினசரி நாம் குடிக்கும் தண்ணீரின் அளவை அதிகரிக்க வேண்டும். அடிக்கடி தண்ணீரை குடிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

## பற்களில் உள்ள மஞ்சள் கறைகள் நீங்க சில எளிய குறிப்புகள் !!

எலுமிச்சை சாறு பற்களின் மஞ்சள் கறையை நீக்கி வாயில் உள்ள கிருமிகள் , துர்நாற்றத்தையும் அழிக்கும். எனவே பேஸ்டுடன் இரண்டு சொட்டு எலுமிச்சை சாறையும் ஊற்றி தேய்த்து பாருங்கள் அல்லது தனியாகவும் எலுமிச்சை சாறை பற்களில் தேய்க்கலாம்.

பேக்கிங் சோடாவிற்கு பற்களில் உள்ள கறைகளைப் போக்கும் சக்தி உள்ளது. அதற்கு 1 டீஸ்பூன் பேக்கிங் சோடாவுடன், 1 டீஸ்பூன் உப்பு சேர்த்து, ஈரமான டூத்பிரஷ் பயன்படுத்தி, பற்களைத் தேய்க்க வேண்டும். இப்படி வாரத்திற்கு 1-2 முறை செய்து வர நல்ல பலன் கிடைக்கும்.

கொய்யா இலையை வாயில் போட்டு சிறிது நேரம் மென்று, பின் அதனை துப்ப வேண்டும். இப்படி தினமும் செய்து வந்தால், பற்களின் பின் உள்ள மஞ்சள் கறைகள் நீங்கும்.

தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய் இவற்றில் ஏதேனும் ஒன்றை வாயில் ஊற்றி நன்குக் கொப்பளியுங்கள். நுரை வரும் அளவிற்குக் கொப்பளிக்க வேண்டும். இவ்வாறு வாரம் இரண்டு முறை செய்து வந்தால் மஞ்சள் கறை நீங்கும்.

கற்றாழை ஜெல்லை பற்களில் தேய்த்து 10 நிமிடம் ஊற வைத்து, பின் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். இப்படி தினமும் இரண்டு முறை செய்து வந்தால், பற்கள் வெண்மையாவதோடு, ஈறுகளும் வலிமைப் பெறும்.

2 டீஸ்பூன் வெள்ளை வினிகரில், 1 டீஸ்பூன் உப்பு மற்றும் 1/2 கப் வெதுவெதுப்பான தண்ணீர் சேர்த்து கலந்து, தினமும் இருமுறை அந்நீரால் வாயைக் கொப்பளிக்க வேண்டும். இதன் மூலமும் பற்களின் பின் உள்ள மஞ்சள் நிற கறைகளை நீக்கலாம்.



## கடலை மாவு முறுக்கு

### தேவையான பொருட்கள்



**கடலை மாவு – 1 கப்**
**பச்சரிசி மாவு – ஒரு கைப்பிடி**
**சிவப்பு மிளகாய் தூள் – 1 டீஸ்பூன்**
**மஞ்சள் தூள் – 1/4 டீஸ்பூன்**
**பெருங்காயம் – 1/4 டீஸ்பூன்**
**சோடாமாவு –2 சிட்டிகை**
**உப்பு – ருசிக்கேற்ப**
**எண்ணைய் – பொரிக்க**

### செய்முறை

**கடலைமாவு, பச்சரிசி மாவு, சோடாமாவை ஒன்று சேர்த்து நன்கு சலிக்கவும்.**

**பின் பெருங்காயத்தூள், மிளகாய் தூள், மஞ்சள் தூள் இரண்டையும் சலித்த மாவுடன் சேர்த்து முறுக்கு மாவு பதத்திற்கு பிசைந்து , குறுக்கு சுடும் அச்சை விட சிறிய இடியாப்ப அச்சைவிட பெரிய துளையில் இட்டு முறுக்காக சுட்டு எடுக்கவும்.**

**மஞ்சள் நிற கடலைமாவு முறுக்கு ரெடி**

## சருமத்தை பாதுகாக்கும் ரோஸ் வாட்டரை எப்படி பயன்படுத்துவது?

கோடைக்காலத்தில் ஏற்படும் சரும பிரச்சனைகளை சரிசெய்ய ரோஸ் வாட்டரை எப்படி பயன்படுத்த வேண்டும் என்பதை இதில் பார்ப்போம். ரோஸ் வாட்டரில் கிருமி நாசினி பண்புகளும் உள்ளன. இது தவிர பாக்டீரியா எதிர்ப்பு பண்புகளையும் கொண்டிருப்பது சமீபத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

கோடை காலத்தில் ஏற்படும் வெப்பம் காரணமாக உடலில் நீர்சத்து குறையும். இதனால் சருமம் பாதிப்புக்குள்ளாகும். சரும எரிச்சல், தடிப்புகள் போன்ற பிரச்சனைகள் உருவாகும். இந்த பிரச்சினைகளுக்கு ரோஸ்வாட்டர் நல்ல தீர்வு தரும்.

ரோஜா இதழ்களை நீரில் கொதிக்கவைத்து வடிகட்டி தயாரிக்கப்படும் ரோஸ் வாட்டரில் பல ஆரோக்கிய நன்மைகள் கொண்டது. இதில் உள்ள ஆன்டி-ஆக்ஸிடன்ட்கள் சருமத்தை பாதுகாக்கும். காட்டன் பஞ்சுவில் ரோஸ் வாட்டரை நனைத்து கண்களின் புருவம், அடிப் பகுதியில் தடவுவதன் மூலம் கண் சோர்வை போக்கலாம்.

ரோஸ் வாட்டர் அலர்ஜி எதிர்ப்பு பண்புகளை கொண்டது. சரும எரிச்சல், சருமத் தடிப்புகள், கண்கள் சிவத்தல், வீக்கம் அடைதல் போன்ற பிரச்சனைகளுக்கு நிவாரணம் தரும். ரோஸ் வாட்டரை சருமத்தில் தடவுவதன் மூலம் சரும செல்கள் வலுப்பெறும்.

சருமத்தில் சுரக்கும் அதிகப்படியான எண்ணெய் பசைத்தன்மையை கட்டுப்படுத்தி சருமத்தின் பி.எச். சமநிலையை பராமரிக்கவும் ரோஸ் வாட்டர் உதவும். வெட்டு காயங்கள், வடுக்கள், தீக்காயங்கள் போன்ற பிற காயங் களுக்கு சிகிச்சை அளிக்க ரோஸ் வாட்டர் உதவுகிறது.

ஒரு பவுலில் ஒரு ஸ்பூன் கிராம்பு தூள், ஒரு ஸ்பூன் ரோஸிவ் வாட்டர் சேர்த்து நன்கு கலந்து கொள்ளவும். இந்த கலவையை இரவில் தூங்குவதற்கு முன்பு முகத்தில் பருக்கள் உள்ள இடத்தில தடவ வேண்டும். மறுநாள் காலை குளிர்ந்த நீரால் முகத்தை கழுவுங்கள். இவ்வாறு வாரத்திற்கு இரண்டுமுறை செய்துவந்தால் முகத்தில் உள்ள பருக்கள் மறைந்துவிடும்.

தினமும் குளிக்கும்போது தண்ணீரில் சிறிதளவு ரோஸ் வாட்டரை கலந்து குளித்து வந்தால் சருமத்திற்கு நல்ல பொலிவை கொடுக்கும். வரட்சியான சருமம் உள்ளவர்கள் அந்த ரோஸ் வாட்டர் பயன்படுத்தினால், நல்ல மிருதுவான சருமத்தை பெறலாம்.

# தொல்லியல் வடிவத்தில் அடுத்த கட்ட போர்! - என்.சரவணன்

கடந்தவார தொடர்ச்சி...

கோத்தபாயவை ஜனாதிபதியாக்குவதற்காக மூன்றாண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட "வியத்மக" என்கிற இயக்கத்துக்கு தலைமை தாங்கியவர். கோத்தபாய ஜனாதிபதி தேர்தலில் வேன்றதுமே முதலில் தான் முதலில் வகித்த அதே பாதுகாப்பு செயலாளர் பதவியை கமல் குணரத்னவுக்கு அவர் எதிர்பார்த்தபடி வழங்கினார். போர்க்குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட முக்கிய இருவர் கமல் குணரத்ன. அடுத்தவர் சவேந்திர டி சில்வா. அவருக்கு இராணுவத் தளபதி பதவியை வழங்கினார் கோத்தபாய. இன்றைய முக்கிய இராணுவவாத திட்டமிடல்களையும், நடவடிக்கைகளையும் மேற்கொள்பவர்களில் முக்கியமானவர்கள் இவர்கள்.

**கலாநிதி செனரத் பண்டார திசாநாயக்க (தொல்பொருள் பணிப்பாளர் நாயகம்)**

இலங்கையின் தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக பதவி வகித்துவரும் இவர் ஒரு துறைசார் நிபுணராக இருக்கிறார். கோத்தபாய ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர் தான் 2020 ஜனவரியில் இப்பதவியை ஏற்றார். இவர் பல சிங்கள பௌத்த தேசியவாதிகளின் அதிருப்தியாளராக இருந்து வருகிறார். சிங்களத் தலைவனாக இராவணனை முன்னிறுத்தும் புனைவுகள் அனைத்தையும் மறுத்து வருகிறார். எதிர்த்து வருகிறார். இராவணன் வாழ்ந்ததற்கான எந்தவித தொல்லியல் சான்றுகளும் இதுவரை கிடைத்ததில்லை என்று உறுதியாக கூறுகிறார். இராவணன் என்பது இராமாயணக் கதா பாத்திரம் மட்டுமே என்று துணிச்சலாக கருத்து வெளியிட்டு வருபவர்

**திருமதி சந்திரா ஹேரத்**
**அரச காணிப் பணிப்பாளர் நாயகம்**

**திருமதி ஏ. எல். எஸ். சி. பெரேரா**
**நில அளவையாளர் நாயகம், நிலஅளவையாளர் திணைக்களம்**

**பேராசிரியர் ராஜ் குமார் சோமதேவ**

களனிப் பல்கலைக்கழகத்தில் சிரேஸ்ட விரிவுரையாளராக கடமையாற்றி வருகிறார். இலங்கையில் இன்று முன்னணி தொல்பொருள் நிபுணராக கணிக்கப்படுபவர். வரலாறு விடயத்தில் கூர்மையான பார்வை உடையவர். வடக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் விக்கினேஸ்வரன் "மகாவம்சம் ஐந்தாம் நூற்றாண்டில் பாளி மொழியில் எழுதப்பட்டபோது இந்தத் தீவில் பௌத்தர்கள் இருந்தார்கள். சிங்களவர்கள் இருக்கவில்லை." என்கிற தொனியில் விக்னேஸ்வரன் பேசிய பேச்சு சமீபத்தில் சர்ச்சைகளை தோற்றுவித்தது. அதை எதிர்த்து கருத்து வெளியிடுவதற்கு இனவாத தரப்பினர் ராஜ் சோமதேவவைத் தான் பயன்படுத்திக்கொண்டார்கள். பேரினவாத முகாமுடன் நேரடியாக கைகொர்க்காவிட்டாலும். ஆங்காங்கு பேரினவாதிகள் தமக்கு தேவையான போதெல்லாம் இவரை பயன்படுத்திவருவதை அவதானிக்க முடிகிறது.

**பேராசிரியர் கபில குணவர்த்தன**
**பேராதனை பல்கலைக்கழகம் வைத்திய பீடம்**

**தேசபந்து தென்னக்கோன்**

சிரேட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், கிழக்கு மாகாணம். கோத்தபாயவுக்கு மிகவும் நெருக்கமானவர். அடுத்த பொலிஸ் மா அதிபர் பதவி தனக்கு கிடைக்கும் என்று எதிர்பார்த்திருப்பவர். குற்றப் புலனாய்வுப் பிரிவின் பிரதிப் பொலிஸ் மா அதிபராக இருந்தவர்.

**திரு.எச்.ஈ.எம்.டப்ளிவ்.ஜி.திசாநாயக்க**
இவர் கிழக்கு மாகாண காணி ஆணையாளர்.



சமீப காலமாக கிழக்கு மாகாணத்தில் இடபெறும் காணிப் பிரச்சினைகளின் போது தலையிட்டு சிங்களத் தரப்புக்கு சாதகமான தீர்மானங்களை நிறைவேற்றி வருபவராக குற்றம் சாட்டப்படுபவர்.

**திரு.திலித் ஜயவீர**

திலித் ஜெயவீர இந்த தொல்லியல் செயலணிக்கு ஏன் கொண்டு வரப்பட்டார் என்கிற கேள்வி அனைவருக்கும் எழுகிறது. இத்துறைசார் எந்த அறிவோ அதிகாரமோ, தகுதியோ இல்லாதவர். ஆனால் பெரும் கறுப்புப் பண தொழிலதிபர் என்று அழைக்கப்படுபவர். தெரண ஊடக வலையமைப்புக்குச் சொந்தக்காரர். தெரண தொலைகாட்சி, தெரண தொலைக்காட்சி இலங்கையின் இன்று முன்னணி சிங்கள-ஆங்கில தொலைக்காட்சிகளில் ஒன்றாக மாறியிருக்கிறது. அவர்களின் செய்திகள் ஏனைய செய்திகளை பின்னுக்கு தள்ளிவிட்டிருக்கிறது திலித் ஜயவீர ஒரு ராஜபக்ச குடும்பத்துக்கு நெருக்கமானவரும் கூட. மகிந்த ஆட்சிகாலத்தில் வருணி அமுனுகம (அமைச்சர் சரத் அமுனுகமவின் மகள்) வுடன் கூட்டுசேர்ந்து திலித் ஜயவீர தெரணவை ஆரம்பித்தார். அதற்கான (Derana Macro Entertainment (Pvt) Ltd) அனுமதியை மகிந்த இலவசமாகவே வழங்கினார் என்கிறது newsofcolombo.com என்கிற இணையத்தளம். ஒரு விளம்பர நிறுவனமாகவும் இந்த நிறுவனம் இயங்கிய நிலையில் திடீரென பெரும் பணக்கார நிறுவனமாக குறுகிய காலத்தில் ஆனது எப்படி என்கிற சந்தேகம் இன்றும் உண்டு. ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாயவின் வெற்றியில் முக்கிய பங்கு வகித்தவர். "தெரண" ராஜபக்ச கும்பலின் முக்கிய பிரச்சார ஊடகமாகவும் மகிந்தவின் எதிரிகளையும், அரசாங்கத்தையும் தாக்குவதற்கான ஆயுதமாகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் தொல்லியல், சிங்களப் பாரம்பரியம் சார்ந்த பல நிகழ்சிகளை ஒளிபரப்பி வருகிறது. இராவணனை சிங்களவர்களின் தலைவராகப் புனையும் ஒரு தொடர் நாடகத்தையும் தெரண சொந்தமாக இயக்கி வெளியிட்டு வருகிறது. தொல்லியல் சார் பணிகளை முன்னெடுப்பதற்கும் சிங்கள பௌத்தர்களை மூளைச்சலவை செய்து தூண்டி அணிசேர்க்கும் வேலைக்கு இவர்களின் ஊடக வலைப்பின்னல் அதிகமாக இந்த செயலணிக்குத் தேவைப்படலாம்.

ஜனாதிபதி செயலாளரால் யூலை 07 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட "அதிவிசேட" வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் இராணுவத்தைச் சேர்ந்த மேலும் ஒருவர் இந்த செயலணிக்கு இணைக்கப்பட்டார். அவர் ரியல் அத்மிரல் ஆனந்த பீரிஸ். இவர் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் பதவியில் இருப்பவர்.

இந்த தொல்லியல் செயலணிக்கு தலைவராக எந்த அரச அதிகாரிகளோ, அல்லது துறைசார் நிபுணர்களோ நியமிக்கப்படவில்லை. மாறாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன தலைவராக நியமிக்கப்பட்டார்.

**திருகோணமலையை இலக்கு வைத்து**

இப்போது திருக்கோணேஸ்வரர் ஆலயப் பகுதியை ஆக்கிரமிக்கும் முயற்சியில் தீவிரமாக இறங்கத் தொடங்கியிருக்கிறது சிங்களப் பேரினவாதம். ஈழப் போராட்டக் காலத்தில் சகல இயக்கங்களுமே எதிர்காலத் தமிழீழத்தின் தலைநகராக யாழ்ப்பாணத்தை முன்னிறுத்தவில்லை. மாறாக திருகோணமலையைத் தான் குறிப்பிட்டு வந்திருக்கிறார்கள். வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் பிரதான நகரம் மட்டுமல்ல அது வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்ட பிரதேசம். கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடம். திருகோணமலைத் துறைமுகத்தை கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர் இந்து உபகண்டத்தை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு சமம் என்று மகா அலெக்சாண்டர் அப்போது கூறியதாகக் கூறுவார்.

திருகோணமலையை மையமாக வைத்தே இலங்கையின் இனப்பிரச்சினையில் இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் அரசியல் சதுராட்டம் நடத்தி வந்திருகிறார்கள். தமிழர்களின் தாயகக் கோட்பாட்டை உடைப்பதாயின் திருகோணமலைக்கு ஊடாகவே துண்டாடவேண்டும் என்கிற திட்டத்தை சுதந்திரம் அடைந்தபோதே சிங்கள அரசாங்கம் போட்டுவிட்டது. கல்லோயா திட்டம் உட்பட பல்வேறு குடியேற்ற திட்டங்களை ஏற்படுத்தி சிங்களவர்களை குடியேற்றி குடிப்பரம்பலின் சமநிலையை சிதைத்தது. 1827 ஆம் ஆண்டு குடித்தொகை கணக்கெடுப்பின்படி திருகோணமலையில் வெறும் 1.53% வீதம் மட்டுமே இருந்த சிங்களவர்கள் 1981 ஆம் ஆண்டு அளவில் 25.4% வீதமாக உயர்ந்துள்ளனர். அதே வேளை 1827 ஆம் ஆண்டு அளவில் 81.52% வீதமாக இருந்த தமிழர்கள் 2007 ஆம் ஆண்டு 28.7% வீதத்துக்கு அதல பாதாளமாக இறங்கியுள்ளனர். திருகோணமலையில் இன்று மூன்றில் ஒரு பகுதியினர் கூட தமிழர்கள் இல்லாத நிலை தோன்றியிருக்கிறது. திருகோணமலை மாவட்டத்தில் ஒரேயொரு பாராளுமன்றப் பிரதிநிதியைத் தெரிவு செய்வது கூட கடினமாக ஆக்கப்பட்டுள்ளது.

1968 ஆம் ஆண்டில் திருகோணமலையில் திருக்கோணேஸ்வரம் கோவில் அமைந்துள்ள திருகோணமலை கோட்டைப் பகுதியை புனித இடமாக அறிவிக்கக் கோரி தமிழரசுக் கட்சி தொடர்ச்சியாக போராடியது. இதற்கு அப்போதைய பிரதமர் டட்லி சேனநாயக்கா உடன்பாட்டிருந்தார். புனித நகராக ஆக்குவதை ஆராய்வதற்கென்று ஒரு குழுவையும் டட்லி நியமித்திருந்தார்.

தமிழரசுக் கட்சி டட்லியின் அரசாங்கத்தில் ஒரு அங்கமாக இருந்தது. ஆளுங்கட்சியில் அங்கம் வகித்ததால் அவ் அரசில் திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சராகவும் இருந்தார். இதன்போது புனிதப் பிரதேசமாக ஆக்குவதை எப்படியும் தடுத்து நிறுத்தியாகவேண்டும் என்று சிங்களத் தரப்பு கடுமையாக எதிர்ப்பு வெளியிட்டது. இந்த எதிர்ப்புக்கு அணியை அப்போது தலைமை தாங்கியவர் தொல்லியல் திணைக்களத்தின் முன்னாள் ஆணையாளராக இருந்த சீ.ஈ.கொடக்கும்புர (C.E.Godakumbura). அங்கே இருக்கும் கோகண்ண விகாரையை ஆக்கிரமித்து நிர்மூலமாக்கும் முயற்சி இது என்று அவர்கள் பிரச்சாரம் செய்தார்கள். விசாகப்பட்டினத்தில் உள்ள இந்திய கடற்படைத் தளத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை அவர் சுட்டிக்காட்டினார். திருகோணமலையில் ஒரு இந்து புனிதப் பகுதி அமைவதன் மூலம் இந்திய ஆக்கிரமிப்புப் படையெடுப்புக்கு வழிகோலும் என்கிற பீதியைக் கிளப்பிவிட்டார்கள். ஐந்தாவது கட்டுரையாளராக மாறும் என்று வாதிட்டார்

இத்தகைய சிங்கள பௌத்த தரப்பின் எதிர்ப்பைத் தொடர்ந்து இறுதியில் தேசிய பாதுகாப்பு காரணங்களை சுட்டிக்காட்டி தமிழர்களுக்கு வழங்கிய உறுதிமொழியை பிரதமர் சேனநாயக்க கைவிட்டார். புனித நகராக்குவதற்காக அமைக்கப்பட்ட குழுவையும் கலைத்தார். பிரதமர் டட்லி சேனாநாயக்கவின் இந்த நடவடிக்கைகளை அடுத்து அமைச்சர் திருச்செல்வம் பதவியில் இருந்து விலகினார். திருமலை துறைமுகத்தை தேசியமயமாக்குவது தொடர்பிலான விடயத்தின் போதும் திருச்செல்வம் கட்சியாயும் மீறி அமைச்சு பதவியைத் துறக்கத் தயாரானார். ஆனால் மாவட்ட சபைகள் விடயத்தில் டட்லி ஒப்புக்கொண்ட விடயங்களின் காரணமாக தனது விலகலைக் கைவிட்டார். ஆனால் புனித நகர் விவகாரத்தின் பொது விலகிய வேலை கட்சியின் சம்மதத்துக்குக் கூட அவர் காத்திருக்கவில்லை. ஜே.ஆர்., சுகததாச போன்றோர் அவரின் விலகலை தடுத்து நிறுத்த முயற்சித்த போதும் திருச்செல்வம் தனது முடிவை மாற்றிக்கொள்ளவில்லை.

ஆனால் தமிழரசுக் கட்சி டட்லி - செல்வா ஒப்பந்தம் அமுலாகும் என்கிற நம்பிக்கையில் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியாக தொடர்ந்து இருந்தது. இறுதியில் அந்த உடன்படிக்கையும் கைவிடப்பட்டதைத் தொடர்ந்து டட்லி அரசில் இருந்து தமிழரசுக் கட்சி விலகியதையும் இங்கு நினைவுகொள்வோம். இந்த நிகழ்வு குறித்து அன்று தமிழரசுக் கட்சியின் ஏடான "சுதந்திரன்" பத்திரிகையில் இப்படி எழுதப்பட்டிருந்தது.

"இந்நாட்டுத் தமிழ் மக்களின் தன்மானத்துக்கு விடுக்கப்பட்ட ஓர் சவால் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை. இச்செயல் மூலம் திரு டட்லி சேனநாயக்க பௌத்தர்களுக்கும் சிங்களவர்களுக்கும் மட்டுமே தாம் பிரதமராக இருக்கத் தகுதியுள்ளவர் என்பதை ஐயந்திரிபுக்கிடமின்றி எடுத்துக் காட்டிவிட்டார். எனினும் பிரதமராது இந்த நடவடிக்கை ஓரளவு தமிழ் பேசும் மக்களின் உள்ளங்களில் எல்லாம் மெல்ல மெல்ல மங்கி மறைந்து வந்த சிங்கள ஏகாதிபத்தியப் பிரச்சினையின் பின் இன்று பொங்கி பிரவாக்கிக்கத் தொடங்கியிருக்கிறது. நீறு பூத்த நெருப்பாக இருந்த விடுதலைக்கனல் தமிழ் பேசும் இளைஞர்களின் உள்ளங்களிலெல்லாம் இன்று மீண்டும் வீறு கொண்டு பற்றிப் பிடித்து விட்டது. ஈழத் தமிழ் பேசும் மக்களின் விடுதலைக் கனலை அன்றும் இன்றும் அணையாது மூட்டிவிட்ட பெருமை திருமலைக்குத் தான் சேரும். அன்று 1956ஆம் ஆண்டு இந்நாட்டுத்தமிழ் மக்கள் பாதயாத்திரை நடத்தி வெள்ளம்போல் கூடி விடுதலைத் தீர்மானத்தை நிறைவேற்றியதும் திருமலையில் தான். அடுத்து 1957ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதி கொடி காப்பதற்காக குண்டடி பட்டு இன்னுயிரைப் பலிகொடுத்து ஈழத்தமிழினத்தின் விடுதலைக் காவியத்தை இரத்தத்தினால் எழுதினான் திருமலைத் தியாகி நடராசன்."

தொடரும்...

# கிழக்கில் தமிழர் நிலபரப்பை அபகரிக்கத்துடிக்கும் முஸ்லிம் அரசியல்தலைமைகள் -வியாழேந்திரன் அதிரடி



கடந்தவார தொடர்ச்சி...

ஆனால் அவர் சொன்னார் கோரளைப்பற்று வடக்கிற்குள் நிர்வாகம் இருந்தது என்று. அது உண்மையில் ஒரு பிழையான விடயம். நிலத்தொடர்பு இல்லாமல் மட்டக்களப்பில் அரச நிர்வாகம் மேற்கொள்ளப்படுகின்றது என்று சொல்கின்றார். நிலத்தொடர்பைப் பற்றி பேசுவதற்கு இவர்களுக்கு எந்த உரிமையும் இல்லை. ரவூப் ஹக்கீம் அவர்கள் பாராளுமன்றத்தில் கூறியிருந்தார். ஏனென்றால் மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்குடா கல்வி வலயம் மட்டக்களப்பு கல்வி வலயம் பற்றிருப்பு கல்வி வலயம் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் என்று நான்கு கல்வி வலயங்கள் புவியியல் தொடர்புடன் இருக்கின்றது. ஆனால் புவியியல் தொடர்பு இல்லாமல்இலங்கையிலேயே முதன் முதலிலே ஒரு கல்வி வலயத்தை உருவாக்கி காட்டியவர் இவர் தான். இன்று ஓட்டமாவடி காத்தான்குடி ஏறாவூர் இந்த முஸ்லிம் பகுதிகளை இணைத்து புவியியல் தொடர்பு இல்லாமல் ஒரு கல்வி வலயத்தை உருவாக்கியிருக்கிறார்கள். இன்று ஐயங்கேணி என்ற ஒரு கிராமம் இருக்கின்றது. ஐயங்கேணி முஸ்லிம் பகுதி இதனை யார் கொண்டு வந்தது. இவர்கள் தான். இன்று நல்லிணக்கம் என்று அடிப்படையில் தமிழ் கட்சி இவர்களுடன் இணைந்து பயணிக்கலாம். ஆனால் ஒரு விடயத்தை நான் தெளிவாக சொல்கின்றேன்.

எமது அரசியல் பயணத்தில் எந்த முஸ்லிம் அரசியல் தலைவர்களுடனும் நல்லிணக்கம் என்ற கதையே இல்லை. அதே நேரம் எந்த விட்டுக்கொடுப்பிற்கும் நாங்கள் தயாராக இல்லை. ஏனென்றால் கடந்த 72 வருடங்கள் தமிழ் அரசியல் தலைவர்கள் இந்த இணக்க அரசியல் புட்டுக்குழலும் தேங்காய்பூவும் இந்த நல்லிணக்கம் போய் போய் போய் இந்த கிழக்கு மாகாணத்தில் நில ரீதியாக வளரீதியாக பொருளாதார ரீதியாக மிகப்பெரிய பாதிப்பை சந்தித்த சந்தித்துக்கொண்டிருக்கின்ற ஒரு சமூகம் தமிழ் சமூகம் இதில் எந்த மாற்றுக்கருத்துக்கும் இடமில்லை. இதை நீங்கள் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும். நிலத்தொடர்பு பற்றி இவர்கள் பேச முடியாது.

அதே மாதிரி இன்று வாழைச்சேனை முஸ்லிம் பகுதி ஐயங்கேணி முஸ்லிம் பகுதி இவை எல்லாமே ஒரு இனவாதத்துடன் தொடர்பான விடயங்கள். நான் சொல்லவந்த விடயத்தை கட்டாயம் சொல்லியே ஆக வேண்டும். கோறளைப்பற்று மத்திக்கு 240சதுர கிலோ மீற்றர் இருப்பதாக ரவூப் ஹக்கீம் அவர்கள் பாராளுமன்றத்திலே சொன்னார். 240 சதுர கிலோ மீற்றர் என்று சொன்னால் அவர் எதை சொல்ல வேண்டும். புனான ஈஸ்ட் 89.9 சதுர கிலோ மீற்றர். அதே நேரம் காரமுனை எங்கு இருக்கின்றது மாங்கேணி தெற்குக்குள் இருக்கின்றது. அது கிட்டத்தட்ட மாங்கேணியும் காரமுனையும் சேர்ந்து 10.5 சதுர கிலோ மீற்றர் ஆகவே இரண்டையும் கூட்டிப்பார்த்தால் 94.5 சதுர கிலோ மீற்றர். எனவே கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நஸீரும் சொல்கின்றார் 240 சதுர கிலோ மீற்றர் என்று சொன்னால் அவர் எதை சொல்ல வருகின்றார்கள். வாகரையில் அரைவாசி பகுதியை இணைக்க வேண்டும் என்ற தூர நோக்குடன் தான். புனான ஈஸ்டுடன் சேர்ந்து கிரிபிச்சை, மாங்கேணி தெற்கு போன்ற சில கிராமங்களை சேர்த்தாலும் 240 சதுர கிலோ மீற்றர்கள் வராது. சரி இவ்வளவற்றையும் சேர்த்தாலும் முழுக்க முழுக்க பாரம்பரிய வரலாற்று ரீதியான தமிழர்களின் பூர்வீக இந்த கிராம சேவைப் பிரிவுகளை சேர்த்தாலும் 240 சதுர கிலோ மீற்றர்கள் வராது. அப்படியாயின் இவர்கள் கிட்டத்தட்ட கோறளைப்பற்று வடக்கு வாகரையில் கிட்டத்தட்ட அரைவாசிக்கு மேற்பட்ட தமிழர்களின் பூர்வீக கிராமங்களை உள்வாங்குவது தான் அடிப்படைநோக்கம்.

ஆகவே பன்னம்பலான அறிக்கை என்பது தமிழர்களுடைய கோறளைப்பற்று மத்தி என்று சொல்லப்படுகின்ற பிரதேச பிரிவில் மாங்கேணி வாகரை கிட்டத்தட்ட எங்களது போகரை வடக்கு வாகரைப் பிரிவிலிருந்து அரைவாசிக்கு மேற்பட்ட காணிகள் எங்கு வரப்போகின்றது கோறளைப்பற்று மத்தியில். எனவே பூர்வீகமாக கெசட் பன்னப்பட்டு பரம்பரை பரம்பரையாக இருந்து வருகின்ற வாகரையின் அரைவாசிக்கு மேற்பட்ட தமிழ் கிராமங்கள் கோறளைப்பற்று மத்தியுடன் இணைக்க வேண்டும் என்ற பன்னம்பலான அறிக்கை என்பது ஒரு காலமும் ஏற்றுக்கொள்ள முடியாது. நாங்கள் எந்த விட்டுக்கொடுப்புக்கும் தயார் இல்லை. எந்த காரணத்தை கொண்டும் புனான ஈஸ்ட் நீங்கள் வேணும் என்றால் விஜிதர ஜெயந்தியாக பகுதி கோறளைப்பற்று மத்தியில் நிர்வாகம் செய்கின்றது.

ஆனால் இங்கிருக்கின்ற 8 கிராமங்களில் 6 கிராமங்கள் நூற்றுக்கு நூறு தமிழ் கிராமங்கள். இதில் நாங்கள் எந்த விதத்திலும் விட்டுக்கொடுக்க தயார் இல்லை. மக்கள் ஒருபோதும் இணங்க மாட்டார்கள். ஆகவே 240 சதுர கிலோ மீற்றர்கள் எடுக்க வேண்டும் என்று சொல்லப்படுவது கிட்டத்தட்ட கோறளைப்பற்று வடக்கு வாகரை தமிழர்களின் பாரம்பரிய கிராமங்களை இல்லாமலாக்குகின்ற ஒருவகையான செயற்பாடு. இப்படித்தான் அம்பாறையை இழந்திருக்கின்றோம். திருகோணமலையை இழந்திருக்கின்றோம். இது பேசித்தீர்க்கும் விடயமல்ல. விட்டுக்கொடுத்துகொடுத்துநாங்கள் இன்னும் இன்னும் நில ரீதியாக வள ரீதியாக குறைந்துகொண்டுதான் போகின்றோம். இன்னுமொரு விடயம் என்னவென்றால் காரமுனை தொடர்பாக அண்மையில் ஒரு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது காரமுனையிலே. அப்பொழுது ரவூப் ஹக்கீம் அவர்கள் பாராளுமன்றத்திலே சொல்லுகின்றார். இந்த ஆர்ப்பாட்டத்தில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் உட்பட கூட்டமைப்பு உறுப்பினர்களும் இணைந்து கலந்துகொண்டார்கள். அவர்களும் விளங்கிக்கொள்ளுகின்றார்கள். அங்கு முஸ்லிம் சகோதரர்கள் பயிர் செய்கையில் ஈடுபடுகின்றார்கள் என்று சாணக்கியன் கூறியிருந்தார். சாணக்கியனின் விடயத்திற்கு வரவில்லை நான் சொல்லவரும் விடயம் காரமுனை என்ற பகுதியில் சிங்களவர்களின் குடியேற்றங்கள் இருந்ததற்காக பிரதேச செயலகத்தில் எந்த ஆவணமும் இல்லை. அந்த இடத்தில் முஸ்லிம் மக்கள் பாரம்பரியமாக இருந்தமைக்கான எந்த ஆவணமும் இல்லை. கோறளைப்பற்று வடக்கிற்குள் இருக்கின்ற நூற்றுக்கு நூறு வீதம் காரமுனை கோறளைப்பற்று வடக்கு வாகரை மக்களுக்கு சொந்தமான காணி. அரசாங்க காணி தான் அங்கு கூடுதலாக இருக்கின்றது. ஆனால் கோறளைப்பற்று வடக்கு பகுதியில் இருக்கின்ற வாகரைப் பிரதேசத்தில் இருக்கும் ஒரு தமிழ் குடிமகனுக்கும் காரமுனையில் காணியில்லை. கிட்டத்தட்ட 120 க்கு மேற்பட்ட கோறளைப்பற்று மேற்கு. மத்தி போன்ற பகுதிகளில் இருந்த சில முஸ்லிம் நபர்கள் சில அரசியல் செல்வாக்குடன் அவர்கள் அந்த இடத்தில் அத்துமீறி அரச காணிகளை பிடித்திருக்கிறார்கள்.

ஆனால் எந்த தமிழ் குடும்பமும் காரமுனையில் இல்லை. வாகரை பிரதேசத்தில் யுத்தத்தில் பாதிக்கப்பட்டு கை, கால், கண் இல்லாமல் இன்று குடியிருப்பதற்கோ அல்லது வாழ்வாதார தொழிலை செய்வதற்கோ பயிர் செய்வதற்கு 2 ஏக்கர் காணிகூட இல்லாமல் கஷ்டப்படும் எத்தனையோ குடும்பங்கள் இருக்கின்றன. ஆனால் இங்கு 125க்கு மேற்பட்டவர்கள் இந்த காணிகளை அடையசெய்திருக்கின்றார்கள். இதை கோறளைப்பற்று வடக்கு வாகரைப் பிரதேசசெயலகத்தில் கேட்கலாம். Land Office கேட்கலாம். அங்கிருக்கும் GS இடம் கேட்கலாம். நான் அங்கு கூட்டங்களை நடத்தினேன். ஆகவே இது எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாத விடயம். எந்த இடத்திலும் வந்து இன்று ஏறாவூர்பற்று பிரதேசம் முஸ்லிம் பகுதியில் நிர்வாகம் செய்யவில்லை. மண்முனைப்பற்று ஆரையன்பதிப்பு பகுதியிலே செயலக பிரதேசம் காத்தான்குடியில் நிர்வாகம் செய்யவில்லை. இன்று ஏறாவூர்பற்றுக்கு சொந்தமான நிலப்பிரிவுக்குள் இருக்கின்ற ஐயங்கேணி முஸ்லிம் பகுதியை ஏறாவூர் நகரிலே நிர்வாகம் செய்கின்றது. அதையெல்லாம் விளங்கிக்கொள்ள வேண்டும். அடுத்த விடயம் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் அவர்களின் முழு சோற்றுக்குள் யானையை புதைத்ததைப்போன்று அவரின் அடுத்த பச்சைப்பொய் தியாவட்டுவான் கோறரைப்பற்று வடக்கு வாகரையில் இருக்கு என்று சொன்னார். ஆனால் அது இருப்பது கோறளைப்பற்று மத்திக்குள். அதேபோன்று இன்னுமொரு பொய்யை சொல்லியிருந்தார் ஐயங்கேணி முஸ்லிம் பகுதியை நிர்வாகம் செய்வது ஏறாவூர்பற்று பிரதேசம் என்று. காணி நிர்வாகம் இருந்தாலும் அரச நிர்வாகம் முழுவதும் இருக்கின்றது ஏறாவூர் நகர்பிரதேச செயலகத்தில். முஸ்லிம்களுக்கான நியாயமான நீதியை எந்தவிதத்திலும் நாங்கள் தட்டிப்பறிக்கவும் இல்லை அதை எடுக்கவும் இல்லை. அதற்காக எங்களுடைய தமிழ் மக்களுக்கு நீதியான நியாயமாக கொடுக்க வேண்டிய எந்தவொரு விடயத்தையும் நாங்கள் யாருக்கும் விட்டுக்கொடுக்க தாயர் இல்லை. அதில் எந்த மாற்றுக்கருத்திற்கும் இடமில்லை என்பதை நான் தெட்டத்தெளிவாக கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

அத்தோடு இன்னுமொரு விடயத்தையும் நான் சொல்ல விரும்புகின்றேன். கோறளைப்பற்று தெற்கு கிராமத்தில் இருக்கின்ற ஊத்துச்சேனை, வடமுனை, புனான மேற்கு, வாகனேரி, கல்லிச்சை இந்த ஐந்து கிராம சேவைப்பரிவும் சேர்த்து மொத்தம் 18 கோறளைப்பற்று தெற்கு கிராம சேவைப்பிரிவிற்குள் இருக்கின்றது. ஆனால் இவர்கள் சொல்லுகின்றார்கள் இந்த 5 பிரதேச செயலகத்தையும் கொண்டு கோறளைப்பற்று மேற்குடன் இணைக்க வேண்டும் என்று அதற்கு அங்கால் இருக்கின்ற 240 சதுர கிலோ மீற்றர் என்று சொல்லி வாகரையை இரண்டாக உடைத்து கோறளைப்பற்று மத்தியுடன் இணைக்க வேண்டும். இவையெல்லாம் கண்டிக்கத்தக்க விடயங்கள். இன்று வடமுனை ஒரு தமிழ் பகுதி. ஊத்துச்சேனை ஒரு தமிழ் பகுதி. புனான மேற்கு இவையெல்லாம் கூடுதலாக தமிழ் மக்கள் செறிந்து வாழுகின்ற பகுதி. கல்லிச்சையை பற்றி பேசும் பொழுது ஒரு விடயம் சொல்ல வேண்டும் கல்லிச்சையை வந்து பேசித் தீர்க்க வேண்டும் என்று சொல்லி கௌரவ சாணக்கியனும் கௌரவ காபீஸ் நஷீர் அவர்களும் தீர்விலே பேசினார்கள். பேசித் தீர்க்க வேண்டிய விடயமல்ல. கல்லிச்சை விடயம் பேசித்தீர்க்க வேண்டிய விடயமல்ல அது தீர்க்கப்பட்ட விடயம். அதை ஏன் திரும்ப பேச வேண்டும்? கல்லிச்சை விடயத்தை ஏன் திரும்ப பேச வேண்டும். கல்லிச்சையில் யாரை குடியேற்றுவது கல்லிச்சை என்பது கோறளைப்பற்று தெற்கு கிராம பிரதேச செயலகத்திலே ஒரு பின்தங்கிய தொங்கல் கிராமம். அதிலிருந்த முஸ்லிம் மக்கள் ரீலொக்கெட் பன்னப்பட்ட இடம் தான் விஜிதர ஜெயந்தியாய. விஜிதர ஜெயந்தியாய என்பது மகாவலிக்குரிய காணி. அந்த காணியை அந்த நேரம் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லா அவர்கள் பேசி மகாவலி காணிக்குள் விஜிதர ஜெயந்தியாய பகுதிக்குள் கல்லிச்சை பகுதியில் இருந்தமக்களை கொண்டு ரீலொக்கெட் செய்யப்பட்டது. ரீலொக்கெட் வேறு ரீசெட்டில்மன்ட் வேறு நன்றாக விளங்கிகொள்ளுங்கள். இன்று அங்கு அனைத்து வசதிகளும் இருக்கின்றது. கல்லிச்சை என்பது கோறளைப்பற்று தெற்கிற்குள் பின்தங்கிய ஒரு காட்டுப்பகுதி அல்லது கிராமம். ஆனால் இன்று ரீலொக்கேட் பன்னப்பட்ட இடம் விஜிதர ஜெயந்தியாய பகுதியில் பிரதான வீதியை அண்டி அங்கு எல்லா வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வீட்டுத்திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கல்லிச்சையில் இருந்த மக்கள் மட்டும் ரீலொக்கேட் பன்னப்படவில்லை ஓட்டமாவடியில் இருந்தவர்கள் கூட அங்கு ரீலொக்கேட் பன்னப்பட்டுள்ளார்கள். அவர்களின் காணி இங்கிருந்தாலும் அவர்களில் கொஞ்ச பேருக்குத் தான் அந்த காணிகள் கொடுக்கப்பட்டுள்ளது.

இன்று கல்லிச்சை மக்களை அடித்து விரட்டிவிட்டார்கள் என்று சொல்லப்படுகின்றது. அவர்களை யார் விரட்டியது. அவர்கள் ரீலொக்கேட் பன்னப்பட்டு எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றது. இன்றும் கல்லிச்சையில் விவசாயம் செய்கின்றார்கள். கல்லிச்சை விடயத்தில் கோறளைப்பற்று பிரதேசசெயலாளர் திரு. ராஜ்பாபுவை ஒரு இனவாதியாக காட்டுவதோ அரசாங்க அதிபரை இனவாதியாக காட்டுவதோ ஏற்றுக்கொள்ளமுடியாத விடயம். கல்லிச்சை மக்களுக்கு மேலதிகமாக ஏனைய முஸ்லிம் மக்களும் ரீலொக்கேட் செய்யப்பட்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு மாற்று காணிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இவையெல்லாமே பேசுவது இனவாதத்தை தூண்டுகின்ற செயற்பாடு. இன்று உண்மையிலே கோறளைப்பற்று வடக்கு விடயத்தில் புனான ஈஸ்ட் என்பது கோறளைப்பற்று வடக்கு வாகரைக்குள் தான் இருக்கின்றது. அதில் கிட்டத்தட்ட 6 தமிழ் கிராமங்கள் இருக்கின்றது. அது கோறளைப்பற்று வடக்கு வாகரை மக்கள் விரும்புகின்றார்கள். அதில் விட்டுக்கொடுப்பிற்கு தயார் இல்லை. அதே நேரத்தில் கோறளைப்பற்று தெற்கிற்குள் இருக்கின்ற ஊாத்துச்சேனை, வடமுனை, கல்லிச்சை, புனான மேற்கு வாகனேரி போன்ற பகுதிகளை விட்டுக்கொடுப்பதற்கும் நாங்கள் தயார் இல்லை காரணம் இதனை அந்த மக்களும் விரும்பப்போவதில்லை அந்த நிர்வாகம் வழமையைப்போன்று நடந்துகொள்ளுகின்றது ஆகவே இது தூரநோக்கோடு பொய்யான தகவல்களை பாராளுமன்றிலும் வெளியிலும் கூறி இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வதை நாங்கள் அனுமதிக்கமாட்டோம்.

தொடரும்...



# உலக பார்வை



## உலகின் மிக நீண்ட பொதுமுடக்கம்...

உலகின் மிக நீண்ட பொதுமுடக்கம் அமலில் இருந்து வந்த உகாண்டாவில் அது நிறைவு பெற்று, திங்கள் முதல் பாடசாலைகள் திறக்கப்பட்டு, மாணவர்கள் பாடசாலைக்கு வரவழைக்கப்பட்டனர்.

வெகு மாதங்களுக்குப்பிறகு பாடசாலைகள் திறக்கப்பட்டதால் பல பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. கம்பாலா உள்ளிட்ட நகரப் பகுதிகளில் சாலைகளில் பாடசாலைகள் மாணவர்கள் செல்லும் காட்சிகளைக் காண முடிந்தது.

கொரோனா பொதுமுடக்கம் காரணமாக, சுமார் இரண்டு ஆண்டுகளாக உகாண்டாவில் பாடசாலைகள் திறக்கப்படவேயில்லை.

உலகிலேயே மிக நீண்ட பொதுமுடக்கமாக இது பார்க்கப்படுகிறது. அதாவது, உகாண்டாவில் கடந்த 83 வாரங்களாக பாடசாலைகள் திறக்கப்படவில்லை. இதனால் சுமார் பல லட்சம் மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டது.

## அமெரிக்கா வெளியிட்ட அரிய வகை நாணயம்




அமெரிக்க வரலாற்றில் முதல்முறையாக கறுப்பினப் பெண் உருவம் பொறிக்கப்பட்ட நாணயம் வெளியிடப்பட்டுள்ளது.

பிரபல எழுத்தாளரும் பெண்ணிய ஆர்வலருமான மாயா ஏஞ்சலோ தனது சுயசரிதையால் பிரபலமானவர். அமெரிக்காவில் கணிசமான சர்ச்சையை ஏற்படுத்திய அந்தப் புத்தகத்தில், சிறு வயதில் தான் அனுபவித்த பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் அதன் தாக்கம் குறித்து விரிவாக எழுதியிருந்தார்.

அவர் 2014 இல் தனது 86 வயதில் உயிரிழந்தார். இதற்கிடையில், மாயா ஏஞ்சலோவின் நினைவாக தற்போது கால் டொலர் மதிப்புள்ள நாணயங்கள் வெளியிடப்படுகின்றன.

## மனித குலத்திற்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டமைக்காக சிரிய இராணுவஅதிகாரிக்கு ஆயுள்தண்டனை - ஜேர்மனிநீதிமன்றம் வரலாற்று தீர்ப்பு

மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டமைக்காக சிரியாவின் இராணுவ அதிகாரியொருவருக்கு ஜேர்மன் நீதிமன்றம் ஆயுள்தண்டனையை வழங்கியுள்ளது. சிரியாவின் பூமியில் நரகம் என அழைக்கப்படும் சிறையில் 4000க்கும் அதிகமானவர்களை சித்திரவதை செய்த குற்றத்திற்காக அன்வர் ரஸ்லான் என்ற இராணுவ அதிகாரிக்கு ஜேர்மனி நீதிமன்றம் ஆயுள்தண்டனையை வழங்கியுள்ளது. சிரியாவில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட சித்திரவதைகளிற்கு எதிரான முதலாவது வழக்கு இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனியில் அரசியல் புகலிடம் கோரியிருந்த ரஸ்லான் 2019 இல் கைதுசெய்யப்பட்டார்.அவர் தனக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிராகரித்திருந்ததுடன் கைதிகள் மோசமாக சித்திரவதை செய்யப்பட்டமைக்கும் தனக்கும் எந்த தொடர்புமில்லை என தெரிவித்திருந்தார். தடுத்துவைக்கப்பட்டிருந்தவர்களிற்கு உதவும் முயற்சியில் ஈடுபட்டதாக அவர் தெரிவித்திருந்தார். அவருக்கு எதிரான விசாரணை பல காரணங்களிற்காக மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்பட்டது. சிரிய அரசாங்கத்தின் சித்திரவதைகளை விசாரணைக்கு உட்படுத்தியதில் அது முன்னர் ஒருபோதும் இடம்பெறாததாக காணப்பட்டது. தங்கள் நாட்டிலிருந்து தப்பிவெளியேறிய ஆயிரக்கணக்கான சிரியர்கள் காரணமாகவே இது சாத்தியமானது.

ஜேர்மனியில் வசிக்கும் 800.000 சிரிய மக்கள் அசாத்தினை எதிர்த்தவர்களிற்கு என்ன நடந்தது என் துயரமும் வலியும் வேதனையும் நிறைந்த கதைகளை கொண்டுவந்தனர். ஜேர்மனியின் நீதிதுறையினர் சர்வதேச நியாயாதிக்க எல்லையை பயன்படுத்தி நீதி வழங்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். சர்வதேச நியாயாதிக்க எல்லை ஒரு நாட்டில் மேற்கொள்ளப்பட்ட பாரிய அநீதிகள் குறித்து மற்றுமொரு நாட்டில் விசாரணைகளை மேற்கொள்ள அனுமதிக்கின்றது. ரஸ்லானிற்கு எதிராக 58 கொலைக்குற்றச்சாட்டுகளும் பாலியல்வன்முறை மற்றும் தாக்குதல் குற்றச்சாட்டுகளும்2011 முதல் 2012 முதல் 4000 பேரை சித்திரவதை குற்றச்சாட்டுகளும் சுமத்தப்பட்டன. அல் கட்டிப் சிறைச்சாலையிலிருந்து தப்பியவர்களிற்கும் சாட்சியங்களை அளித்தவர்களிற்கும் இந்த தீர்ப்பு மிகவும் முக்கியமானது. இந்த தீர்ப்பின் மூலம் சிரியா அரசாங்கம் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டது என்பதை குற்றவியல் நீதிமன்றம் ஏற்றுக்கொணடுள்ளது.





## 9 குழந்தைகள் உட்பட 19 பேர் உடல் கருகி உயிரிழப்பு!

நியுயோர்க் நகரில் பிரான்க்ஸ் என்ற அடுக்குமாடி குடியிருப்பு அமைந்துள்ளது. இதில் 19 மாடிகள் இருந்துள்ளது.

இந்த கட்டிடத்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம் தளத்தில் இருந்து கரும்புகை வெளியேறியுள்ளது. இதனை அடுத்து தீயணைப்புத் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகவல் கிடைத்த சில நிமிடங்களில் 200 க்கும் மேற்பட்ட தீயணைப்புத் துறை வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

எனினும் கரும்புகை அதிக அளவில் இருந்ததாலும் தீயை அணைப்பது சிரமமாக இருந்துள்ளது. கடும் போராட்டத்துக்கு பின்னர் தீயை அணைத்துள்ளனர்.

இந்த தீவிபத்தில் 9 குழந்தைகள் உட்பட 19 பேர் உடல் கருகி உயிரிழந்தனர். மேலும், 32 பேர் மீட்கப்பட்டு அருகிலுள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு உள்ளனர் என தீயணைப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

## கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களை இரும்பு பெட்டி முகாம்களில் அடைத்து வரும் சீனா!





உலகையே உலுக்கி வரும் கொரோனா தொற்றின் பிறப்பிடம் என கூறப்படும் சீன தேசத்தில் கொரோனா தொற்றால் தற்போது பாதிக்கப்பட்டு வரும் மக்களை உயிரோடு இரும்பு பெட்டிக்குள் வைத்து முகாம்களில் தனிமைப்படுத்தப்பட்டு வருகின்றனர். அது தொடர்பான வீடியோ காட்சிகள் சமூக வலைதளங்களில் வெளியாகி அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளது.

எல்லைகளை மூடுவது, பரவலாக கொரோனா பரிசோதனை மேற்கொள்வது, ஊரடங்கு மாதிரியான நடைமுறைகள் ஆரம்ப நாட்களில் சீன அரசுக்கு பலன் கொடுத்திருந்தாலும் தற்போது அங்கு நிலைமை கைமீறி சென்றுவிட்டதாக சொல்லப்படுகிறது. அதிகளவிலான மக்கள் தொற்று பாதிப்பு ஆளாகி வருகின்றனர் என சொல்லப்பட்டுள்ளது. அதுவும் குளிர்கால ஒலிம்பிக் தொடர் அங்கு தொடங்க சில வாரங்கள் மட்டுமே எஞ்சியுள்ள நிலையில் அரசுக்கு பெரிய தலைவலியாக இது அமைந்துள்ளது.

ஆயிரக்கணக்கான மக்கள் கொரோனா முகாம்களில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக உள்ளூர் மக்கள் தெரிவித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. கர்ப்பிணி பெண்கள், குழந்தைகள், மூத்த குடிமக்கள் என எந்தவித பாரபட்சமும் இல்லாமல் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் 15 நாட்கள் வரை வலுக்கட்டாயமாக தங்கவைக்கப்பட்டு வருவதாக சொல்லப்பட்டுள்ளது.

அதுவும் சிறிய அளவிலான இரும்பு பெட்டிக்குள் அவர்கள் அடைக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. அதோடு 20 மில்லியன் மக்கள் அவர்களது வீடுகளில் முடங்கி இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. உணவு வாங்கக்கூட அவர்கள் வெளியே செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாம். அங்குள்ள Anyang,Xi'an பகுதியில் கட்டுப்பாடுகள் அதிகம் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உ.பி., தேர்தல் உன்னாவ் பாலியல் வன்கொடுமையில் பாதிக்கப்பட்டவரின் தாய் காங்கிரஸ் வேட்பாளராக அறிவிப்பு

உத்தரபிரதேச சட்டசபை தேர்தலில் 50 பெண்களை உள்ளடக்கிய 125 வேட்பாளர்கள் கொண்ட முதல் பட்டியலை காங்கிரஸ் கட்சி வியாழக்கிழமை வெளியிட்டுள்ளது.

காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர்களில் உன்னாவ் கற்பழிப்பு சம்பவத்தில் பாதிக்கப்பட்டவரின் தாய் ஆஷா சிங் மற்றும் சோன்பத்ராவில் உள்ள உம்பா கிராமத்தில் நிலம் தொடர்பான கோண்ட் பழங்குடியினரின் சட்டப் போராட்டத்தை முன்னெடுத்த ராம்ராஜ் கோண்ட் ஆகியோர் அடங்குவர்ராம்ராஜ் கோண்ட் தற்போது, சோன்பத்ரா மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக உள்ளார்.

மற்ற வேட்பாளர்களில் கடந்த ஆண்டு நவம்பரில் ஷாஜஹான்பூரில் உ.பி முதல்வர் யோகி ஆதித்யநாத்தை சந்திக்க முயன்றபோது காவல்துறையினரால் கடுமையாக தாக்கப்பட்டதாகக் கூறப்படும் ஆஷா தொழிலாளி பூனம் பாண்டே மற்றும் CAA எதிர்ப்பு போராட்டம் தொடர்பாக சிறையில் இருந்த காங்கிரஸ் தலைவர் சதாப் ஜாபர் ஆகியோர் அடங்குவர்.

மொத்தமுள்ள 125 வேட்பாளர்களில் 40 சதவீதம் பேர் பெண்கள் மற்றும் 40 சதவீதம் பேர் இளைஞர்கள். "இந்த வரலாற்று முயற்சியின் மூலம், மாநிலத்தில் ஒரு புதிய அரசியலை கொண்டு வருவோம் என்று நம்புகிறோம்," என்று காங்கிரஸ் தலைவர் பிரியங்கா காந்தி ஒரு காணொலி வாயிலான செய்தியாளர் கூட்டத்தில் கூறினார்.உ.பி.யில் பிப்ரவரி 10 முதல் மார்ச் 7 வரை 7 கட்டங்களாக தேர்தல் நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது

























இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 16.01.2022 அன்று வெளியிடப்பட்டது.